*திரு. என். வி. நடாசன்: கனம் தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் மின்சார விநியோகத்தைப் பற்றியும் அந்தத் திட்டத்தின் வளர்ச்சியைப் பற்றியும் மிகப் பெருமையாக சர்க்கார் தரப்பிலே பேசப் பட்டு வருவதை நாம் அனைவரும் அறிவோம். கனம் தொழில் அமைச்சர் அவர்களுடைய திறமையைப் பற்றியும், மின்சார போர்டினுடைய பிரதம எஞ்சினீயர், அதிலே உள்ள இப்பந்திகள், தலைவர் உள்ளிட்ட அனைவருடைய திறமையைப் பற்றியும் நமது மாநிலம் பெருமைப்பட வேண்டும் என்று சொன்னால், அது மிகையாகாது. ஆனால் அவ்விதத் திறமையும் பெருமையும் படைத்த தொழில் அமைச்சரும் அந்த சிறப்பான தலைவரைக் கொண்ட போர்டும் உள்ள நமது மாநிலத்தில் இன்னும் மின்சார சப்ளை பற்றாக்குறையாக இருந்து வருவதை நாம் மறந்து விடுவதற்கில்லை. ஆண்டு தோறும் பருவ மழை தவறி விட்டால் நாம் என்ன செய்வது என்று எடுத்துக் காட்டப்படுகிறது.

அதைப்பற்றி யாரும் குறை கூறுவதற்கில்லை. ஆனால் நான் தொழில் அமைச்சர் அவர்களை வணக்கத்துடன் கேட்டுக் கொள்ளுவேன். ஆண்டு தோறும் நமக்கு இவ்விதமான பெரிய நெருக்கடி ஏற்படுகிறபடியால், சரியான, திட்ட வட்டமான நல்ல அமைப்போடு, அந்தப் பற்றாக்குறை ஏற்படாமலும், அதன் காரணமாக ஆண்டு தோறும் தொழில் துறையினருக்கும், அந்தத் தொழிலே

20th July 1964] [திரு. என். வி. நடாசன்]

சம்பந்தப்பட்டுள்ள பல்லாயிரக் கணக்கான தொழிலாளர் களுக்கும் பெருத்த நஷ்டம் ஏற்படாமல், அதனால் நமது நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு நஷ்டம் ஏற்படாமல் தடுக்க அவர்கள் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இந்த நேரத்தில் நினைவூட்ட ஆசைப்படுகிறேன். அதே நேரத்தில் நமது சர்க்கார் இந்த மின்சார சப்ளை குறித்து மேற்கொள்ளும் திட்டங் களுக்கு மத்திய சர்க்கார் எந்த அளவுக்குத் துணை புரிந்து வரு கிறார்கள் என்பதை, சென்ற காலங்களில் நமது சர்க்கார் மேற் கொண்ட திட்டங்களுக்கு அவர்கள் அளித்து வரும் உதவியைக் கொண்டு, அதில் அவர்கள் காட்டும் மந்தப் போக்கிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அதனால் நாம் அணைகட்ட வேண்டும் என்றால், அப்படிப்பட்ட பெரிய நதிகள் எங்கே இருக்கின்றன என்று கேட்கிறார்கள். கனரகத் தொழில்கள் அமைக்க வேண்டு மென்றால் அதற்கு மூலப்பொருள்கள் எங்கே இருக்கின்றன என்று கேட்கிறார்கள். ஆனால், அப்படிச் சொல்லி தட்டிக் கழிக்கப்படும் அந்த நிலையில், மின்சார சப்ளைக்காகிலும் மத்திய சர்க்கார், மத்திய சர்க்கார் தொடர்பில் உள்ள திட்டக்குழு, நமது மாநில சர்க்காரின் திட்டங்களுக்குப் போதிய உதவிகளைச் செய்யுமாறு, நமது சர்க்கார் மத்திய அரசை வற்புறுத்த வேண்டும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அது போலவே, இன்னும் நம் மாநிலத்தில் பல கிராமங்களில் மின்சார சப்ளை இல்லாமலிருப்பதை அமைச்சர் அவர்கள் உணர்ந் திருப்பார்கள் என்று நம்புகிறேன். அந்த நிலைமையும் விரைவிலே நீங்க வேண்டும். என்னூரிலேயும் அதைப் போல் தூத்துக்குடி யிலேயும் தெர்மல் ஸ்டேஷன் வைத்து அதன் மூலமாக மின்சார அபிவிருத்தி செய்யும் திட்டங்களை அந்த இரண்டு நகரங்களில் மட்டுமல்லாமல் மற்றும் பல நகரங்களிலும் மேற்கொள்ள வேண்டும். அதற்கெல்லாம் சிறப்பாக கல்பாக்கம் அணுசக்தி மின் சாரத் திட்டத்தைத் துரிதமாக நிறைவேற்ற வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மற்றொன்று சாதாரணமாக ஒரு விளக்கு வைத்துக்கொண்டுள்ள 1-30 p.m. ஏழை எளியவர்களுக்கு அதிகமான கட்டணம் விதிக்கப்பட்டு வரு கிறது; ஆனால் ஒன்றுக்கு மேற்பட்ட மின்சார விளக்குகளை வைத்துள்ளவர்களுக்கு அந்தக் கட்டணம் குறைவாக இருந்து வருகிறது என்பதை நாம் அறிவோம். ஜனநாயக சோஷலிசம் பரவலாகப் பேசப்பட்டும். அது வெற்றி பெற வேண்டுமென்ற நோக்கமாக எண்ணப்பட்டும் வரும் இந்த நாளில் இந்த மட்டத்தி லுள்ள ஏழை எளியவர்கள் இந்த மின்சார சக்தியைப் பயன் படுத்திக் கொள்ளுவதற்கு அதிகமான கட்டணம் இல்லாமல், அதைக் குறைப்பதற்கு சர்க்கார் திட்டவட்டமான முறைகளை மேற் கொள்ள வேண்டும். அப்படிச் சொல்லுவதால் ஒன்றுக்கு மேற் பட்ட விளக்குகளை, மின்சார சம்பந்தமான மற்ற சாதனங்களைப் பயன்படுத்துபவர்களுக்கு அதிகமாக கட்டணத்தை விதிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. வேண்டுமென்றால், ஏன்று

[திரு. என். வி. நடராசன்] [20th July 1964

எளியவர்கள் எந்த அளவுக்குக் கட்டணத்தைக் குறைத்துப் பெறுகிறார்களோ அந்த அளவுக்கு அவர்களும் பயன்படுத்திக் கொள்ளுவதில் ஆட்சேபணையில்லை. ஆதலினால் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் இதைக் கவனிக்க வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

ஆரம்பத்திலே இங்கே நான் சொன்னதைப்போல், நல்ல திறமையுள்ள தொழிலமைச்சரும் அதைப்போல் திறமையுள்ள சிப்பந்திகளும் தலைவரும் இருக்கிற மின்சார போர்டு உள்ள நம் நாட்டில், இந்த பற்றாக்குறை என்ற நிலை நீங்க வேண்டும். குறிப்பாக அந்தக் கட்டணம் குறைக்கப்பட வேண்டும். அதைப்போல் ஏழை எளியவர்களுக்கும் விவசாயிகளுக்கும் மின்சார வசதியை அதிகமாகக் கொடுக்க பயனுள்ள திட்டங்களை வகுக்க வேண்டும் என்று தெரிவித்துக்கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: கனம் தலைவர் அவர்களே மின்சார போர்டின் நிதி அறிக்கை குறித்து விவாதம் நடக்கும் சமயத்தில், இந்த மின்சார போர்டு போகவேண்டும், இதை சர்க்கார் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று இங்கே காரசாரமாகப் பேசப்பட்டதாகவும், அதற்கு மேல் மந்திரியார் ஒருவர் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது, இந்த மின்சார போர்டை எடுத்துவிட வேண்டும் என்று மனு ஒன்று வாசித்துக் கொடுக்கும் போது கைதட்டினார் என்றும் சொன்னதாகக் கேள்விப்பட்டேன். அவர் எந்த முறையில் கைதட்டினார், இதில் ஆச்சரியப்பட்டு கைதட்டினாரா, அங்கீகாரம் கொடுத்து கைதட்டினாரா என்று தெரியவில்லை. நம்முடைய மாநிலத்தில் மின்சார போர்டு எல்லோரும் பெருமைப்படக்கூடிய முறையில் இயங்கி வருவதாக நாம் ஒப்புக் கொள்ளலாம். மற்ற எல்லா நிர்வாகத்தையும்விட, இதிலே மிகவும் உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் வேலைகள் நடந்து வருகின்றன. நல்ல முறையில் இயங்கி வருகிறது என்பதை மேல் தளத்தில் உள்ளவர்களே ஒப்புக் கொள்கிறார்கள். ஆனால் கிராமங்களில் கூட, இது எல்லோருடைய வாழ்நாளிலேயும் உணவைவிட மிக அத்தியாவசியமான காரியமாகிவிட்டபடியால், ஒரு சின்ன தப்பு நிகழ்ந்தாலும்கூட, அது பெரியதாக மனதில் தோன்றுகிறது. சாதாரணமாக ஒரு விஷயத்தைச் சொல்ல ஆசைப்படுகிறேன். சுச்சைப் போடுகிறானே அவன் சாதாரண ஜனியன். அவன் எங்கே எதை எடுத்துக் கொண்டு போகிறான்? சப்ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் போலீஸ்கூட ஏதாவது கொடுத்தால்தான் முன்னால் தள்ளி வைக்கிறான். சட்டசபை மெம்பர் ஹால்டலில்கூட காசு கொடுக்கால்தான் காப்பி சீக்கிரம் கிடைக்கும். 200, 300 என்று கொடுத்துக் கொண்டு அசோகா ஹோட்டலில் போய் இருக்கிறவர்கள் கூட ஏதாவது கொடுத்தால்தான் காப்பி கிடைப்பதாகச் சொல்கிறார்கள். அந்த மாதிரி நேரத்தில், நமக்கு சொம்ப கஷ்டம் வருகிறபடியால், தேவை ஜாஸ்தி இருக்கிறபடியால், ஜனங்களிடத்திலே சொம்ப ஆவல் ஏற்படுகிறது. ஜாஸ்தி ஜனங்கள் உபயோகப்

20th July 1964] [திரு. எஸ். ஜெயராம செட்டியார்]

படுத்துகிறார்கள். கிராமத்தில் இருக்கிறவர்கள் அதிகமாகப் பாதிக்கப்படுகிற காரணத்தால் இதிலே சொம்ப மனக்கஷ்டப்படுகிறார்கள். அந்த ஒரு விஷயத்தில் மட்டும் எலக்ட்ரிசிடி போர்டு கொஞ்சம் முயற்சி எடுத்துக்கொண்டால் நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன். சொம்ப ஆவலாகி வருகிறது. இதைக் கொஞ்சம் ஜாக்கிரதையாகக் கவனித்தால் ஜனங்களுக்குத் திருப்தி காமாயிருக்கும். உதாரணத்திற்குச் சொல்கிறேன். அருப்புக் கோட்டையில் முன்னாள் முதலமைச்சர் அவர்கள் ஒரு விழாவுக்கு தலைமை ஏற்க வந்திருந்தார்கள். ஆயிரக் கணக்கான ரூபாய் செலவில் பெரிய விழாவாக ஏற்பாடு செய்திருந்தார்கள். திடீரென்று மின்சாரம் தடைப்பட்டுப் போய்விட்டது, அரை மணி நேரம் வரை வரவில்லை. அவருக்குக் கோபம் வந்து function -ஐ விட்டு விட்டு இன்னொரு இடத்துக்குப் போய் விட்டார்கள். அந்த மாதிரி சம்பவங்கள் ஏற்படாமல் செய்ய வேண்டும்.

ஜெனரேட்டர் வைக்கலாம் என்று சொல்லுகிறார்கள். தொழிலதிபர் பொன்னுசாமி செட்டியார் அவர்கள் இருக்கிறார்கள். எனக்கும் மில்காரர்களுக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. ஜெனரேட்டர் வைப்பது என்பது அவ்வளவு லேசுப்பட்ட காரியம் அல்ல. அதற்குச் செலவு எவ்வளவு ஆகும்? எவ்வளவு foreign exchange ஆகும்? எல்லா மில்களிலும் வைத்தால் எவ்வளவு ஆகும்? 12,000 கதிர் இருக்கிற மில்லுக்கு எவ்வளவு ஜெனரேட்டர் வேண்டும்? 15 நாள் வைக்கிறதற்காக, இலட்சக் கணக்கில் செலவழித்து வாங்கி வைக்க முடியுமா? வட்டி எப்படி Work பண்ணும்? இதையெல்லாம் பாங்கி சம்பந்தப்பட்ட திரு. பாலசுப்ரமணியய்யர் அவர்களும், மில் சம்பந்தப்பட்ட திரு. பொன்னுசாமி செட்டியார் அவர்களும்தான் கவனிக்க வேண்டும். Industries, Agricultural Department-ல் கொடுப்பதுபோல் Electricity Department -ல் வாங்கி வைத்துக்கொண்டு 15 நாளுக்கு வாடகைக்குக் கொடுத்தால் வாங்கிக் கொள்வார்கள். அதனால் அதற்குப் பதிலாக, இவ்வளவு ரூபாய் செலவழித்து வைப்பதற்குப் பதிலாக, அனல் மின்சாரத் திட்டத்தில் எவ்வளவோ வருகிறது என்று சொல்கிறார்கள். 15 நாளுக்கு நஷ்டம் என்று சொல்லுகிறார்கள். 6 கோடி ரூபாய் வட்டி கொடுப்பதைப்பற்றிக் கவலைப்படுகிறீர்கள், இன்னும் எவ்வளவு கோடி ரூபாய் வட்டி கொடுக்கவேண்டும் என்று இந்தமாதிரி சொல்கிறீர்கள் என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

வருஷா வருஷம் ஜாஸ்தி வந்தாலும் கான்ட் தட்டுப்பாடு 15 நாள் அல்லது 20 நாள் வருகிறது. அதனால் புரொடக்ஷன் எவ்வளவு குறைகிறது என்பதுபற்றி சிந்தனை செய்து பணம் சம்பந்தமான காரியங்களில் ஈடுபட்டிருப்பவர்கள் சிந்திக்க வேண்டும். 'பாரின் எக்சேஞ்' சம்பந்தமாக எவ்வளவு வேண்டியிருக்கும் என்பதுபற்றி அமைச்சர் அவர்கள் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதுபற்றி, சபையில் அடிக்கடி பேசப்படுகிறது. அதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டு

மென்று ஆசைப்படுகிறேன். நாங்கள் எலலாம் விவசாயிகள். திரு. வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் சொன்னதுபோல் பகலில் கான்ட் கொடுக்க வேண்டுமென்று. தப்பான அபிப்ராயம் பிடுசை பிடுங்குகிறார்கள் என்பது. நிலக்கடலை அரைக்கிற மெஷின் இருக்கிறது. ஜின்னிங் பேக்டரி இருக்கிறது. நான் வைத்திருக் கிறேன். ராத்திரியில் பொறுத்து அரைத்தால் கெடுவது இல்லை. ஆயில் எக்ஸ்பல்லர் ராத்திரி ஓடுவதால் கெட்டுப் போகிறது இல்லை. ஆனால் அவர்களுக்குப் பகலில் கொடுத்து விட்டு விவசாயிகளுக்கு இரவில் பார்த்துக்கொள்ளுங்கள் என்றால் தண்ணீர் பாய்ச்ச டார்ச் லைட் வைத்துக்கொள்ள வேண்டும். இதனால் கிராம மக்களிடம் அதிருப்தி ஏற்படும். சினிமா கொட்டகை ஓடுகிறது, எத்தனை வோல்ட்டேஜ் என்பது கிராம மக்களுக்குத் தெரிகிறது இல்லை. ஒரு பிரகாசமான லேட்டைப் பார்த்தவுடன் பார் சினிமா கொட்டகைக்காரனுக்குக் கொடுத்து விட்டான், நமக்குக் கொடுக்க வில்லை என்றுதான் ஜனங்கள் பேசுகிறார்கள். அதை எல்லாம் பகலில் விவசாயிகளுக்குக் கொடுத்தால் என்ன என்று சிந்திக்க வேண்டும். இதைத் தவிர்ப்பதற்கு வழிவகை என்ன இருக்கிறது என்று எலக்டிரிசிடி போர்டு யோசிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேயர்ஸ் பம்பு செட் பற்றி மந்திரி அவர்கள் பிரஸ்தாபித்தார்கள். இப்போது நமது நிலம் ரயத்வாரி நிலம். ஜமீன் சிஸ்டம் இருந்தது. அது எல்லாம் "அபாலிஷ்" ஆகி எல்லாம் ரயத்வாரி சிஸ்டம் ஆகி இருக்கிறது. பழைய ஜமீன் கிராமங்களில் கலெக்ஷன் இல்லை என்று மந்திரி அவர்களே அறிக்கையில் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். என்ன சிஸ்டம் இருந்தாலும் Under developed areas இருக்கின்றன. திரு. ராஜா அய்யர் அவர்கள் பிரதேசம் பரமக்குடி கட்டுப்பாடு ஆகாத இடம். அங்கு கவனம் இருந்தால்தான் லாப நஷ்டக் கணக்கு பார்க்காத படி அவர்கள் ஏற்பாடு செய்வார்கள். அந்த இடங்களை எல்லாம் சீக்கிரமாக எடுத்து உதவிபுரியும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். ஹோகனகல் பிராஜக்ட்பற்றி நம்முடைய நண்பர் பேசினார். அவர் கன்னடக்காரர் என்று நினைக்கிறேன். மந்திரி போவதற்கு பதில் அவரே போய் நானும் நீயும் ஒன்றுதான், நீ விட்டுக்கொடு என்று ஏற்பாடு பண்ணினால், நாம் எல்லாம் அவருக்கு நமஸ்காரம் போடலாம். அவரே அந்த வேலையைச் செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

4-40 p.m. மொத்தத்தில் இந்த நிர்வாகமானது நல்ல முறையில் நடக்கிறது. நல்ல விவரம் தெரிந்த திரு. நியாகாஜன், "என்ன ஐயா எலக்டிரிசிடி போர்டு? அதை எடுத்துவிட வேண்டும்" என்கிறார். ஆனால் அது All India Act படி வந்தது, எப்படி முடியும் என்கிறார். அப்போது நான் கூட சொன்னேன் எந்தச் சட்டமானாலும், நன்மை பயக்கக் கூடியதாக இருந்தால் நாம் சொல்லலாம் என்றேன். எலக்டிரிசிடி போர்டு வந்த பிறகு கெடுதல் இருப்பதாகத் தெரியவில்லை. அதை எடுப்பதுபற்றிப் பேசாமல், நிர்வாகத்தைத் திறம்பட நடத்துவதற்கு ஏதாவது

வழிவகை சொல்லி, நம் காரியங்களை முடித்துக் கொள்ளலாம் என்று சொல்லிக்கொண்டு, நிர்வாக இயந்திரம் கீழ் மட்டத்தில் திறமையாக நடக்க தலைமை அதிகாரிகள் நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

*திரு. கே. சம்பந்தன் கனம் தலைவர் அவர்களே, மின்சார பட்ஜெட்டின் கீழ் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். பேசியவர்கள் அனைவரும் மின்சார குழுவைப்பற்றியும் அதற்குத் தலைமை தாங்கும் தலைவரைப்பற்றியும் அதை நடத்திச் செல்லும் தொழில் அமைச்சர் அவர்களைப்பற்றியும் அரசாங் கத்தைப்பற்றியும் பாராட்டினார்கள். இவர்கள் அனைவரையும் பாராட்டிக்கொண்டே போகலாம் என்ற நிலைமைதான் இந்த நாட்டிலே மின்சாரம் சம்பந்தப்பட்ட வரையில் நிலைத்து இருக்கிறது என்பதை நாட்டு மக்கள் அனைவரும் அறிவர். அதற்கு முக்கிய காரணமாக இருந்து வருகிறவர் மின்சாரக் குழுவின் தலைவர் அவர்களே. இன்னும் எந்த அளவுக்கு வேண்டு மென்றாலும், யார் வேண்டுமென்றாலும் பாராட்டலாம் என்ற நிலை நம் முன் இருந்ததால் அமைச்சர் சொல்லியது போல் உலகம் பூராவும் பாராட்டுகிற ஒருவராக இருக்கிறார் என்பதைக்கண்டு நாம் மகிழ்ச்சி கொண்டோம். அவருக்கும் அந்தக் குழுவில் இருக்கிற மற்ற உறுப்பினர்களுக்கும் அந்தக் குழுவினர் மற்ற அலுவலர்களுக்கும் பாராட்டுதலை மக்களின் சார்பில் தெரிவித்துக் கொள்ளுகிறேன். நாம் எவ்வளவு முன்னேறியிருக்கிறோம் என்றால் போடுகிற திட்ட இலக்கைக் காட்டிலும் திட்ட காலத்தைக் காட்டிலும் அதிக அளவில் அதிக விரைவில் தாண்டிக்கொண்டு இருக்கிறோம் என்று அமைச்சர் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட் டிருக்கிறார்கள். அது மிகவும் மகிழ்ச்சியான செய்தி. இது மாதிரி வேறு எந்தத் துறையிலும் காலத்திற்கு முன்னால் காரியம் நிறை வேறியது கிடையாது என்பதை சொல்லிக் கொள்ள ஆசைப்படு கிறேன்.

இருந்தபோதிலும் அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது போல தேவை அதிகம் ஆகிக்கொண்டே இருக்கிறது. மின்சாரம் நமக்கு எந்த அளவுக்குத் தேவைப்படும் என்பதை அரசாங்கம் முன்கூட்டியே கணித்து இருக்க வேண்டும் என்று எண்ணுகிறேன். அந்தக் கணக்கில் தவறு ஏற்பட்டிருக்குமோ என்று அஞ்சுகிறேன். அதாவது திட்டம் தீட்டியதில் எதாவது குறை இருந்து இருக்கக் கூடுமோ? அதில் குறைந்த அளவு இருக்கலாம் என்று மதிப்பிட்டு அதிகமான அளவுக்கு தேவைப்படுகிறது என்பது ஏற்பட்டிருக் கிறதோ என்பதாக நான் அஞ்சுகிறேன். அது மாதிரி திட்டக் குறைவு இருந்தால், இனி வரப்போகும் திட்டங்களில் அதிகமான தேவையை எதிர்பார்த்து அதற்கான திட்டங்களைத் தயாரிக்க ஆவன செய்ய வேண்டுமென அமைச்சர் அவர்களைக் கேட்டுக்

ளாள்கிறேன். அதிலும் குறிப்பாக நாம் பெரிதும் நதிகளையே ம்பியிருக்கிறோம் என்பதை மின்சாரக் கட்டுப்பாடு எடுத்துக் ாட்டியிருக்கிறது. அமைச்சர் அவர்கள் இரண்டு மூன்று ஆண்டு ளுக்கு முன் திரும்பத் திரும்ப எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். மக்கு நதியிலிருந்து கிடைக்கக் கூடிய மின்சாரத்தை எல்லாம் ட்டத்தட்ட பூராவையும் உபயோகித்து விட்டோம் என்று சால்லியிருந்தும்கூட, முன் கூட்டியே நமக்குத் தேவையான, ாட்டு சூழ் நிலைக்கேற்றபடி சாதனங்களை ஏற்படுத்துவதில் தாமதம் ற்படுத்துவதற்குக் காரணம் என்ன என்று புரிந்துகொள்ள டியவில்லை. பல ஆண்டுகளாக நமது தொழில் அமைச்சர் மின் ாரத் துறை சம்பந்தமாக கல்பாக்கத்தில் அடாமிக் பவர் ஸ்டே ன் வந்துகொண்டிருக்கிறது, இதோ வந்து விட்டது என்று சால்லி வருகிறார்கள். இன்னும் அது எந்த அளவிலே இருக்கிறது என்பதைக்கூட சாதாரண மக்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்கள் புரிந்துகொள்ள முடியாமல் இன்னும் ஏமாற்றமாக இருக்கிறது. சமீபத்தில் ஒரு சில வாரங்களுக்கு முன்னால் சென்னைக்கு விஜயம் செய்த அடாமிக் கமிஷன் தலைவர் பேச்சு ஏமாற்றத்தைக் கொடுத்துவிட்டது என்பதை அமைச்சர் அவர்களுக்கு ஞாபகப்படுத்த ஆசைப்படுகிறேன். அப்படி அவர்கள் என்ன பேசியிருக்கிறார்கள் என்றால் கல்பாக்கத்தில் அடாமிக் பவர் ஸ்டேஷன் ஏற்படுத்துவதுபற்றி' எந்தவிதமான முடிவும் இன்னும் ஏற்படவில்லை என்றும் எந்த முடிவுக்கும் வர வில்லை என்றும் சொன்னார். இப்படி ஒரு தலைவர் சொல்லியிருக்கிறார் கள் என்று சொன்னால், இங்கு அமைச்சர் அவர்களும் மற்றவர் களும் அடாமிக் ஸ்டேஷன் நாளைக்கு வந்து விடுகிறது, மக்களுக்கு எந்த விதமான குறையும் இருக்காது என்று சொல்லுகிற நேரத் தில் அப்பேர்பட்ட ஒரு அறிக்கை வருகிறது என்று சொன்னால், தமிழ்நாட்டு மக்கள் எவ்வளவு ஏமாற்றம் அடைகிறார்கள் என்பதை அமைச்சர் அவர்கள் உணர்வார்கள் என்று எண்ணுகிறேன். அது மாதிரி ஏமாற்றத்தை இனியும் தமிழ் நாட்டு மக்கள் அடையாமல் அந்த கல்பாக்கம் அடாமிக் ஸ்டேஷன் ஏற்படுத்துவதை எவ்வளவு துரிதப்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு துரிதப்படுத்த முயல வேண்டும். அடாமிக் ஸ்டேஷனைத் தவிர வேறு கதி தமிழ் நாட்டுக்கு இல்லை என்ற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அனல் மின்சார நிலையம் பற்றிப் பேசினார்கள். அதை ஓரளவுக்கு தமிழ் நாட்டில் ஏற்படுத்த முடியும். நெய்வேலி லிக்னைட் கிடைக்கிற அளவுக்கு உபயோகப்படுத்தக் கூடிய அளவு அனல் மின்சார நிலையங்களை விரிவுபடுத்திக் கொண்டு போகலாம். வடநாட்டி லிருந்து முக்கியமாக கல்கத்தா, ஓரிசாவிலிருந்து மற்றும் பிற பகுதிகளிலிருந்து நாம் நிலக்கரியை வரவழைத்து அங்கு அனல் மின்சாரத்தை உற்பத்திசெய்து உபயோகிக்க முடியாது போனால் அதனால் ஏற்படும் பெரும் செலவைக் கணக்கெடுத்தால், அடாமிக் பவர்ஸ் ஸ்டேஷனைத் தவிர தமிழ் நாட்டுக்கு வேறு கதி இல்லை என்று அமைச்சர் உணருவார்கள். ஆகவே, அடாமிக் ஸ்டேஷனை

விரைவில் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட கால அளவுக்குள் கொண்டுவர ஏற்பாடு செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களை இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன்.

மற்றும் என்னாரிலும், தூத்துக்குடியிலும் அனல் மின்சார நிலையம் ஏற்படுத்த மத்திய அரசாங்கம் சம்மதம் கொடுத்திருக் கிறார்கள் என்று அமைச்சர் அவர்கள் அறிக்கையில் குறிப்பிட் டிருக்கிறார்கள். மிகவும் மகிழ்ச்சிகரமான ஒன்று. எதிர்க் கட்சி உதவித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதுபோலவும், இங்கு பல சந்தர்ப்பங்களில் எழுப்பிய யோசனை போலவும், தொழில் அதிபர்களுக்கென்று தனியாக எந்த முயற்சி செய்தாலும் ஓரளவுக்கு மின்சார உற்பத்தி செய்கிற அனல் மின்சார உற்பத்தி நிலையத்தை ஏற்படுத்திவிட முயற்சி எடுத்துச் செய்ய வேண்டு மென்று தொழில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். மத்திய அரசாங்கம் கொள்கைக்கு விரோதமாக இருக்கிறது என்று சொன்னாலும் சரி, நமது தமிழ்நாட்டு நிலவரத்தை எடுத்துச் சொல்லி மற்ற நிலைமைகளையும் எடுத்துச் சொல்லி வலியுறுத்தி வாங்கவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எல்லோரும் குறிப்பிடுவது மின்சார விகிதா சாரத்தைப்பற்றி. ஒன்றுமட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன். விவசாயத்திற்கும், வீட்டு உபயோகத்திற்கும் இப்போதிருக்கிற கட்டணத்தைவிட அதிகமாக இருக்கக்கூடாது என்று உறுப்பினர் கள் அபிப்ராயப்படுகிறார்கள். அமைச்சர் அவர்களுக்கு ஒன்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த இரண்டு ஆண்டு களிலும் விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய மின்சார விகிதம் கிட்டத்தட்ட 30 சதவிகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். இன்னும் Tariff revision என்ற காரணத்தை வைத்துக்கொண்டு அந்த விவசாயிகளுக்கு மேலும் மேலும் விகிதம் உயர்த்தக் கூடாது. அப்படிச் செய்தால் அரசாங்கம் வாயளவில் சொல்கிற உணவு உற்பத்திப் பெருக்கம் இருக்கவே முடியாது என்பதை வலியுறுத்திச் சொல்லி விவசாயிகளுக்குமட்டும் விகிதாசாரத்தை குறைத்துக்கொடுக்க முடியுமானால், அதைச் செய்ய முன்வர வேண்டும். இல்லாவிட்டால் இப்போதிருக்கிற விகிதத்தை அதிகப் படுத்தாமல் இருக்க வேண்டுமென்று அரசாங்கத்தை வேண்டிக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, கீழ்நிலை சிப்பந்திகளிடையே, மின்சார இலாக்காவில், இருக்கிற குறைகளை எல்லோரும் உணர்வார்கள். முக்கியமான ஏழை எளியவர்கள் மேலும் முக்கியமாக நகரங் களுக்குச் சென்று அலுவலைக் கவனிக்க முடியாதவர்கள் அதிகமாக உணருவார்கள். கீழ்நிலை சிப்பந்திகளிடையே இருக்கிற லஞ்ச ஊழல் எந்த அளவுக்கு வேரூன்றி இருக்கிறது என்பதை

4–50 p.m

[திரு. எல். கே. சம்பந்தன்] [20th July 1964

அமைச்சர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். பேச்சளவில் சிறு நடவடிக்கைகளின்மூலம் இவற்றை அகற்றிவிட முடியுமென்று நான் நம்பவில்லை. அது முடியாத நிலை. அதை ஓரளவுக்குக் கட்டுப்படுத்தலாம். அதற்குக் குறிப்பாக புகார் செய்தால், அதை உடனடியாக விசாரித்து காலதாமதமின்றி எவ்வளவுக்கெவ்வளவு கடுமையான தண்டனை கொடுக்க வேண்டுமோ அதைக் கொடுக்க வேண்டும். வேலையிலிருந்து நீக்கப்படுவதோ வேறு எதுவானாலும் செய்து தண்டிக்க முடியுமானால் இந்த மாதிரி லஞ்ச ஊழல் கீழ்தர சிப்பந்திகளிடத்தில் குறையும். ஓரளவுக்கு இருந்தால் அதை யாரும் பொருட்படுத்த மாட்டார்கள். பொருளாதார நிலையிலும்கூட, ஓட்டல்களிலும் டிப்ஸ் என்று வாங்குகிறார்கள். நண்பர் திரு. ஜெயராம் செட்டியார் அவர்கள் சொல்லியதுபோல சட்டசபை அங்கத்தினர்கள் தங்கும் விடுதிகளில் காப்பி கொண்டுவர, மற்ற வேலைகளுக்கு ஒரு சில காசுகள் கொடுக்கவேண்டியிருக்கிறது. ஆனால் மின்சாரத் துறையில் இருக்கிற கீழ்தர சிப்பந்திகளிடம் இருக்கிற ஊழல் வேறுவிதமானது. ஒரு ஹார்ஸ் பவருக்கு ரூ. 15 அல்லது 25 என்ற மாதிரி விகிதம் வைத்து வசூல் செய்கிறார்கள். பத்து பேர் கொடுத்து 11-வது பேர் கொடுக்கவில்லை என்றால் 11-வது ஆளுக்கு இக்கட்டான நிலை வருகிறது. பல நாட்களுக்கு அவர் மின்சாரத்தை எதிர்பார்க்க முடியாது. ஏதாவது காரணம் ஏற்பட்டுக்கொண்டே இருக்கும். அந்த நிலை நீடிக்காமல் இருக்க மின்சார குழு தக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தென்னற்காடு மாவட்டத்தைப் பற்றி இந்த அவையில் பலமுறை குறிப்பிட்டிருக்கிறேன். ஆயினும் இருந்த நிலை இருந்துகொண்டே தான் இருக்கிறது. அடுத்த அவையில் மின்சாரம் 20 நிமிடம் இல்லாமல் போய்விட்டது என்று பத்திரிகையில் பார்த்தோம். சென்னையில் நான் பெருமளவுக்குத் தங்குகிறேன். இங்கு அடிக்கடி மின்சாரம் அணைவதை நான் கண்டதில்லை, ஆனால் எங்கள் மாவட்டத்தில் கடலூருக்குச் சென்றால், ஒவ்வொரு நாளும் இந்த மின்சார நிறுத்தம் பார்க்காத நாளே இல்லை என்று கூட சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு நாளும் பல முறை 5 நிமிடம், கால்மணிநேரம், ஒரு மணி அளவில் என்று இருந்து கொண்டே இருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று கண்டுபிடிக்கவேண்டும். பல நாட்களுக்கு முன் லைசன்சுதார்களிடம் இருந்தது. அவர்கள் என்ன செய்துவைத்தார்களோ அவை அப்படியே இருந்துகொண்டிருக்கிறது. அடிக்கடி மின்சாரம் நின்றுவிடுவதால் சிறு இயந்திரங்களுக்குப் பழுது ஏற்படுகிறது என்பது சொல்லாமலே அந்தத் துறையில் இருப்பவர்களுக்குத் தெரியும். அதனால்தான் இதைச் சொல்கிறேன். தென்னற்காடு மாவட்டத்தில் அடிக்கடி இதுபோன்று ஏற்படாவண்ணம் அதைக் கண்டுபிடித்து நீக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன். நன்றி.

20th July 1964]

திரு. எஸ். ஆர். பொன்னுசாமி செட்டியார்: தலைவர் அவர்களே, 1964-65 வருஷ எலக்டிரிசிடி போர்டு நிதிநிலை அறிக்கையை மனப்பூர்வமாக நான் வரவேற்கிறேன். நம் ராஜ்யத்தைப் பொறுத்தவரில், எலக்ட்ரிசிட்டி என்று நினைத்தாலே, நமது கண்முன்பு நிற்பது நமது கனம் அமைச்சர் வெங்கடராமன் அவர்களும் எலக்ட்ரிசிட்டி போர்டும்தான் இருக்கலாம். பல அங்கத்தினர்கள் பேசியதை நான் கேட்டுக் கொண்டுதான் இருந்தேன். இந்த வருஷம் எதிர்பாராத முறையில் பவர் கட் வந்தது குறித்துச் சொன்னார்கள். மின்சார போர்டிடம் ஓரளவு நெருங்கிய தொடர்பு உள்ளவன் என்ற முறையில் நான் சில சொல்ல முடியும். இந்த வருஷம் ஜூன் மாதம் 15-ம் தேதி வரையில் எந்தவிதமான கவலையும் இல்லாத முறையில் மின்சார வசதி இந்தத் தமிழ்நாட்டிலே ஒழுங்காக இருக்குமென்பதை விளக்கமாக அவர்கள் சொல்லியிருந்தார்கள். இந்த இடத்தில் நாம் நன்றாக யோசனை செய்து பார்க்க வேண்டும். தமிழ் நாட்டில் இருக்கிற நாம் ஜூன் மாதம் 15-ம் தேதி வரையில் மின்சார வெட்டு இல்லாத நிலையில் நமது மின்சார இலாகா இருக்குமானால் தமிழ்நாட்டைச் சேர்ந்த நாம் யாரும் மின்சார வெட்டு வருமென்று எதிர்பார்க்க நியாயமில்லை. ஜூன் ஆரம்பத்திலே 'மான்சூன்' ஆரம்பிப்பது பண்டைய வழக்கம் எதிர்பாராத விதமாக இயற்கை நமக்கு விரோதமாக இருந்ததன் காரணமாகத்தான் மின்சாரம் வெட்டு வந்ததே தவிர இலாகாவின் அஜாக்ரதையினால் அல்ல. அதற்கு இரண்டு மூன்று மாதங்களுக்கு முன்பு சரியான முறையில் மின்சார நிலையை உணர்ந்து அதற்குப் பக்குவமான முறையில் செயல் படவில்லை என்று சொல்வதே சரியில்லை. பவர் கட் வந்தால் எல்லோருக்கும் கஷ்டம். அதை நான் ஒத்துக்கொள்கிறேன். எல்லோரைக்காட்டிலும் என்னைப்போன்றவர்களுக்கு அதிகக் கஷ்டம். பெரும்பெரும் தொழில்களின் உற்பத்திக் குறைவு. வேலையில்லாமல் தொழிலாளர்களுக்குப் பாதிச் சம்பளம் கொடுக்கவேண்டும் என்று நிலை எல்லாம் உண்டு. அதிபர்கள் ஒரு பக்கம் இருந்தாலும்கூட தொழிலாளர் நிலையை எடுத்துக் கொண்டால் அதைவிட மோசம். சாதாரணமாக ரூபாய் 100, 150 என்று சம்பளம் வாங்குகிறவர்களுக்கு ரூபாய் 75 என்று குறைத்துவிட்டால் கண்டிப்பாக குடும்பத் திட்டத்தைச் சரிக்கட்ட முடியாது. இருந்தாலும்கூட இருக்கிற நிலையை எதார்த்தமான முறையில் பரிசீலனை செய்யவேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். கனம் அங்கத்தினர் ஒருவர் பேசினார். வருஷா வருஷம் பவர் கட் வந்துகொண்டிருக்கிறது. இதை நன்றாக உணர்ந்து அரசாங்கமும் மின்சார இலாகாவினரும் ஃபிக்ஸட் புரோகிராம் போட்டு ஆரம்பத்திலேயே 10 சத விகிதம் அல்லது 25 சத விகிதம் என்றாலும் ஏன் வைக்கக்கூடாது என்கிறார்கள்.

கனம் அங்கத்தினர்—எதிர்க்கட்சி உபதலைவர் திரு. பால சுப்ரமணியய்யர் அவர்கள் அழகாகச் சொன்னார்கள். தொழில் அதிபர்கள் இதை ஒத்துக்கொள்ளவே மாட்டார்கள் என்று, அவர்கள் சொன்னது முழுக்க முழுக்க உண்மை. யாரும் ஒத்துக் கொள்ள மாட்டார்கள். ஒத்துக் கொள்ள முடியாது. பவர் கட் வருகிற சந்தர்ப்பங்களிலே பேசுவது ஒரு முறை. அந்த முறை இருந்தாலும்கூட, மக்கள் நிலையைத் தெளிவாகத் தெரிந்து, தவறுகள் இருந்தால் கண்டிக்கத்தான் வேண்டும். இல்லை என்று சொல்ல வில்லை. எங்கள் பகுதியிலேயும்கூட திடீரென்று 100 சத வீதம் கட் என்று சொன்னவுடனே பல நண்பர்கள் பேசினார்கள். ஏன் 25 சத வீதம் ஒரு மாதத்துக்கு முன்பே கொண்டு வந்திருக்கலாமே, அல்லது 50 சத வீதம் கொண்டு வந்து விட்டு, பின்னால் 100 சத வீதம் கொண்டு வரலாமே என்று பல பிரச்னைகள் வந்தது உண்டு. ஒன்று எனக்கு நன்றாகத் தெரியும். நமது இராஜ்யத்தைப் பொறுத்த அளவில் நமது அமைச்சர் கனம் வெங்கட்ராமன் அவர்கள் ஒரு உயர்ந்த டானிக்-ஐக் கொடுத்துவிட்டார்கள், ராஜ்யத்துக்கே ஒரு எலக் டிரிசிடி பசியை, பெரிய பசியை உண்டாக்கி விட்டார்கள். அந்தப் பசி நிவர்த்தியாக வேண்டுமென்றால் நாம் இன்னும் கொஞ்சம் வேகமாகச் செல்ல வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளு கிறேன். மின்சார வளர்ச்சியை எடுத்துப் பார்ப்போமே யானால், அமைச்சர் அவர்களோ அல்லது இலாகாவினரோ சென்ற பல வருஷங்களாக நமது இராஜ்யத்துக்குச் செய் திருக்கிற சாதனைகள் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஒவ்வொரு வரும் பெருமைபடக் கூடிய நிலையில்தான் இருக்கின்றன. இதை யாரும் இல்லை என்று சொல்ல முடியாது. கிராமப் பகுதிகளை எடுத்துக் கொண்டால், 20,000 கிராமங்களில் 17,000 கிராமங்களுக்கு வந்துவிட்டது. அகில இந்திய ரீதியில் பார்ப்போமேயானால், ஒவ்வொரு ராஜ்யத்திலும், அந்தந்த ராஜ்யத் திலுள்ள கிராமங்களில் எவ்வளவு கிராமங்களுக்கு மின்சாரம் கிடைத்திருக்கிறது என்று பார்ப்போமேயானால், தமிழ்நாட்டின் அளவுக்கு இந்தியா தேசத்தில் எந்த இராஜ்யத்திலும் இல்லை என்பதைத் தைரியமாகச் சொல்லலாம். இன்னும் 1,000

5-00 p.m.

அல்லது 2,000 கிராங்கள் இருக்கலாம், அதுவும் 3-வது ஐந்தாண்டுத் திட்டத்திலேயே பூர்த்தி செய்யப்பட்டுவிடும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லலாம், அதை நாம் தைரிய மாக நம்பலாம்; கவலையே வேண்டியதில்லை. திடீரென்று ஏன் இந்த மின்சார வெட்டு வந்தது என்று நல்ல முறையில் யோசனை செய்து பார்ப்போமேயானால், தமிழ்நாட்டிலே மிகமிக வேகமாக தொழில்வளம் பெருக வேண்டும் என்ற ஆசையுடன் இருக்கிற நேரம், இதனுடைய அடிப்படைத் தத்துவத்தை ஓரளவு புரிந்து கொள்ள வேண்டுமென்றுதான் நான் சொல் வேன். தமிழ்நாட்டிலே ஒரு ஆலை, ஒரு பெரிய தொழில்

ஆரம்பிக்க வேண்டும் என்று நினைத்தால், அதற்கு வேண்டிய கிலசென்சு முறைகள் மத்திய அரசாங்கத்தின் கையில் இருக் கின்றன. மத்திய அரசாங்கத்திடம் சுமார் 3500 அல்லது 5000 கிலோவாட் உபயோகிக்கும் ஒரு தொழிலை ஆரம்பிக்க வேண்டும் என்று அணுகினால், அங்கே இருக்கிறவர்கள் சொல்லு கிறார்கள், உங்கள் ராஜ்யத்தில் மின்சாரம் கிடையாதே, என் இதைக் கேட்கிறீர்கள் என்று. கொஞ்சம் யோசனை செய்து பார்ப்போமேயானால், பொதுப்படையாக இந்த ராஜ்யத்துக்கு அதன்மூலம் ஏதாவது நன்மை வருமா என்று யோசனை செய்து பார்ப்போமேயானால், மின்சார இலாகாவினர் மீதோ அல்லது அமைச்சர் அவர்கள் மீதோ குற்றம் சொல்லுவதற்கில்லை. ஒரு உயர்ந்த நோக்கத்துடன், மிகச் சிறந்த லட்சியத்துடன், கடைசி நிமிஷம் வரையில் மின்சார வெட்டைத் தவிர்க்க முடி யுமா என்று முயற்சித்துப் பார்த்திருக்கிறார்கள் என்று அவர் களை மனதாரப் பாராட்ட வேண்டும். எனக்கு நன்றாகத் தெரியும். குந்தாவில் நாளுக்கு நாள் பருவமழை இல்லாதது காரணமாக தண்ணீர் குறைந்து கொண்டு வரும் சந்தர்ப் பத்தில் ஒரு சொட்டுத் தண்ணீரைக்கூட வீணாக்காமல், ஜூன் மாதம் 15-ம் தேதி வரை தாக்குப் பிடிக்க வேண்டுமென்று மின்சார இலாகாவைச் சேர்ந்தவர்கள் எவ்வளவு பாடுபட் டார்கள் என்று எனக்கு நன்றாகத் தெரியும். நான் வெளிக்கை யாகப் பேசும்போது நண்பர்களிடம் சொல்லுவதுண்டு—நமது மின்சார இலாகாவினர் வாயிலே தண்ணீர் எடுத்து விட்டும் கூட மின்சார உற்பத்தி செய்து விடுவார்கள் என்று. அந்த அளவுக்கு உழைத்திருக்கிறார்கள் என்றால், அவர்களைப் பாராட் டாமல் இருக்கவே முடியாது. எதிர்பாராமல் வந்து விட்டது. அதை வைத்து, மேற்கொண்டு இன்னும் நிறைய தெர்மல் நிலையங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற முடிவுக்குத்தான் வரவேண்டுமே தவிர வேறு வழியே நமக்குக் கிடையாது. சென்ற இரண்டு மூன்று வருஷங்களாக இந்த சபையில் சொல்லிக் கொண்டேயிருக்கிறோம், தெர்மல் நிலையங்கள் ஏராள மாக வேண்டும் என்று. நமது ராஜ்யத்திலுள்ள தெர்மல் பவர், ஹைட்ரோ பவர் எவ்வளவு என்று கணக்கெடுத்துப் பார்ப்போமேயானால், நிரந்தரமாக இருக்கிற தெர்மல் பவர் நமக்குக் குறைவு. அந்தக் குறைவை சரியான முறையில் நிறைவு படுத்துவதற்கு இன்னும் பெரிய தெர்மல் நிலையங்கள் வரவேண்டும் என்பதாகப் பேசிக் கொண்டு வந்திருக்கிறோம். இன்றைய அறிக்கையில் இரண்டு தெர்மல் நிலை யங்கள் 400 மெகாவாட் கொண்டு வருகின்றன என்பதைப் பார்த்து மிகவும் சந்தோஷப்படுகிறேன். ஆனால் அதே சந்தர்ப் பத்திலே கனம் அமைச்சர் அவர்களை நான் கேட்டுக்கொள் கிறேன். "இது உங்களால்தான் வந்தது. ஏராளமாகப் பசி உண்டாக்கி விட்டீர்கள்". தமிழ் நாட்டிலே தொழில் வளர்ச்சி அவ்வளவு வேகமாக வரக் கூடிய வாய்ப்பை நமது அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தி விட்டார்கள்; அதைத்தான்

[திரு. எல். ஆர். பொன்னுசாமி செட்டியார்] [20th July 1964

பசி என்று சொல்கிறேன். பசியை உண்டாக்கிவிட்டு, அதற்கு உகந்த உணவு கொடுக்கப்பட வேண்டும் என்பதில் எந்தவித மான அபிப்பிராய பேதமும் இருக்க முடியாது. அதிலும் குறிப் பாக தெர்மல் நிலையங்களை இன்னும் வேகமாக அமைக்க வேண்டுமென்று ஏன் சொல்லுகிறேன் என்றால், இன்றைய தினம் வெளிநாடுகளில் தொடர்பு வைத்திருக்கிறவர்களுக்கு நன்றாகத் தெரியும். வருஷத்துக்கு 10 சதம், 15 சதம், விலை ஏறிக் கொண்டே போகிறது. தெர்மல் நிலையம் இன்று ஏற் படுத்த வேண்டுமென்றால், உடனடியாக செயல் படுத்தினால் தான் சுலபமே தவிர, இரண்டு வருஷம் யோசனை செய்தால், நிலை கிட்டத்தட்ட இரண்டு மடங்கு ஆகிற நிலைமையில் ஏறிக் கொண்டு போகிறது. அதை மனதிலே வைத்து, உடனடியாக அதிகமாக தெர்மல் நிலையங்கள் ஏற்படுத்த வேண்டும் என்று மிகப் பணிவோடு நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த தெர்மல் நிலையம் என்ற பிரச்னை வரும் போது, சில வரு ஷங்களுக்கு முன்பு கோவையிலிருந்த நாங்கள் தனியார் துறை யில் தெர்மல் நிலையங்கள் ஏற்படுத்துகிறோம், எங்களுக்கு லாபம் வேண்டாம், உற்பத்திச் செலவு எவ்வளவு ஆகிறதோ, அதற்கு உங்கள் common grid -லே கொடுக்கிறோம், வருஷம் பூராவும் உபயோகப் படுத்துங்கள், ஏதாவது தெய்வாதீனமாக மின்சார வெட்டு வருகிற போது, எங்களுக்கு தனிப்பட்ட முறையில் உபயோகப்படுத்திக் கொள்ளுவதற்கு அனுமதி கொடுங்கள் என்று சொன்னோம். அரசாங்கம் நல்ல மனதுடன் ஒத்துக்கொண்டது, குறை சொல்லுவதற்கில்லை. ஆனால் மத்திய அரசாங்கத்திலே, Industrial policy Resolution -க்கு விரோத மாக இருக்கிறது என்ற காரணத்தால், அவர்கள் அனுமதிக்க வில்லை. அது சென்ற கால விஷயம், அதைக் குறித்து இப்போது நமக்குக் கவலை வேண்டாம். இப்போது இருக்கிற சூழ்நிலையை எடுத்துச் சொல்லி, மத்திய அரசாங்கத்திடம் வலியுறுத்தி, மீண்டும் தனிப்பட்ட தொழிலதிபர்கள் யாராவது தெர்மல் நிலையங்கள் ஏற்படுத்த முன்வருவார்களேயானால், அவர் களுக்கு அனுமதி கொடுப்பதற்கு அரசாங்கம் முயற்சி செய்ய வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த மின்சார வெட்டு வருகிற சந்தர்ப்பங்களிலே எங்களுக்குக்கூட பலவிதமான யோசனைகள் வருவது உண்டு, தனிப்பட்ட முறையில் ஜெனரேட்டர் செட் வைத்துக் கொள்ளலாமா என்று. என்னைப் பொறுத்த அளவில் 32,000 கதிர்களில் 60 சதத்துக்கு வேண்டிய அளவு ஜெனரேட்டர் வைத்துக் கொண்டிருக்கிறேன். நான் அவற்றை உபயோகிக்கவும் செய்தேன். 18 நாள் அவற்றை ஓட்டியதற்கு எனக்கு அதிகச் செலவு 18,000 ரூபாய். ஒரு நாளைக்கு அதிகச் செலவு 1,000 ரூபாய்.

மொத்த லாபத்தில் ஒரு லக்ஷம் இல்லை. எதற்காக இதைச் சொல்லுகிறேன் என்றால் இன்றைய தினம் இருக்கக் கூடிய high speed என்ஜின்கள் வாங்கி உபயோகித்தாலும்கூட மின்சார

20th July 1964] [திரு. எல். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்]

உற்பத்திச் செலவு அதிகம் தாங்கமுடியாது. எனக்கு நன்றாகத் தெரியும். கோவையில் ஜெனரேட்டர் சாதனம் வைத்திருந்தும் சில ஆலைகள் உபயோகிக்க முன் வரவில்லை. அதற்குப் பதிலாக தொழிலாளர்களுக்கு lay-off compensation கொடுத்து ஆலையை நிறுத்தி விட்டார்கள். அவர்களைக்கூட கேட்டேன் ஏன் நிறுத்தி னீர்கள் என்று. It is not economical சொம்ப ஜாஸ்தி செலவு ஆகிறது என்றார்கள். தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில் தொழில் அதிபர்கள் எத்தத் தொழிலைச் சேர்ந்தவர்களானாலும் சரி, அவர் களாக முன்வந்து என்ஜின் வாங்க வேண்டுமென்று நிர்ப்பந்தப் படுத்த வேண்டாம். slow speed என்ஜின்கள், Crude oil -ல் ஓடக் கூடிய என்ஜின்கள் கிடைத்தால் மின்சார உற்பத்திச் செலவு குறைவாக இருக்கும். அதன் காரணமாக ஒருவர் வாங்கினால் பலர் வாங்குவதற்கு வாய்ப்பு ஏற்படும். அந்த வாய்ப்பை கனம் தொழில் அமைச்சர் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்பதுதான் என் தாழ்மையான வேண்டுகோள். Crude oil -ல ஓடக்கூடிய நிலைமையில் இருக்க வேண்டுமென்று ஏன் சொல்லுகிறேன் என்றால் 1953-ல் நான் வாங்கினேன் generator set அன்று டீசல் ஆயில் காலன் ஒன்றுக்கு ரூ. 1-0-6. இன்று ஏகதேசமாக பெட்ரோல் விலைக்கு வந்துவிட்டது டீசல் ஆயில். என்ஜின்கள் வாங்கி ஓட்டுவதற்குக் கூட கஷ்டம். எல்லாம் high speed என்ஜின்களாக இருப்பதால் அதைச் சரியான முறையில் வைத்து உபயோகிக்க technical experts இருந்தால் ஒழுங்காக maintain பண்ண முடியும். அநேக என்ஜின்கள் இருந்தும்கூட மின்சாரம் வராத காலத்தில் ஓடாமல் இருந்துவிட்டன. இதைத்தான் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கனம் அமைச்சரவர்கள் வெளி நாடு போகிறவர். அடுத்த முறை வெளி நாடுகளுக்குப் போகிற பொழுது slow speed என்ஜின்கள் Crude oil- ல் ஓடக் கூடிய என்ஜின்கள் எவ்வளவு கிடைத்தாலும் தமிழ் நாட்டுக்காக வாங்கி வர வேண்டுமென்று வலியுறுத்துகிறேன். இதற்கு அந்நியச் செலாவணி எந்த முறையில் கிடைக்கும் என்ற பிரச்னை அவர் களுக்குத் தெரியும். Rupee currency area -ல் தாராளமாகக் கிடைக்கும் என்று நம்புகிறேன். அதைப் பயன்படுத்தினால் ஓளவுக்கு இது சரியான முறையில் இருக்கும் என்று நினைக் கிறேன். தெர்மல் நிலையங்கள் அதிகம் ஆக ஆக நமக்கு உற்பத்திச் செலவு ஓளவு அதிகம் ஆகத்தான் செய்யும். என்னைப் போல் உள்ளவர்களுக்குக் கொஞ்சம் கஷ்டம்தான்.

போன வருஷம் மின்சாரத்திற்கு சர்சார்ஜ் அதிகமாகப் போட்டோம், மீண்டும் அதை revise செய்ய வேண்டிய நிலைமை யில் இருக்கும் என்பதாக அமைச்சர் அவர்கள் சூசகமாகச் சொல்லியிருக்கிறார்கள். தவிர்க்க முடியாது. அதிகமாக ஏற்படுத்த வேண்டுமென்ற நிலைமைக்கு வரும்பொழுது அதற்குள்ள பொறுப்பை ஓளவு ஏற்றுத்தான் தீர வேண்டும். ஏதோ

5-10 p.m.

[திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்] [20th July 1964

சொல்லுவார்களே, கூழுக்கும் ஆசை, மீசைக்கும் ஆசை என்று உற்பத்தியும் அதிகம் வேண்டும், செலவும் குறைய வேண்டுமானால், கேட்பதில் பொருத்தம் இருக்க வேண்டும். இந்த நிலையில் கொஞ்சம் விலை கூட இருந்தாலும் அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும். நாம் என்று அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ளுகிறோம் என்று சொல்ல முன் வருகிறோமோ அன்றுதான் அரசாங்கமும் இலாகாவினரும் இன்னும் கொஞ்சம் வேகமாக வேலைசெய்ய முடியும் என்று என்னைப் போன்றவர்கள் நம்ப முடியும்.

இது போக அணு சக்தி மின்சார நிலையங்கள் வருவது குறித்து நான் வரவேற்கிறேன். ஆரம்ப கட்டத்திலே, அணுசக்தி மின்சார நிலையத்தைக் குறித்துப் பேசும்பொழுது ஏதோ சந்தர்ப்பத்திற்குச் சொல்லுகிறார்கள் என்பதாகச் சொன்னவர்களும் உண்டு. நான் கூட முன்பு ஒரு சமயம் இந்த சபையில் பேசினேன். 1957-ம் வருஷத்தில் இங்கிலாந்து சென்று இருந்த பொழுது அங்கு பார்த்தேன். ஒரே ஒரு அணுசக்தி மின்சார நிலையத்தை ஏற்படுத்தியிருந்தார்கள். அந்த நாட்டிலும்கூட அப்போது அந்தக் கூக்குரல் கிளம்பியது. அணுசக்தி மூலமாக உற்பத்தி செய்தால், உற்பத்திச் செலவு அதிகமாகிறது என்ற பேச்சு அன்றைய தினமே அங்கு இருந்தது. பவர் வேண்டுமானால் விலை அதிகமானாலும் உற்பத்தி செய்தால்தான் நாட்டிலே தொழில் வளம் பெருகும். தொழில் வளம் பெருக்கினால்தான், நாட்டில் மக்களுக்கு வேலை வாய்ப்புகளை அதிகப்படுத்த முடியும் என்று மக்கள் மத்தியில் சொல்லி இன்றைய் தினம் அங்கு 7, 8 இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால் நமது நாஜ்யத்தைப் பொறுத்த வரையில், இந்த hydro பிரச்னையை நாம் அறவே மறந்து விடவேண்டும். தொழில் நிலையங்கள், அணுசக்தி மின்சார நிலையங்கள் இவைகளைத்தவிர ஒன்றும் கிடையாது என்ற முடிவுக்கு வந்து விடுவோமானால், அப்போதுதான், நூதனமான முறையில் மின்சாரம் உற்பத்தி செய்வதற்கு நாம் வேகமாகச் சொல்ல முடியும். இது போக தனிப்பட்ட முறையில் எனக்குப் பெரும் மகிழ்ச்சி. இந்த முறை நமது அமைச்சர் அவர்கள் வெளிநாடு சென்று வந்தவுடன் கடல் அலையிலிருந்து மின்சாரம் எடுக்கலாம் என்று செய்தி கொண்டுவந்து இதை ஏன் நாம் செய்யக்கூடாது என்று சொன்னார்கள். எப்படி முதலில் அணு சக்தி மின்சார நிலையத்தைப் பற்றிப் பேசும்பொழுது அது வருமா வராதா, ஏதோ சொல்லுகிறார்கள் என்று சொன்னமோ அந்த முறையில் இன்று சொல்லுகிறவர்கள், இருக்கத்தான் செய்வார்கள். அதைக் குறித்துக் கவலைப்பட வேண்டியது இல்லை. எந்த முறையையும் வேகமாகப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றுதான் நான் கருதுகிறேன். பவர் பசி பெரிய பசி. அவசியம் தீர்க்கப்படவேண்டும். அதற்கு எல்லா முறைகளையும் கையாள வேண்டும். முக்கியமாக, தொழில் வளத்துக்கு வழிவகை செய்ய

20th July 1964] [திரு. எஸ். ஆர். பி. பொன்னுசாமி செட்டியார்]

வேண்டும். இத்தத் தமிழ் நாட்டில் பார் எந்தத் தொழில் ஆரம்பிக்க வேண்டுமென்று விரும்பினாலும், இதோ பவர் இருக்கிறது, தாராளமாக ஆரம்பம் செய்யுங்கள் என்று சொல்லக் கூடிய நிலைமை தமிழ் நாட்டில் வர வேண்டும் என்பது என்னுடைய அவா.

பொதுவாக இந்த மின்சார இலாகா நிதிநிலை அறிக்கை மிகப் பெருமைப்படக் கூடிய அளவுக்குத்தான் இருக்கிறது என்பதை நான் முழு மனதுடன் சொல்லிக் கொள்ளுகிறேன். இன்னும் தொழில் வளம் வேகமாக வளர வேண்டுமென்று என்னுடைய தாம் இன்னும் சிறந்த முறையில் இந்த இலாகாவினரும் அமைச்சரவர்களும் சேவை செய்வதற்கு அவர்களுக்கு நல்ல ஊக்கம் அளிக்க வேண்டும் என்பதுதான் என்னுடைய வேண்டுகோள். எனக்கு ஒரு பெரிய சந்தேகம் வந்தது ஆரம்பத்தில். Question hour ஆக இல்லாவிட்டாலும் கூட, எலக்டிரிசிடி போர்டு தலைவரில் என்ஜினியரா அல்லது எலக்டிரிகல் என்ஜினியரா என்று, அதை அமைச்சரவர்கள் தெரிவித்தால் சௌகரியமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ளுகிறேன். ஒரு அங்கத்தினர் சொன்னார் மின்சார வெட்டு திடீர் திடீரென்று வருவதால் இயந்திரங்கள் பழுது பட்டுப் போகிறது, அதாவது 15 வருஷம் ஓடக்கூடிய இயந்திரம் அதன் ஆயுள் 10 வருஷமாகக் குறைந்து விடுகிறது என்று. எனக்குத் தெரிந்த வரையில், அப்படி இல்லவே இல்லை. பவர் கட் வந்து இயந்திரங்களின் ஆயுள் குறைகிறது என்பது ஒன்றுமில்லை. எங்கள் ஆலைகளில் பவர் கட் எதிர்பாராமல் வருமானால் எந்த அளவுக்கு மெஷின்களை ஓட்ட முடியுமோ ஓட்டி விட்டு இயந்திரங்களை நிறுத்தி விடுகிறோம். இயந்திரத்திற்கு ஏற்படும் குறையும் இல்லை என்று சொல்லிக் கொண்டு, சுமார் 10 வருஷங்களுக்கு முன்பு அகில இந்திய ரீதியில் தொழில் துறையில் பின்தங்கிய பிரதேசம் என்று கருதப்பட்டு வந்த தமிழ்நாட்டை இன்று இந்திய தேசத்தில் இருக்கக்கூடிய எல்லா ராஜ்யங்களும் பொறுமைப்படக்கூடிய அளவுக்கு தொழில் துறையில் முன்னேற்றம் அடையச் செய்த கனம் அமைச்சர் திரு. வெங்கட்டராமன் அவர்களைப் பாராட்டி இந்த சந்தர்ப்பம் கொடுத்ததற்கு நன்றி தெரிவித்துக்கொண்டு பேச்சை முடித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை: சட்டமன்றத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மாநில மின்சார போர்டின் நிதிநிலை அறிக்கையைக் காலும்போது நமது அரசினர் நம் நாட்டுக்கு வேண்டியதாகிய மின் சக்தியைப் பெருக்கி அதன் வழியில் தொழில் வளத்தையும் விவசாய வளத்தையும் பெருக்குவதற்குரிய வழிவகைகளை மிகச் சிறிய முறையில் செய்திருப்பதை நாம் அறிகிறோம். அறிந்து பாராட்டுகிறோம். நீர் மின்சக்தி ஒன்றினையே நம்பியிராமல் அனல் மின் சக்தி, அணு மின்சக்தி ஆகியவற்றிற்கான திட்டங்களை அமைத்திருப்பது உண்மையில் பாராட்டுதலுக்கும் நன்றிக்கும் உரியதென தெரிவித்துக்கொள்ள

அமைப்புகிறேன். எண்ணூரிலும் தூத்துக்குடியிலும் அனல் மின்சக்தி நிலையமும் கல்பாக்கத்தில் அணு மின்சக்தி நிலையமும் அமைக்கப்பட இருக்கின்றன. அந்நிலையங்களை அந்த இடங்களில் மட்டுமல்லாமல் பல இடங்களிலும் அமைத்து மின்சக்தியைப் பெருக்குவதற்கான முயற்சியில் மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் மின்சார போர்டினரும் தொடர்ந்து ஈடுபடுவார்கள் என்பதில் நமக்கு ஐயமில்லை. அணுசக்தி நிலையம் கல்பாக்கத்தில் அமைக்கப்பட இருக்கிறது. அதைத் தோற்றுவிக்க வேண்டிய தனிப்பொருள்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் மணவாள குறிச்சி, குளச்சல் ஆகிய பகுதிகளில் கிடைக்கின்றன. மானாசைட்டிலிருந்து தோரியம், யூரேனியம் ஆகிய அணுசக்தி தோற்றுவிப்பதற்கான தனிப்பொருள்கள் அங்கு கிடைப்பதை வெளிநாட்டினர் எடுத்துப் பயன்படுத்தி வருகிறார்கள். மிகக் குறைந்த செலவில் கிடைக்கிற அதைப் பயன்படுத்தி அணு மின்சக்தி நிலையம் அமைக்க ஆவன செய்யவேண்டுமென்று தொழில் துறை அமைச்சர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன்.

அமைச்சர் அவர்கள் பிற நாடுகள் சென்று திரும்பியதும் நமக்களித்த சிறந்த பரிசு கடல் அலையிலிருந்து மின்சாரம் காணலாம் என்று சொன்னது. நாகர்கோவிலுக்கு அவர்கள் வந்திருந்தபோது நாங்கள் சென்று கன்னியாகுமரி கடல் மிகுந்த அலைகளை எல்லாப்பகுதிகளைவிட கோபமான அலைகளை உடையதாக இருக்கிறது என்றும் அலைமின்சார உற்பத்திக்கு அது சிறந்த இடமென்றும், அதைப் பரிசிலனை செய்ய வேண்டுமென்று சொன்னோம். அதைச் செய்வதாகச் சொன்னார்கள். அதற்கு நன்றி தெரிவித்து அதை மீண்டும் உறுதிப்படுத்த வேண்டுமென்று வேண்டுகோள் விடுத்துக்கொள்கிறேன்.

5-30 p.m.

கோதையாறு மின்சாரத் திட்டம் கன்னியாகுமரி மாவட்டத்தில் இப்போதுதான் ஆரம்ப வேலை துவக்கப்பட்டிருக்கிறது. 12 கோடியில் துவக்கப்பட்ட மின்சாரத் திட்டம் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இடம் பெறாமலிருந்தாலும் கூட, நமது அரசினரின் அரிய முயற்சியாலும் கனம் அங்கத்தினர்கள் சொல்லியதுபோல மத்திய அரசின் மந்தநிலை இல்லாத நாராண நிலையின் காரணமாக நமக்கு அளிக்கப்பட்டது என்று நம்புகிறேன். அதை விரைவில் ஆக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆனால் எனக்கு ஒரு குறை சொல்லவேண்டியிருக்கிறது. அந்த வேலை ஆரம்பகால நிலையில் இருக்கிறது. வேலையைத் துவக்கிவிட்டார்கள். தொழில் நுணுக்கம் பெற்றவர்கள் கூட அங்கு தினக்கூலியாக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். சர்வே போன்ற பூர்வாங்க வேலைகள் முடிந்து ஆரம்ப வேலை நடக்கிறது. நுணுக்க அறிவு வாய்த்தவர்களும் அங்கு தினக்கூலியாக அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் சொல்ல நாம் மாதச் சம்பளம் கொடுக்கப்பெற்று தொழில்

முடிந்தும் வேலையிலிருந்து நீக்கப்படும்போது அவர்கள் உரிமை கொண்டாடி 'ரிட்' போட்டுவிடலாம் என்ற அச்சம் இருக்கலாம். வேலைத்திட்டம் முடிந்தபிறகு அடுத்த தேவை வரும்போது முதல் சலுகை கொடுக்கப்படும் என்று அமைத்து சம்பளத்தில் நியமித்தால் அவர்களுக்கு வேலை செய்வதற்கு ஊக்கம் அதிகமாக இருக்குமென்று நம்புகிறேன். இவ்வேலையில் ஈடுபட்டவர்கள் எல்லாம் வேறு வேலை தூத்துக்குடி போன்ற இடங்களில் கிடைக்கப்பெறும்போது அவற்றிற்குச் செல்வதற்கு முயல்கிறார்கள். அதற்கு பொறுப்பு செய்யவேண்டுமென்று வருகிறார்கள். இந்த நிலையில் அவர்கள் ஊக்கம் அங்கு எவ்வாறு இருக்குமென்று பார்க்கவேண்டும்.

அடுத்து, நமது நாடு விவசாய நாடு. உணவு உற்பத்தி மிக இன்றியமையாத முறையில் பெருக்கியாகவேண்டும். விவசாயத்திற்கு மின்சாரம் கிடைப்பதில் சலுகை இருக்கவேண்டுமென்று விரும்புகிறேன். உணவு விவசாயம் என்றிருந்தால் போதாது. வியாபாரப்பொருள்கள் விவசாயத்திற்கு விட உணவுப்பொருள் உற்பத்தி செய்கிற சோளம், நெல் போன்ற பயிர்களுக்குப் பயன்படுத்துகின்ற பகுதிகளாகிலும் சலுகை காட்டினால் மற்ற விவசாயத்திலிருந்து உணவு விவசாயம் செய்யும் விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுப்பதாக அமையுமென்று நம்புகிறேன்.

மின்சார வெட்டு பற்றி அங்கத்தினர்கள் சொன்னார்கள். உண்மையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் பெருமழை பெய்து அங்குள்ள அணைக்கட்டுகள் நிரம்பி உடைப்புகள் ஏற்படும். அதற்கு நேர்மாறாக அங்குள்ள நீர்த்தேக்கங்கள் தண்ணீர் இன்றி, இருக்கிற பயிர்கள் வற்றி இருக்கின்றன. பயிர்கள் மழை வருமென்று நம்பிக்கையில் இருக்கின்றன. ஜூன் மாதம் வரையில் அரசினர் மின்சாரம் வெட்டு கொணராமல் கோடை காலத்தில் மின்சாரம் அளித்து மழை இன்மையால் பிறகு தரமுடியாமல் போனார்கள். அதற்குத் தகுதிக் குறைவோ வேறு எதுவும் இல்லை யென்று மழை மிகுந்த பகுதியிலிருந்து வரும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மின்சாரவெட்டு ஏற்படுவதற்கு 15 தினங்கள் முன்னால் திடீர் திடீர் என்று விளக்குகள் அணைந்தன. மின்வெட்டை உணர்த்தத்தான் அப்படி அணைந்ததோ என்று தெரியவில்லை. எங்கள் எண்ணம் அப்படி அப்போது எண்ணியது. மழை வரும் வருமென்று எண்ணி மின்சார வெட்டு வராது என்று இருந்தோம். மழை ஏமாற்றிவிட்டது. திடீரென்று அவர்கள் மின்சார வெட்டு கந்தது ஏமாற்றமாக இருந்தது. மின்சாரத்தைச் சிக்கனப்படுத்தும்போது, மின்சார வெட்டுகள் ஏற்படுமிபோது, மின்சார இணைப்பைத் திடீரென்று நிறுத்துவதாக இருந்தால் முன்அறிவிப்பு கொடுத்து செய்தால் நல்லது. அந்த மாதிரி நிலை வராமல் இருந்தால் நல்லது என்று பிரார்த்தித்துக்கொள்வோம். திடீரென்று நின்றுவிடுவதால் இருளானதும் இயல்பாகவே

[திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை] [20th July 1964

எடுத்து விளக்கேற்றுவது சிரமமாக இருக்கிறது. முன்னறிவிப்பு இருந்தால் முன்னதாகவே விளக்குகளை ஏற்றி வைத்துக்கொள்ள முடியும். எடுக்கும்போது சொல்லியும் கொடுக்கும்போது சொல்லாமலும் செய்வது நமது பாரம்பரியம். அதைக் கைக்கொள்ள வேண்டுமென்று சொல்லிக்கொள்கிறேன்.

மின்சார இணைப்பில் கிராமங்களுக்கு தெருவிளக்கு முதல் இடம் கொடுக்க வேண்டும். கொடுத்தும் வருகிறார்கள். இருந்தாலும் ஒரே நேரத்தில் தமிழ்நாடு முழுவதும் உள்ள கிராமங்கள் முழுவதற்கும் கொடுக்கும்போது தாமதம் ஏற்படுகிறது. குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தில் சில பகுதிகளில் எல்டிமேட் எடுத்து அப்ரூவல் ஆகி இரண்டாண்டுகளாகியும் மின்சார இணைப்பு கிடைக்காத கிராமங்கள் உண்டு. அதிகாரிகளிடத்தில் கண்டு கேட்டால் நாளைக்கு, அடுத்த மாதம் ஆறு மாதத்தில் வந்துவிடும் என்று அவர்களும் நமக்குத் தந்துவிடவேண்டுமென்ற நம்பிக்கையில் சொல்கிறார்கள். சில சமூக துரோகிகள் கைக்கூலி கொடுத்தால் தான் அது நடக்குமென்று வாங்கி வீட்டில் வைத்துக்கொண்டு அதிகாரிகளிடத்தில் கொடுத்ததாகச் சொல்வதும், சில இடங்களில் கொடுத்தும் இருக்கலாம் என்ற நிலை இருக்கிறது. இந்த நிலை சில ஊழல்கள் ஏற்பட இடமளிக்கிறது. ஆகையால் நமக்கு மின்சாரம் கொடுக்க முடியாத நிலை இருந்தால் உங்களுக்கு இரண்டாண்டு கழித்துத்தான் கிடைக்குமென்று திட்டவட்டமாகச் சொன்னால், மக்கள் அமைதியாக இருக்கமுடியும். அவர்களிடம் சொல்ல வேண்டும், இவர்களைப் பார்க்கவேண்டுமென்று, முயற்சியைப் பாழாக்காமல் இருப்பதற்கு அது உதவியாக இருக்கும்.

(At this stage, Sri S. R. P. Ponnuswami Chettiar entered the Chamber crossing the floor between the Member speaking and the Hon. Chairman)

MR. CHAIRMAN : Order, order.

திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை : அடுத்தாற்போல், ஒன்று எங்கள் பகுதியில்—இங்கேயும் அப்படித்தான் இருக்கும் என்ற எண்ணுகிறேன்—நகரம், கிராமப்பஞ்சாயத்துகளில் எல்லாம் தெருவிளக்குக்கு ஒரு தூணுக்கு இவ்வளவு என்று விதித்திருக்கிறது. அதைவிட ஒரு நகரத்துக்கு ஒரு மீட்டர் வைத்து எவ்வளவு மின்சக்தியை ஏற்றுக் கொள்ளுகிறார்களோ, அதற்கேற்ப வரியிருந்தால், அந்த நகரங்களில் கிடைக்கிற மின்சக்தி கட்டணத்திலிருந்து அதிக விளக்குகளைப் போடமுடியும் என்று நம்புகிறேன். அந்த நிலைமைகளைப்பற்றி அமைச்சர் அவர்கள் ஆராய்ந்து அதற்கு ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

20th July 1964] [திரு. எம். சங்கரலிங்கம் பிள்ளை]

இறுதியாக, இணைப்புக்குப் பிறகு மின்சார ஊழியர்களுக்கு ஒரு குறை. கன்னியாகுமரி மாவட்டம் 1956-ல் இணைந்தபோது, 19 பேர் Second grade overseer. Line Inspector Grade-ல் இருந்தார்கள். இணைந்த பிறகு 5 பேர்கள் முறையாகப் பதவி உயர்வு பெற்றார்கள். 14 பேர்கள் பதவி உயர்வு பெறாமல் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் என்னவென்று துருவி ஆராய்ந்தபோது, அவர்கள் எத்தனை வருஷம் வேலை செய்திருக்கிறார்களோ, அதற்கேற்ப பாபஞ்சம் பகுதி Seniority list -ல் அவர்களுடைய பெயர் இடம் பெற்றிருக்கிறது. அதை விட்டுவிட்டு, அவர்களுக்குப் பின் தங்கிய 3 வருஷம், 4 வருஷம் அனுபவம் பெற்றவர்கள் பதவியில் உயர்த்தப் பட்டிருக்கிறார்கள். என்ன காரணம் என்று ஆராய்ந்ததில் இவர்கள் தகுதி S.S.L.C. fail pass என்பதுபோல் E.S.L.C. Pass என்று இருக்கிறது. பெரிய அதிகாரிகள் அதை Elementary School-Leaving Certificate என்று நினைக்கிறார்கள். இணைவதற்கு முன்னால் E.S.L.C. என்பது English School-Leaving Certificate equivalent to S.S.L.C. ஆகும். அதைத் தவறுதலாகப் புரிந்து கொண்டு பதவி உயர்வு கொடுக்கவில்லை என்று சொல்கிறார்கள். அது உண்மையானால், அதை நீக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன். இன்னொரு சாரார் அதுவல்ல உண்மை. 2, 3 பேர்கள் ஸ்ட்ரைக்கில் ஈடுபட்டார்கள். அதனால் தான் பதவி உயர்வு கொடுக்கவில்லை என்று சொல்லுகிறார்கள். அது உண்மையானால், ஸ்ட்ரைக்கில் ஈடுபட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்து பதவி உயர்வு கொடுக்காமல் நிறுத்திவிட்டு மற்றவர்களுக்கு உரிய நேரத்தில் உரிய முறையில் பதவி உயர்வு கொடுக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டு, மின்சாரத்துறையும், மின்சார அமைச்சர் அவர்களும் இந்தியாவிலே பிறபகுதிகளில் உள்ள நிபுணர்கள் எல்லாம் இங்கு வந்து நம்மைப் பின்பற்றும் நிலைக்கு நம் நிலையை உயர்த்தியதற்காக வாழ்த்தி நன்றி கூறுகிறேன்.

5-30 p.m.

* திரு. எஸ். டி. சுந்தரம் : தலைவர் அவர்களே, மனித சக்தியிலே மிக வேகமான ஒரு சக்தி. ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரை அதன் தேவையின் வேகம் மின்சாரத்தின் வேகத்தை விட அதிகமாக இருக்கிறது என்பது நிபுணர்களும் அனுபவம் மிக்க பெரியவர்களும் கூறுவதிலிருந்து தெரிகிறது. ஒரு மிகப் பெரிய உலக சோஷலிஸ ஸ்தாபனத்தை உண்டாக்கிய பொருளாதார அறிஞர் சொன்னார் கிராமங்கள் மின்சாரம்தான் சோஷலிஸம் என்று. நாம் அதோடுகூட இரண்டு மூன்று Plus போட்டுக்கொண்டு முன்னேறுகிறோம். கிராமங்கள் மின்சாரம் தேவை பசி—இரண்டு, மூன்று Plus உடன் ஜனநாயக சோஷலிஸ்டுகளாகிய நாங்கள் பெருமைப்படத்தக்கவாறு நான்கு Plus-ஐப் போட்டுக் கொண்டு மின்சாரத் துறையில் தமிழகத்தைப் பொறுத்தவரை முன்னேறி வருகிறோம். நாம் போற்றுவது

[திரு. எஸ். டி. சுந்தரம்] [20th July 1964

தான் இல்லே. திறமான புலமையெனில் பிறநாட்டார் அதை வணக்கம் செய்தல் வேண்டும். வெளி உலகத்திலிருந்தும் மற்ற ராஜ்யங்களிலிருந்தும் இங்கு நம் ராஜ்யத்தைப் பார்க்க வருகிறவர்களைக் கவருவது, தொழில் துறையும், கல்வித்துறையும் தொழில் துறையை வெற்றிகரமாக நடத்தி வருவதை நாம் பாராட்டுவதில் ஆச்சரியம் இல்லே. எல்லோரும் பாராட்டுகிறார்கள். அந்தப் பாராட்டுதலேப் பெற்று இந்த மின்சாரத் துறை மேலும் மேலும் வளரும் என்பதில் ஐயமில்லே. தொழிலுக்கு உயிராய் இந்த மின்சாரத்துறையை இயக்கி வரும் போர்டார் அவர்களுக்கு அவர்களுக்குரிய முறையில் வேகமாகச் சென்று கொண்டு இருக்கிறார்கள். மற்றொரு அறிஞர் கூறியதுபோல, தேவையின் பசி, பசி காரணமாக அதிகம் வேண்டும் என்ற ஆர்வத்தின் காரணமாக நமக்கு ஆவேசம் இருக்கலாம். ஆனல் நாம் என்னதான் வேகமாய் இருந்தாலும், மின்சக்தி முன்னேற்றம் மனவேகத்தைத் திருப்திப் படுத்த முடியாது.

மற்றொன்று, இந்த மின்சாரத்தை உபயோகிப்பவர்கள், மிகப் பெரிய தொழிலதிபர்களும், தொழில்துறையினரும், மிக முக்கியமான விவசாயத்துறையினரும் ஆவர். இடையிலே வீட்டிலே உபயோகப்படுத்தும் நடுத்தர வகுப்பாரின் ஒரு சிறு குறையை மட்டும் நாம் எல்லோரும் அனுபவிப்பவர்கள் என்ற முறையில் குறிப்பிடத்தான் பேச முன்வந்தேன். கனம் அங்கத்தினர் திரு. ராஜா அய்யர் அவர்கள் மட்டும் இதைக் குறிப்பிட்டார்கள். நடுத்தர வகுப்பார், அதிலும் வாடகை வீட்டில் வசிப்பவர்களுக்கு, ஒரு மாதத்துக்கு எவ்வளவு காண்டு செலவழிக்கிறார்களோ அதைப் போல் மூன்று பங்கு டிபாசிட் கட்டவேண்டிய நிலே உள்ளது. சொந்த வீட்டில் இருக்கிறவர்கள் வேண்டுமானல் இந்த டிபாசிட்டைக் கட்ட முன் வரலாம். காரணம் அவர்கள் அதை எப்போது வேண்டுமானலும் பெற்றுக்கொள்ளலாம், தொடர்ந்து வீட்டிலே இருக்கிறபடியால். வாடகைக்கு இருக்கும் நடுத்தர வகுப்பினர் அதைக் கட்டிவிட்டால், வீடுமாற்றும் போது அதைத் திருப்பிப் பெறும் வாய்ப்பை இழந்து விடுகிறார்கள். அது மாத்திரமல்ல. மின்சாரத்தை வருஷத்தில் ஏதோ சில மாதங்களில் அதிகமாக உபயோகப்படுத்தலாம். ஒரு மாதம் உபயோகப்படுத்தும் தொகையைப் போல் 3 மடங்கு கட்டச் சொல்வதைவிட, 3 மாதங்கள் தொடர்ந்து உபயோகப்படுத்தினல், அந்த 3 மாதத் தொகையைக் கட்ட வேண்டும் என்றுவது சொன்னல் நியாயமாக இருக்கும். அவர்களுக்குத் திருப்தியும் இருக்கும். இது மிகவும் சிறிய விஷயம். ஆனல் அதை அனுபவிப்பவர்கள் நடுத்தர வகுப்பினர். மேல் வகுப்பினருக்கும் கடைநிலே வகுப்பினருக்கும் விமோசனம் துரிதமாகக் கிடைக்கிறது. நடுத்தர வகுப்பினரின் பிரச்னைகள் எளிதில் அணுக முடியாதபடி. அவர்களேப் பாதிக்கின்றன. அவர்கள் தாங்கள் படும் பாட்டினேச் சொல்ல முடியாமல் விழுங்குகிறார்கள். காரணம் அவர்கள் நேரடியாக போர்டாருக்கு

20th July 1964] [திரு. எஸ். டி. சுந்தரம்]

ரிபோர்ட் செய்ய முடியாது. அவர்களுக்கு அந்த வாய்ப்பு இல்லே. வீட்டு சொந்தக்காரர்கள் பேரில் கட்டுகிறார்கள். ஆகவே ரிப்போர்ட் செய்யும் உரிமையும் இல்லே. மற்றொன்று அவர்கள் குடியிருக்கிற வீட்டில் மின்சார லேனில் சரியாக இல்லாமல் பழுது பட்டுப் போய்க்கிடக்கிறது. அதனல் விபத்துகள் ஏற்படுகின்றன. வீட்டுச் சொந்தக்காரரின் அதிருப்தியைச் சம்பாதிக்க வேண்டி வருமே என்று ரிபோர்ட் செய்யப் பயப்படுகிறார்கள். இத்தனே வருஷத்துக்கு ஒரு முறை வீட்டு லேனிங் எல்லாம் சரியாக இருக்கிறதா என்று பார்க்க வேண்டும் என்று இருக்கிறது. அது அமுலில் இருக்கிறதா என்பதைப்பற்றி போர்டார் அவர்கள் நன்கு பரிசிலிக்க வேண்டும். வீட்டில் வாடகைக்கு இருக்கிறவர்கள் ரிபோர்ட்டு வந்தால்தான் கவனிக்க வேண்டுமென்றல், அவர்கள் ரிபோர்ட் செய்ய அசக்தர்களாயிருக்கிறார்கள், வீட்டு சொந்தக்காரரின் அதிருப்தியைப் பெறுவோம் என்ற அச்சத்தினல். ஆகவே இத்தனே ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று வாடகைக்கு விடப்பட்டிருக்கும் வீடுகளில் எலக்ட்ரிக் fitting சரியாக இருக்கிறதா, leakage இல்லாமல் இருக்கிறதா என்று பரிவோடு, நகர்ப்புறத்தில் வசிக்கும் நடுத்தர மக்கள் வீடுகளில் சிரத்தையோடு பார்க்க வேண்டும். அவர்களாகவே இத்தனே ஆண்டுகளுக்கு ஒரு முறை பரிசீலனே என்பதை அக்கறையோடு அமுல் நடத்துவார்களானல், நடுத்தரப் பகுதியினரின் அதிருப்தியை நீக்க முடியும். இந்தச் சிறு பிரச்னையைப்பற்றித்தான் பேசவேண்டுமென்றிருந்தேன். இதை உங்கள் முன்னிலேயில் வைக்கிறேன். என் பேச்சை முடித்துக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN: Sri M. Ethirajalu will now speak. He will be the last speaker.

திரு. எம். எத்திராஜுலு: கனம் தலேவர் அவர்களே, இந்த மின்சார வரவு-செலவுத் திட்டத்தை ஆதரித்து சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். எனக்கு முன்னதாகப் பேசியவர்கள் எல்லாம் இதில் இருக்கிற குறைகளேயும் சாதகங்களேயும் நன்றாகப் பேசி விட்டார்கள். இருப்பினும்கூட இரண்டு வார்த்தைகள் சொல்லி முடித்துக் கொள்கிறேன். நாடு தொழில் இலாகா அமைச்சர் அவர்கள் கையில் இந்த இலாகாவும் இருப்பது பற்றி இன்றைக்கு மகிழாதவர்கள் இல்லே. எனென்றல் ஒரு தொழில் இயங்கவேண்டுமென்றல் மின்சாரம் அதனுடன் இருக்கிற காரணத்தால் இரண்டையும் ஒன்று சேர்த்து இருக்கக் கூடிய நிலே அரசாங்கத்தில் இருப்பது பற்றி எல்லோரும் மகிழ்ச்சி அடைகிறார்கள். ஆனல் இந்த இலாகாவானது சர்க்கார் அடிப்படையிலே இயங்குவதற்கு தலேமை ஸ்தாபனத்திலுள்ள அதிகாரிகள் நினேக்கவில்லே. ஆனல் அதன் அடிப்படையில் வேலே செய்கிறவர்கள்தான் சில சமயங்களில் நினேக்கிறார்கள். அதைத்தான் அகற்ற வேண்டும். அதை அகற்றுவது இன்றைக்கும் பிரமாதமான காரியம் இல்லே என்று சொல்ல விரும்புகிறேன். இங்கு

பேசிய அங்கத்தினர்கள் அவரவர்கள் தொகுதிகளிலுள்ள வேலை குறைகளை எல்லாம் அங்கு வேலை செய்கிற அரசாங்க உத்யோகஸ்தர்களைப் பற்றிய குறைகளை இங்கு வந்து பேசினால் அவர்களுக்கு தாங்களாகவே திருத்திக் கொள்ள ஒரு வாய்ப்பு ஏற்படும் என்று நம்புகிறேன். அவரவர்கள் அந்தந்தப் பகுதிகளில் ஏற்படக் கூடிய தவறுகளைச் சட்ட மன்றத்தில் சொல்லக்கூடிய வாய்ப்பு இருக்கிறது என்று இருந்தாலே நமக்கு பயனை நமக்கு ஏதாவது தீங்கு ஏற்படும் என்ற பயம் ஏற்பட்டாலே அதே ரெட் டேபிலம் ஒழிப்பதற்கு முக்கிய காரணமாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். இங்கு பேசுகிற குறைகள் இங்கு இருக்கிற உயர்தர அதிகாரிகளுக்குத் தெரிந்தால் மட்டும் போதாது. இது உடனடியாக இங்கு இன்ன இன்ன பேசப்படுகிறது என்று அங்கு இருக்கிற ஊழியர்கள் சரியாக வேலைகளைக் கவனிக்கவில்லை. ஆனால், காலதாமதம் செய்கிறார்கள் என்ற நிலை சட்டமன்றத்தில் எழுப்பப்படுகிறது என்று அந்தந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய அதிகாரிகளுக்கு உயர்தர அதிகாரிகளுக்கு அறிவிப்பினால் அவர்கள் அவர்களாகவே திருந்திக் கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

whether this will not affect the fundamental rights. Begging *per se* is not an offence. It is an unreasonable offence according to me. Therefore, the definition requires more careful handling. Of course, I know the fate of my amendment and it is not going to be accepted. As rightly pointed out by the hon. the Leader of the Opposition, begging has acquired a religious significance in our country, as we know a majority of our community has a religious background and attach more importance to begging for ceremonial purposes. We must not enact this legislation at the present moment without carefully defining the expression " begging " and without taking into consideration the traditions built up for about 2,100 years. In our country begging is no offence at all. On the other hand, the best men among us were asked to beg for their food from door to door. The great Appar has sung hymns in praise of Lord Shiva going from house to house begging. Any Police officer can arrest without warrant a person if he sees him begging. Begging has been sanctified in this country. Lord Buddha was a great rational person. He went throughout the whole of our country—from one end of the country to the other—with the begging bowl donning ochre robes. So, begging as such can never be made an offence in our country. It has got a religious tinge. There are people among large sections of the community who beg for religious purposes. His Holiness Maha Desikan throughout his hundred years of life lived begging everywhere. That is the belief of our people and nobody can gainsay it. In this twentieth century we cannot say so. I do not want to say that this Bill should not be passed, but the definition of begging should be carefully worded and the definition should not hurt the religious significance which has been given to ' begging '. This is absolutely necessary. Of course, people who adopt begging as a profession must be apprehended and put in the work-houses. This will help to reduce the number of beggars. I am not against such type of beggars being put in the work-houses. The definition should not be so comprehensive especially when begging has a special significance in our country. The definition is largely and fairly wide and somebody in the Select Committee said that he was very glad of the comprehensive definition. But now the definition is very wide and a narrow interpretation must be given for ' begging '. As it is, the Police may apprehend any person who is begging for religious purpose and send him to the work-house. Therefore, ' begging ' must be given a narrow interpretation. This piece of legislation is intended to arrest persons who take to begging as a profession and to put them in work-houses. I am not against it. The modern idea of preventing beggary as a profession is all right, and I welcome this with proper restrictions on the definition of begging, so that it would not be used as an instrument of oppression in the hands of the Police officer. If it is entrusted to a Social Board, I have no objection. But it is entrusted to the Police. Therefore, Sir, a Police officer may decide to use this power. He may be right so far as the wording of the clause is concerned. I have

23rd July 1964] [Sri K. Balasubramanya Ayyer]

given notice of an amendment for the purpose of saying clearly what is really meant by begging. It must be given a narrow interpretation. That is my point. Otherwise, it will hurt and cause harm in many places. That is why I have given notice of the amendment. The difficulty here is that no amendment is passed. The Bill will not be sent to the other House with the amendment passed in the House. I do not care for the fate of my amendment. I have already known that it will not be passed. But I must point out and I am anxious to point out what I feel about it. That should be mentioned here. The amendment is only an expression of my feelings in this matter. Therefore, Sir, I have given notice of an amendment. Begging should not be given a secular interpretation. It has got a religious and cultural significance. It was not carefully defined in the 1945 Act. They had not defined it at all. But that position was much better. 4-10 p.m.

There is one other difficulty here. They have mentioned about public places. There is begging going on in railway carriages and railway stations. These places are the property of the Union Government. I do not know how we can legislate in respect of railway stations and railway carriages and so on. It is a matter of doubt. I can understand our own public places in our State. But so far as railway stations are concerned, I do not know what will happen. Begging will go on merrily there. It means only that. Nothing will be done, and begging will go on in railway stations and trains. Singing and begging will go on here. We will have to address the Central Government also to take steps in the matter. I do not think there is any constitutional objection. We have to be careful about this. Therefore, I feel that so far as this is concerned, the definition of begging has to be carefully put, and it must be put in a proper manner. The whole thing has to be re-shaped and well put. I do not think that it will be done now. I have given expression to my opinion and here my duty as a legislator has ended.

* திரு. என். வி. நடராசன் : கனம் தலைவர் அவர்களே, இந்த மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள பிச்சை எடுப்பு தடுப்பு சட்டத்திருத்த மசோதாவின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தச் சட்டம் ஏற்கெனவே நடைமுறையில் இருந்து வந்தும் அதைத் தீவிரமாகச் செயல்படுத்தவில்லை என்றே தெரியவருகிறது. பொதுவாக இருந்தத் திருத்தைக் குறித்துப் பேசிய கனம் அங்கத்தினர் ஒருவர் பிச்சை எடுப்பது ஆண்டவனுல் படைக்கப்பட்ட ஒன்றுகும் என்று சொன்னர்கள். நான் மிகப்பணிவோடு தெரிவித்துக் கொள்வேன். ஏற்கெனவே சமுதாயத்தில் இப்படிப்பட்ட காரியங்களில் ஆண்டவன் தன்மை மீதும் ஆண்டவன் மீதும் எவ்வளவோ பழிகள் சுமத்தப்பட்டுள்ள இந்த நாளில் இந்தப் பழியையும் ஆண்டவன் மீது சுமத்த வேண்டாம் என்று பணிவாகக் கேட்டுக் கொள்ளுகிறேன். மனிதன் பிறக்கும்போது பிச்சைக்காரனுகப் பிறப்பதில்லை. ஆண்டவன் படைப்பில் பிச்சைக்காரன் என்றே ஏழை என்றே

[திரு. என். வி. நடராசன்] [23rd July 1964

அடிமை என்ரே இல்லே என்பது நாகரிக உலகத்தில் உள்ள நாம் அனைவரும் உணர்ந்ததாகும். சமுதாயத்திலுள்ள கோளாறு களுக்குக் காரணம் மனிதனின் சுயநலம்தான். இதற்கெல்லாம் ஆண்டவன் மீது பழியைப் போட்டுவிட்டு, தலைவிதிப்படி நடக் கட்டும் என்ரால், அதை இன்றைய உலகம் ஒப்புக்கொள்ளாது என்பது என் எண்ணம்.

அதேபோல், இன்னும் சமய உணர்ச்சி பற்றியெல்லாம் மதிப்புக் குரிய எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் துணைத்தலைவர் அவர் களும் எடுத்துக் காட்டினார்கள். அவர்கள் காட்டிய அந்த உணர்ச்சிகளை நான் இது சமயம் ஆராய விரும்பவில்லை என்ரும் ஒன்றை நான் அவர்களுக்கும் இந்தச் சபைக்கும் தெரிவித்துக் கொள்ளுவேன். எவ்வளவோ சமய உணர்ச்சிகளும் சமுதாய சம்பிரதாயங்களும் இன்றையதினம் இயற்கையாகவே மாறி வந்திருக்கின்றன என்பதை நாம் எல்லோரும் ஒப்புக்கொள்ள வேண்டும். 50 அல்லது 40 ஆண்டுகளுக்கு முன்னதாக, என் 10 ஆண்டுகளுக்கு முன்னதாகக்கூட, சங்கராச்சாரியார் போன்ற பெரிய மதத்தலைவர்கள் ஒப்புக்கொள்ளாத காரியத்தை இந்தக் காலத்திலே அவர்கள் வலிய வந்து ஒப்புக்கொள்வதைக் காணு கிறோம். இன்றையதினம் சமுதாயத் துறையில் இருக்கும் பற்பல குறைபாடுகள் தீர்க்கப்பட்டு வருவதை அவர்கள் நன்ரக அறி வார்கள். எனவே அந்த சமுதாயத் துறையைப் பிடித்துள்ள இந்த நோயை, மிகத் தேர்ச்சி பெற்ற அகில உலகப் புகழ் பெற்ற டாக்டராக இருந்து எப்படி ஆபரேஷன் செய்கிறாரோ, அப்படி முக்கிய கவனம் செலுத்தி இந்தக் குறையையும் ஒழிக்க வேண்டும் என்பதுதான் நம் அனைவரின் எண்ணமாக இருக்கிறது என்று தெரிவித்துக் கொள்ளுவேன். பஸ் - நிலையங்களிலும் ரயில்வே நிலையங்களிலும் மற்ற பொது இடங்களிலும் இந்தப் பிச்சை எடுக்கும் நிலை நம் சமுதாயத்தை எவ்வளவு செல்லரிக்கிறது என்பதை நான் வேதனையோடு தெரிவித்துக் கொள்ளுவேன். நான் ரயிலில் பிரயாணம் செய்யும்போது சின்னஞ் சிறுவர்கள், வயது முதிர்ந்தவர்கள், தாய்மார்கள் பக்கத்தில் குழந்தையை வைத்துக்கொண்டு பிச்சை எடுப்பதைக்கண்டு நான் கண்ணீர் வடித்திருக்கிறேன். அவர்களுடைய நிலையைப்பார்க்கும்போது எதிர்காலத்தில், இன்றைய தினம் ஏழை, நடுத்தர மக்களாக இருக்கிறவர்கள் நிலை, அந்த நிலைக்கு வருமோ என்ற எண்ணம் ஏற்பட்டு நடுக்கம் ஏற்படுகிறது. அந்தநிலை நிச்சயமாக வளரக் கூடாது. கனம் அங்கத்தினர் திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சொன்னார்கள், பிச்சை எடுப்பதை ஒழிக்கவே முடியாது. உலகத்தில் எங்கேயும் ஒழித்ததில்லை என்று. சர்க்கார் கட்சித் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் அகில உலகத்தையும் பவனி வரும் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார்கள். மற்ற மேலிய நாடுகளில் எல்லாம் இந்தப் பிச்சைக்காரர்கள் தொல்லையை கூடு மான அளவு குறைத்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ளுவார்கள். தீராத வியாதியை எல்லாம் தீர்த்து வைக்கும் இந்த நாளில் இந்தப் பிச்சைக்காரர் பிரச்னையை நாம் போக்க முடி யாது என்ரால் அதை என்னால் ஒப்புக்கொள்ள முடியாது.

23rd July 1964] [திரு. என். வி. நடராசன்]

பெரிய ஏகாதிபத்திய வெறி பிடித்த பிரிட்டிஷ் ஆட்சியையே விரட்டி அடித்தோம் என்று சொல்லும்போது சமுதாயத்திலே உள்ள இந்தக் குறைகளை நாம் தீர்க்க முடியாதென்ரால் நான் அதை ஒப்புக்கொள்ள முடியாது. எனவே, இந்தத் துறையில் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் எடுத்துக் காட்டியது போல், கூடுமான அளவு சமய உணர்ச்சிகளுக்கு மதிப்பு அளிக்கப்பட வேண்டுமென்ரும். அதற்கு முழு உரிமை அளிப்பதைக் குறைத்து நாம் கூடுமான அளவுக்கு பழமைக்கும் புதுமைக்கும் அந்தக் காலத்துக்கும் இந்தக் காலத்துக்கும் பாலம் கட்டுவது போல் நிலைமைகளை நினைவில் கொண்டு இதைத் தீர்க்க வேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன்.

அதே போல், கனம் பால்சுப்ரமணிய அய்யர் அவர்கள் பழைய சரித்திரங்களையும் சொன்னார்கள். அதை ஆராய்ந்து பதில் சொல்லக்கூடிய நிலைக்கு நான் வரவில்லை என்று பணிவாகச் சொல்லிக் கொள்ளுகிறேன். ஒரு பெரிய பக்தர் ஒருவர் இருந் தார். சர்க்கார் கஜானா பணத்தை எடுத்து ஆண்டவன் திருப் பணிக்குச் செலவு செய்தார். அன்றைய அரசாங்கம் விட்டு விட்டது. இன்றைய தினம் ஒரு பக்தர் அதைப்போல் செய்வா ரானால் அடுத்த நாள் அவரை அரசாங்கம் சிறையில் வைத்து விடும். ஆண்டவன் மீது பழியைப் போட்டு விட்டு இப்போர்ப்பட்ட காரியங்கள் செய்வதைவிட அறிவுத்துறையில் மூன்னேறி யிருப்பதை, அடிப்படையாக வைத்து நிவர்த்தி செய்ய வேண்டு மென்று பணிவாகத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இன்று நாம் சுதந்திரம் பெற்று இருக்கிறோம். அப்போர்ப் பட்ட நாட்டில் பிச்சைக்காரர்கள் வளர்ந்து வருகிறார்கள் என்ரால் மகன் கலெக்டராக இருந்து கொண்டு தாய் பிச்சை எடுக்கிறாள் என்ரால், மகன் பதவி வகிப்பது எப்படிப் பரிதாபமாக இருக்க முடியுமோ அதே போல் நாம் இன்றையத் தினம் சுதந்திரம், சுய ராஜ்யம் பெற்றுள்ள இந்த நாட்டில் பிச்சைக்காரர்களின் கொடுமை களைக் கூடுமான அளவு படிப்படியாகக் குறைக்கவில்லை யென்ரால், பெற்ற சுதந்திரத்திற்காகப் பாடுபட்ட தலைவர் களுக்கும் மகாத்மாகாந்தி அடிகளைப் போன்ற தலைவர்களுக்கும் நாம் காட்டும் கைமாறு ஆகாது என்று தெரிவித்துக் கொள்ளு கிறேன்.

நான் பிச்சைக்காரர்கள் விஷயத்தில் இவ்வளவு உணர்ச்சியுடன் சொல்வதற்கு காரணம். நான் கடந்த மே மாதம் 31-ந் தேதி உடுமலையில் ஒரு கூட்டத்தில் பேசி விட்டு மறு நாள் ஒரு பஸ்ஸில் வருகிறேன். கோவையைச் சேர்ந்த ஒரு தொழில் பிரமுகர் அதே பஸ்ஸில் வருகிறார். ஒருவன் பாட்டுப் பாடிக்கொண்டு வருகிறான். 15-வயது இளைஞன். நல்ல கட்டு மஸ்தான தேகம் உடையவன். அவர் அவனைப் பார்த்து இந்த வயதில் ஏன் பிச்சை எடுக்கிறாய் என்னுடன் வா வேலை தருகிறேன் என்றார். இவன் சினிமா பாட்டுப் பாட ஆரம்பித்தான். "உன்னைச் சொல்லிக் குற்றமில்லை, என்னைச் சொல்லிக் குற்றமில்லை, காலம் செய்த கோலமடா,

[திரு. என். வி. நடராசன்] [23rd July 1964

கடவுள் செய்த குற்றமடா", என்று பாடினான். எல்லோரும் சிரித்து விட்டார்கள். அவர் வெட்கித் தலைகுனிந்து விட்டார். அச்சிறுவனை அழைத்து, "நீ சமுதாயத்தைக் கெடுக்கும்படியான ஒரு போக்கிரியாக இருக்கிறாய் உன்னைப் போன்றவர்கள் சமுதாயத்தின் எதிர்க் காலச் செல்வங்கள் என்று நினைக்கிறோம், நீ எவ்வளவு போக்கிரித்தனமாக பதில் சொல்லுகிறாய்" என்று கண்டித்து பஸ்ஸில் கிடைத்த பணத்தை மீண்டும் வாங்கியவர்களிடம் திருப்பிக் கொடுக்கும்படியான நிலைமையைச் செய்தேன். உடல் உழைப்பும் அறிவுத்திறனும் உடையவர்கள் இந்த சமுதாயத்தில் உழைப்பால் முன்னேற்றம் காணக்கூடியவர்கள் எந்த உழைப்புமின்றி வாழ வேண்டுமென்று சோம்பேறியாக அவற்றைப் பாழாக்குகிறார்கள் என்றால், அதைவிட சமுதாயத்திற்குச் செய்யப்படும் பெரும் குற்றம் வேறு இருக்க முடியாது. இவைகளை எல்லாம் நினைவில் கொண்டு நமது சர்க்கார் இந்தப் பிரச்னையை உடனடியாகக் கவனிக்க வேண்டும். கனம் அங்கத்தினர் திரு. ராமதாஸ் அவர்கள் சொன்னது போல் இந்தச் சட்டத்தால் ஏற்படும் விளைவுகளை மனதில் வைத்து, இந்தப் பிரச்னை புறையோடிப் போய் உள்ள கொடிய நோய் என்ற அடிப்படையில், தீர்வு காண வேண்டுமென்று கூறி முடித்துக் கொள்கிறேன்.

4-20 p.m.

• SRIMATHI LAKSHMI KRISHNAMOORTHY: Mr. Chairman, I most heartily welcome this Bill. Very fine sentiments have been expressed in this august chamber by people who are much senior to me. I have to bow to them. But I request them to kindly come to the present-day conditions when begging is not confined to either sadhus or scholars alone. All anti-social elements take great advantage of this feeling of sentiment especially among the very generous citizens of this land of ours. We want to encourage in-tourism and international tourism. All of us are aware that this begging has attained such menacing proportions and painful stages that it will only prevent others from going about and seeing our beautiful country. I understand that by bringing in this legislation we are not going to put an end to this very sad profession. This needs a lot of after-care and follow-up work. I am sure that the introduction of this Bill is only the first step, which will be followed by more constructive steps. For instance, in the report it is shown that there are 8,000 beggars in the City. But there are facilities to house only a thousand of them. I am afraid that bringing in this legislation without adequate provision to take in all the beggars in the work-houses or homes is not going to take us anywhere. For this purpose, may I put before this House a few suggestions humbly? It may not be possible for the Government to come forward immediately to act up the suggestion, for the financial implication will, I am sure, be stupendous. But, in conformity with the sentiment here expressed, we may, as it has been done in overseas countries, have what is called the community chest so that all people who want to contribute alms may contribute to this pool which can finance institutions that will be started. As has been expressed by one Hon. Member, probably a fraction of

23rd July 1964] [Srimathi Lakshmi Krishnamoorthy]

a per cent of either the profession tax or the house tax may be collected, which need not warrant any more administrative staff, so that whatever is collected can be spent on this particular item of expenditure.

As has been expressed by Hon. Members previously, we do need severe segregation of beggars, especially children. I am sure that if we round up all the children who are under 14 years and take them to proper institutions and give them education, begging will completely disappear from this country, say, perhaps in a generation. Unless and until we provide the proper institutions, it may not be possible to tackle the problem of begging by children.

As far as the ablebodied beggars are concerned, when once they are taken to the homes, they must be given sufficient hard manual labour. Unless this is done, it will not be possible to have any control over them. There will be people escaping, and it will lead to still further problems.

We all know that there is a dearth of several things in a City like Madras. Why not start a market garden, a dairy, or a poultry farm? We are already spending thousands and even lakhs of rupees through our blocks on these items. Why not utilise this man-power which is going to waste. The amount that is spent through the blocks may be combined with the amount to be spent on the City on the same items and then this social evil may be eliminated.

Once again I have to say this. It may not be palatable to the pious Hindus. But I would like to point out to them humbly that we are supposed to be a very modern State and we are supposed to be marching forward. We are probably trying to do too much within 25 years what other nations did in a century. I am afraid we have to take firm steps to prevent begging.

I have mentioned, Sir, that we have to levy a tax. This may not be welcomed by all the people. But it need not be an additional tax. Take just a fraction of the tax already collected, as expressed by one Hon. Member. I am sure that every citizen of Madras will gladly contribute to this fund if he can be only sure that the begging menace will be completely eliminated from our State.

• DR. H. V. HANDE: Mr. Chairman, this amendment Bill is a clear indication that our Government have taken a very serious attitude towards this acute problem of asking for alms. I wish to submit that the assessment of the problem is perfectly all right. But the attitude taken to the problem could have been different. The Government have proposed to express their disgust for this menace by way of bringing in this faulty amendment Bill. Already we have too many amendments and too many laws prohibiting a number of social evils. But this is essentially a problem that should be tackled by the sociologists, economists and psychologists.

[Dr. H. V. Hande] [23rd July 1964

This is not a subject that could be very easily treated by the legislature. Economically speaking, it is really a matter of great grief for us that in spite of 17 years of Democratic Socialism, we are driven to the necessity of bringing before the legislature this Bill. That means that all the efforts which we are putting in to stabilise our plans have not properly fructified. In all our planning, we have not made adequate provision to get rid of this problem of begging. Suddenly we bring in this legislation. In trying to prevent begging, we are tightening all the previous laws by this amendment. Is it really possible to do this ? We must always consider the fact that before we bring in an amendment Bill we should see that enough provision is made for all the people in the Homes. There was the Select Committee which went into the subject very extensively. But it has not told us the exact number of beggars all over the State. The figures it has given cover only the City. In the entire State, how many beggars and Beggar Homes are there ? What is the provision made for this large number of beggars, and how many people can be accommodated in the Beggar Homes ? This aspect of the matter has to be thoroughly gone into by this amendment Bill. Let us, for instance, find out whether, according to the present provision, we are able to provide for all the people whom the executive may arrest ? As the Act stands now, the methods by which we can book these people are not very tight. So, we are bringing in this amendment Bill. By this process of tightening, the number of people who will have to be transported to these Homes will considerably increase. When the provisions are tightened, I do not know whether it will be possible to accommodrate all the beggars in the Beggar Homes. Psychologically speaking, I am very glad this amendment Bill has been brought in, because this will be very much appreciated by the beggars mainly. I am quite sure most of you would have watched the reaction of the beggars. The moment a person goes for alms, and if one talks to him and discusses with him his problems, then he is immensely happy. If you scold him why he could not take up a better avocation

1-30 p.m.

even then he is happy. But if you just ignore him, if you do not take cognizance of his existence, he is very depressed and dejected. Therefore, from his point of view, he is happy. But here is a Government just taking full cognizance of his existence. To that extent, the agony goes. But the special provisions which we are making for him are very, very inadequate. Sociologically speaking, I do not know whether I should agree with what the previous Members said now. There is a point which I would request them to consider very seriously. We are trying to mix up religion with our economics. We are trying to mix up religion with so many other subjects. I am quite convinced that there are two aspects in begging. One is the religious aspect, and I am not going into it. Sri Balasubramania Ayyar has suggested some amendments which I really appreciate. But the fact remains that the moment you go into the street you find a swarm of beggars. It is really a matter of great tragedy. Any foreigner who visits India would be shocked

23rd July 1964] [Dr. H. V. Hande]

at the colossal way in which these people are going about the streets. It is a very serious problem. Unfortunately, we have not yet become sensitive to this problem. I can only say that the existence of beggars is a sort of disgrace for all of us. Every one of us has got a certain amount of responsibility in this. I would suggest a concrete measure. So many methods of preventing this evil have been suggested. But I would submit a small suggestion of mine. Let every legislator, irrespective of his party affiliations, take upon himself to provide for one family turned off the roads. Let us try to do this. In fact, in my own personal life I have tried this very honestly with tremendous success. Let us try and discuss the problem with a beggar whom we come across. I have myself discussed this problem personally with so many people and suggested so many ways of eking out an existence. Let us forget all the Acts and the amendments. Here is a very serious sociological problem. Let us try to find some solution collectively. Let every legislator try to solve the problem of one family. If he succeeds, let him try to tell other friends also. We have some considerable influence in our private life. We shall tell every friend of ours, " Here is a problem. You take up the problem at a personal level. Let us solve the problem of one family." If something of this type is done, definitely there is a solution. Unless we are sensitive to this problem, we cannot solve it. We have become thickskinned. When we are walking along the roads, when there is a swarm of beggars, we are not even seeing them through our mental eye. Just our ordinary eyes see them. It does not make an impression on us. But this is a very important problem.

Coming to the Statement of Objects and Reasons, I am very glad that Madras City has been included, because this problem is in its acutest form in the City of Madras. So, I really congratulate the Minister on including the Madras City in this Bill.

Now, I would like to submit another point. When we come to tourism, as our late beloved Nehruji said, we must encourage tourism as far as possible. When, for instance, we go to Mahabalipuram, there are what are known as guides—Official guides and non-official guides. A swarm of them we see. I was watching the situation several times. A swarm of them come and start thrusting themselves upon the tourists and say, " This is this and this is that." Finally, after everything is over, they ask for a payment or a fee. I do not know under what head it comes. It was Mark Twain who pointed out in his very important book about these tourist guides. In Rome whenever a tourist goes, he finds himself surrounded by self-styled tourist guides who go on pointing out to you, " This is this and this is that ", in spite of the fact that they do not want their advice. Even Mark Twain pointed out that this seemed to be a major evil. Actually this annoys the tourists. I would suggest to the Government to think of extending this legislation to places like Mahabalipuram, and to see that these people who are self-styled guides also are brought within the purview of this legislation.

[Dr. H. V. Hande] [23rd July 1964

Finally, I have to express my wholehearted support to this Bill with one rider. I request the Hon. Minister to take it up immediately at a personal level from the point of view of her office also in order to see that we all put our resources together and try to increase the number of these homes for beggars.

*திரு. க. அன்பழகன்: சட்டமன்றத் தலைவர் அவர்களே, இன்றைய சமுதாயத்தினுடைய ஒரு பெருங்குறையாக இருக்கிற பிச்சை எடுக்கும் வாழ்க்கை முறையை நிறுத்தும் நோக்கத்தோடு இந்த மசோதா இங்கு கொண்டு வரப்பட்டிருக்கிறது. 19 ஆண்டுகளுக்கு முன்னாலே கொண்டு வரப்பட்ட சட்டம் முழு அளவுக்கு பயன் பெறவில்லை என்ற சூழ்நிலையில் அதை முழு அளவு வெற்றி பெறச் செய்ய வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டுள்ள காரணத்தால் இதை நான் வரவேற்கிறேன். ஆனால் இன்றைய தினம் சட்டங்களைக் கொண்டு வருகிற உரிமை பெற்றிருக்கிற அரசாங்கம் அந்தச் சட்டங்களை நிறைவேற்றுகிற பொழுது பல்வேறு விதமான குறைகள் வளருவதற்கு இடம் தந்துவிடுகிற காரணத்தால், இப்படிப்பட்ட சட்டங்கள் கொண்டு வரும்போது இது ஒரு சமுதாயப் பிரச்னை என்ற அடிப்படையில் எண்ணிப் பார்க்க வேண்டும் என்று வேண்டிக்கொள்கிறேன். இந்த அவையில் பேசிய வெவ்வேறு கட்சியைச் சேர்ந்த அறிவு சார்ந்த மதிப்பிற்குரிய உறுப்பினர்கள் தங்களுடைய உள்ளத்தில் தோன்றிய பல்வேறு வகையான உணர்ச்சிகளையும் எடுத்துக்காட்ட நேரிட்டது. உணர்ச்சியை எடுத்துக்காட்ட நேரிடுவதற்குக் காரணம் இந்தப் பிரச்னை மக்களுடைய உள்ளத்தில் உறுத்திக் கொண்டிருக்கிற ஒன்று என்பதுதான். ஆனால் அப்படி உறுத்திக்கொண்டிருக்கிற பிரச்னையாக இருந்தாலும்கூட இதற்காகக் கொண்டுவரப்படுகிற சட்டத்தால் பாதிக்கப்படக்கூடியவர்கள் என்று எண்ணுகிற பொழுது இந்தப் பிச்சைக்காரத்தனத்தை வழக்கமான தொழிலாக நடத்துகிறவர்கள் மட்டும்தான் தண்டிக்கப்படுவார்கள் என்ற நிலைமை இல்லாமல், வேறு சில நோக்கங்களுக்காக இதை நடத்துகிறவர்களும்கூட பாதிக்கப்படுவார்கள் என்று அச்சுறுவதற்குக் காரணம் இருப்பதால்தான் இதில் மாறுப்பட்ட கருத்தை சமய உணர்ச்சி உள்ள அங்கத்தினர்கள் தெரிவித்தார்கள் என்று கருதுகிறேன். உண்மையாகவே, பிச்சை எடுப்பதில் பலதரம் இருக்கிறது. உத்தியோகம் பார்ப்பவர்களில் பல தரம் இருப்பது போலவும், பொது வாழ்க்கையிலும் நன்கொடை கொடுப்பதிலும் பலதரம் இருப்பது போலவும் பிச்சை எடுப்பதிலும் அதிகாரப் பிச்சை, அதிகாரம் இல்லாத பிச்சை இருக்கிறது. தொழில் போல நடத்தும் பிச்சை, பசியால் துவண்டு போன நேரத்துப் பிச்சை, சமயத்திற்காக பிச்சை, ஆண்டவனுக்காகப் பிச்சை எனப் பலவகை இருக்கிறது. எனவே இப்படிப் பல்வேறு மக்கள், பல்வேறு விதமான நேரத்தில் பிச்சையில் ஈடுபட நேரிடுகிற காரணத்தால் இந்தச் சட்டத்தால் முதன் முதலாக நிச்சயமாக தண்டிக்கப்படுபவர்கள் இன்னார் என்பதைத் தீர்மானம் செய்வதில்

4-40 p.m.

23rd July 1964] [திரு. க. அன்பழகன்]

கவனம் வேண்டும். இதைத் தொழிலாகத் தொடர்ந்து நடத்துபவர்கள், எச்சரிக்கப்பட்டும் மறுபடியும் ஈடுபடுகிறவர்கள் என்று பார்த்து தண்டிக்க வேண்டும். முதன் முதலாக ஈடுபடுகிறவர்களுக்கு தண்டனையிலிருந்து ஒரு பாதுகாப்பு இருக்க வேண்டும். நான் சமய உணர்ச்சியை அதிகமாகப் போற்றுபவனாயிருந்தாலும்கூட, 60, 70 வயது உள்ள பெரியவர்கள் சமய உணர்ச்சியால் உந்தப்பட்டு, வீட்டில் வசதியிருந்தாலும்கூட கையில் செம்போடு பிச்சை எடுக்க வெளிவந்து, அப்போது பல வீட்டு வாசற்படியில் ஏறினாலும் அவர்களைத் தண்டிப்பது பயனளிக்காது. அவர்கள் தம்மை மதிக்காத வீட்டுக்குப் போக மாட்டார்கள், மதிக்கிற வீட்டுக்குத்தான் போவார்கள், அதைச் சமயத்தின் பேரால் செய்கிறார்கள். வேறு சிலர் இதையே ஏமாற்றுவதற்காக மேற்கொண்டும் நடத்துகிறார்கள். நேருவின் அஸ்தி என்று கூறிக் கொண்டு நன்கொடை திரட்டுபவர்களைப் போன்று பலர் ஏதோ ஒரு மனப்பான்மை காரணமாகச் செய்கிறார்கள். அது அவர்களது வாழ்க்கைத் தொழிலாக காணப்படவில்லையானால், அதற்கு விதிவிலக்கு அளிக்க இடம் இருக்க வேண்டும்.

இன்றைய தினம் பிச்சை எடுப்பதைத் தொழிலாக நடத்துபவர்கள் மக்கள் போக்குவரத்துள்ள சில முக்கியமான இடங்களில் தான் நடத்த முடியும். மக்கள் திரளுகிற இடம், ஏராளமான பிரயாணிகள் வந்து சேருகிற இடம். சினிமா கொட்டகை, சர்ச், கோவில்கள், இப்படிப்பட்ட இடங்களின் பக்கத்தில்தான் இதைத் தொழிலாக நடத்துபவர்கள் கூடுகிறார்கள். அவர்களில் பலர் நோயாளிகளாகவும் பலர் வேலை செய்ய முடியாதவர்களாகவும் இருக்கிறார்கள். வேலை செய்யக் கூடியவர்களும், மற்றவர்களை வைத்துக் கொண்டு பிழைக்கிறார்கள். உடல் வலிமை உள்ளவன் ஒருவன் ஒரு நோயாளியைக் காட்சிப் பொருளாக்கி பிச்சை எடுக்கிறான். குருடனைக் காட்டிப் பிச்சை எடுத்துக் கண் உள்ளவன் சாப்பிடுகிறான். இவைகளைத் தடுக்க இந்தச் சட்டத்தின் மூலம் வழிவகை காணவேண்டும். மேலும் சமுதாயப் பிரச்னைகள் சட்டத்தால் மட்டும் தீர்ந்து போகக்கூடியதன்று. அதற்காகச் சட்டம் வேண்டாம் என்று சொல்லவில்லை. சமுதாயப் பிரச்னையைப் பல கோணங்களிலும் அணுக வேண்டியிருக்கிறது. விபசாரத் தடைச் சட்டத்தின்படி தண்டிக்கப்படுகிறவர்கள் தவறு செய்கிறவர்களில் ஏதோ ஒரு பகுதியினர் மற்றொரு பகுதியினரைச் சட்டத்தால் கண்டு பிடிக்கக்கூடிய நிலைமை இல்லை. அதே போல் குற்றம் செய்பவர்கள் என்று பெண்களுக்குத்தான் தண்டனை தரப்படுகிறது. ஆனால் ஆண்களுக்குத் தண்டனை இல்லை என்று கேள்விப்படுகிறேன். ஆண்கள் தப்பித்துக் கொள்ளுகிறார்கள் என்று கேள்விப்படுகிறேன். இந்தச் சட்டத்தால் ஏற்படுகிற சமுதாய சூழ்நிலை, தவறுகளுக்கு ஆதரவாகிறது. தவறுகள் வளர்கின்றன. எனவே சமுதாயத்தைச் சீர்திருத்த வருகிற சட்டங்கள் எப்படிப்பட்ட விளைவுகளை உண்டு பண்ணும் என்பதைப் பரிசீலிக்க வேண்டும். மது விலக்குச் சட்டம் எற்பட்ட நோக்கம் வரவேற்கத் தக்கது ஒன்று. உயர்ந்த கொள்கை நிறைவேற்றப்பட வேண்டிய நிலைமை—என்றாலும்

அது நிறைவேற்றப்படுகிற முறையில் மது விலக்கு வெற்றி பெற்றதா என்றால் மதுவிலக்கு வழக்குகள் வெற்றி பெற்றுக் கொண்டிருக்கின்றன. மது விலக்குச் சட்டத்தால் பல்வேறு முறையில் தவறுகள் வளர்ந்து கொண்டிருக்கிறதே ஒழிய வெற்றி பெறவில்லை. எனவே இந்தச் சட்டத்தைப்பற்றி என்னும் போது பிச்சை எடுப்பது நிறுத்தப்படவேண்டும். ஆனால், இதன் காரணமாக நன்கொடை கேட்பதும் பிச்சை எடுப்பது என்று கருதப்படுமானால் அது மிக ஆபத்தானது. சிலர் ஆடிப்பாடி காசு கேட்கிறார்கள். இது ஒரு விதத்தில் கேளிக்கை Entertainment என்று சொல்லக்கூடிய வகையில் இருக்கிறது. சாதாரண மக்களுக்கும் நாட்டுப்புறத்தில் உள்ளவர்களுக்கும் ஆடிப்பாடுவது மகிழ்ச்சி அளிப்பதாய் இருக்கிறது. சினிமாவுக்குக் கட்டணம் செலுத்த முடியாத மக்கள் இதில் மகிழ்ச்சி அடைகிறார்கள். அதேபோல் கழைக் கூத்தாடிகள் ஆடிப்பாடி ஒரு அணா, அரை அணா வாங்கி வாழ்க்கை நடத்துகிறார்கள். அதைப் பிச்சை என்றும் கருதலாம். நன்கொடை என்றும் விளக்கலாம். இப்படி இந்தக் கழைக் கூத்தாடிகளைப் பிடித்து பிச்சைக் காரருக்கான வேலைக் கூட்டத்திலே விட்டால் வேலை செய்ய மாட்டார்கள். தலை கீழாக நிற்பார்கள். சில தொழிலாளிகள் சமுதாயத்திற்குக் கேடாக இல்லையென்றால், அதைத் தடுக்க வேண்டியதில்லை. சில வகையான பிச்சையெடுக்கும் முறைகள் சமுதாயத்திற்குக் கேடாக இருப்பதால் அவற்றையே தடுக்க வேண்டும். உயர் திரு. பாலசுப்பிரமணிய அய்யர் அவர்கள் எடுத்துச் சொன்னது போல Begging பிச்சையெடுப்பது என்பது வரையறுக்கப்படவேண்டும். பிச்சை எடுக்கக்கூடாது என்ற கருத்து இன்றைய தினம் சொல்லப்படுவதாக கருதப் பட்டாலும், முற்காலத்தில் திருவள்ளுவர் கொண்டிருந்த கருத் தையும் இங்கு நினைவூட்ட விரும்புகிறேன். 'இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகியற்றியான்' என்றார். இறைவன்தான் இப்படி இரந்துன்னப் படைத்தான் என்றால் அந்த இறைவன்கூட இல்லாமல் போகட்டும் என்பது கருத்து. யாரும் பிச்சை எடுக்கும் நிலைமை இருக்கக்கூடாது என்பதை வள்ளுவர் தீவிரமாக எடுத்துச் சொல்கிறார். பிச்சையை தொழிலாக நடத்தலாமென்று யாரும் சொன்னதில்லை. ஔவையார் 'ஐயம் இட்டு உண்' என்று சாப்பிடுவதற்கு முன்பு ஒருவன் பசியோடு வந்தால் அவன் முகம் பார்த்து பசி போக்கவேண்டுமென்று சொன்னாரே தவிர, சாப்பிடுகிறவன் முன்னாலே எல்லோரும் போய் நில்லுங்கள் என்று சொல்லவில்லை. "ஏற்பது இகழ்ச்சி" என்றும் சொல்லியிருக்கிறார்கள்.

நம் நாட்டில் நிலவி வருகிற கருத்துக்களின்படி பிச்சை எடுப்பது பெருமைக்குரியதல்ல. அது இன்றைக்கும் உள்ள நிலைமைதான், ஒரு கிராமத்திலுள்ள ஏழை அங்கேயே பிச்சை எடுக்கக் கூசுவான். சாப்பிடாமல் பட்டினி கிடப்பானே தவிர, பிச்சை எடுக்க மாட்டான். ஆனால் அங்கிருந்து வெளியேறி நகரத்திற்கு வந்து விட்டால், வெட்கமில்லாமல் பிச்சை எடுக்கிறான். தெரிந்த முகங்களுக்கு முன்னால் பிச்சையெடுக்க

மனம் துணியாதவர்கள் தெரியாத இடத்தில் பிச்சையெடுக்க கூசுகிறார்கள். சமுதாயத்திலுள்ள நோய் இது. இதைப் போக்கத்தக்க மருந்து வேண்டும். சரியான மருத்துவ முறைவேண்டும். பத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்னே சட்டம் கொண்டுவந்தோம், சரியாக நடைபெறவில்லை என்றால், யாருக்கு அந்த பொறுப்பு இருந்ததோ அவர்களது குறைதான் அது. நிறைவேற்றுவதில் உள்ள பல சிக்கல்கள் நமக்குத் தெரிந்திருக்க வேண்டும். இந்தப் பொறுப்பு போலீஸ் இலாகா விடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஏற்கனவே இருக்கிற பல்வேறு கடமைகளுடன் சேர்த்து இதையும் அல்வளவு வெற்றிகரமாக செய்யமுடியுமென்று என்னால் கருத முடியவில்லை. விலங்குகளைப் பொருத்தவரையில் ஜீவகாருண்ய நிலையம் எஸ்.பி.சி.ஏ. என்ற அமைப்பை வைத்து இருப்பதால், ஓரளவு அதனால் நல்ல பணியை ஆற்றமுடிகிறது. போலீஸ் இலாகாவில் இருந்தால் முழுமையாகச் செய்ய முடியாது என்ற காரணத்தால்தான் பிரிக்கப்பட்டிருக்கிறது. எஸ்.பி.சி.ஏ. ஸ்தாபனம் அரசாங்க ஆதரவு பெற்று செய்யக்கூடிய வகையில் அமைந் திருக்கிறது. சமுதாயத்தில் உள்ள நோயாக இந்தப் பிச்சை எடுப்பது இன்று இருக்கிறது. அதை நீக்க எஸ்.பி.சி.ஏ. போன்ற ஒரு தனி அமைப்பு வேண்டுமென்று என்னுடைய அபிப்பிராயம். போலீசார் பல்வேறு கடமைகளுடன் இதைச் செய்யும்போது சாதாரணமாக ஒரு ஏழை நடுரோட்டில் நின்றால்கூட, திரு. ராம தாஸ் அவர்கள் சொல்லியதுபோல பிடித்துத்தான் செல்வார்கள். பிச்சைக்காரனை பிடிக்க உத்தரவு வந்து விட்டது. அதனால்தான் அவர்களை பிடித்தோம் என்பார்கள். பிச்சையைத் தொழிலாகக் கொண்டவர்களா, திடீரென்று அந்நிலைக்குள்ளானவரா என்பதை போலீசார் கவனித்து அறியமுடியாது. அவர்களுக்கு உள்ள வேலைத் தொல்லை அதிகம், அவர்களிடத்தில் இந்தப் பொறுப்பு தரப்பட்டால், நிச்சயமாகப் பல பிச்சைக்காரர்கள் தப்பித்துக் கொள்ளலாம். வேறு பலர் பிச்சைக்காரராக்கி கைது செய்யப் படலாம். ஒரு வேளை நிதில்கூட மாமூல் பழக்கம் வந்துவிட்டால் இத்தொல்லை ஒழியாது. இதைத் தொழிலாகக் கொண்ட பிச்சைக் காரர்கள் மாமூலாகக் கொடுக்கத் தயாராக இருப்பார்கள். இப் போது தொழிலாக சாராயம் காய்ச்சுகிறவர்கள் மாமூல் கொடுக் கிறார்கள். அதுபோல தொழில் பிச்சைக்காரர்கள் தப்பித்துக் கொள்ளலாம்.

பிச்சைக்காரரை பிடிக்கும்போது அவனுக்கு இதைதான் தொழிலா, முன்பு என்ன தொழில் செய்துகொண்டிருந்தான். இன்று ஏன் இந்த நிலைக்கு வந்தான், அவனுக்கு உற்றார், உறவினர் உண்டா என்பதை எல்லாம் விசாரித்து அறிய வேண்டும். இரவு பன்னிரண்டு மணிக்கு வெளியே போகிறான் ஒருவன். அதிக நேரத்தில் அவனைக் கைது செய்து 15 நாள் அளவு காவலில் வைக்கும் நிலைமை தடுக்க முடியாததாக இருக்கிறது. இதை வேண்டுமென்றே செய்கிறார்கள் என்று சொல்லவில்லை; சட்ட மிருக்கிற முறைமை அதற்குக் காரணமாக இருக்கிறது. பிச்சைத் தொழிலை ஒழிப்பதற்கு எற்படுகிற சட்டம் போலீசார் இடத்தில்

[திரு. க. அன்பழகன்] [23rd July 1964

கொடுக்கப்பட்டால் அதனால் நன்மை எவ்வளவு ஏற்படுகிறதோ, அதனால் தீமைகள் நிச்சயமாக விளையும். அனுதாபத்தோடு இப்பிரச்னையை அணுகும் ஒரு இயக்கத்தின் மூலம், தனி ஒரு அமைப்பின் மூலம், இதைக் கண்காணிக்கச் செய்ய வேண்டும். போலீஸ் இலாகா லஞ்ச ஒழிப்புக் காண வேலையைக் கவனிக்க வேண்டியதுதான். ஆனால் அதனிடம் அதை ஒப்புவிக்காமல் லஞ்ச ஒழிப்புக்குத் தனியாக ஒரு டைரக்டரை அமைந்திருக் கிறார்களே, அதைப்போல இதையும் தனியாக்கவேண்டும். இப்போது பரவலாக சென்னையில் 8,000 பிச்சைக்காரர்கள் இருப்பதாகப் புள்ளிவிவரம் இருக்கிறது. அது 10,000மும் அதற்கு மேலும் இருக்கும். தமிழ்நாட்டை எடுத்துக் கொண்டால், நாற்பதினாயிரம், ஐம்பதினாயிரம் என்ற அளவில் இருக்கலாம். நகரம் தோறும் இவர்கள் கூட்டம் இருக்கிறது. பெரிய ஸ்தலங்கள்தோறும் இருக்கிறார்கள். இதை மாற்ற வேண்டு மென்றால் விரிவான அடிப்படையில் கவனிக்கவேண்டும். பொருள் செல்வைப் பற்றிக் கவலைப்படாமல் நிறைவேற்றுவதாக இருந்தால் செம்மையாக நிறைவேற்றவேண்டும்.

இப்படிப்பட்ட பிச்சைக்காரர்கள் ஏன் உணர்கிறார்கள் என்று பார்த்து அதைத் தடுப்பதற்கான முயற்சியையும் மேற்கொள்ள வேண்டும். பிச்சை எடுக்க முற்பட்டதற்குப் பிறகு அவர்களைத் தண்டிப்பதைவிட அந்நிலை ஏற்படாமல் இருக்க வழிவகை காண வேண்டும். யார் ஒருவர், அரசாங்கத்தில் இதற்காக உள்ள அதிகாரியைக் கண்டு 'இன்றைக்கு எனக்குத் தொழில் செய்யும் நிலைமையில்லை; நீங்கள்தான் பிழைப்பிற்கு வழிவகுக்க வேண்டு மென்று' கேட்டாலும், அவர்களுக்குரிய தொழிலில் அவர்கள் சேர்க்கப்படுகிற நிலைமை இருக்கவேண்டும். வேலையில்லாத் திண்டாட்டம் பெருகிக்கொண்டு வருவதை அமைச்சர் அவர்கள் சொல்லிய புள்ளி விவரம் காட்டுகிறது. படித்தவர்கள் பலர் தங்கள் படிப்பை பயன்படுத்த முடியாத நிலை இருந்து வருகிறது. கல்லூரிகளில் மாணவர்கட்கு இடம் கிடைக்காமல் இருப்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் பிச்சையெடுப்பதில் அத்தனை பேரும் ஈடுபடமாட்டார்கள் என்றாலும் பலர் இந்நிலைக்கு ஆளாவது கண்கூடு. கைத்தறி தொழிலாளர் குடும்பங்கள் பிச்சையெடுத்ததை நாம் அறிவோம். ராமநாதபுரத்தில் உள்ளவர்கள் மழையில்லாததால் விவசாயம் செய்யமுடியாமல் பிச்சையெடுக்கும் நிலைமையில் வெளியேறினர். பலர் வெளி மாவட்டங்களிலிருந்து சென்னைக்கு வேலை தேடி வருகிறார்கள். ஐந்து, ஆறு நாட்கள் மனைவி மக்களுடன் கையிலுள்ள காசைச் செலவழித்துக் காலத்தைக் கடத்துகிறார்கள். பிறகு வேறு வழியின்றி பிச்சையெடுக்க ஆரம்பிக்கிறார்கள். அந்த நிலைமையைத் தடுக்கும் முறையில் ஏழைகளிடம் அக்கறை கொண்டுள்ள ஒரு அரசாங்கம் யாராக இருந்தாலும் அவர்கள் வாழ்விற்கு வழியில்லை என்று தெரிவித்தால், அவர்களுக்கு வாழத் துணை செய்கிற வகையில் ஒரு திட்டம் தயாரித்தாக வேண்டும். அவ்வாறு திட்டம் செய்தும் அதை மீறிப் பிச்சையெடுத்தால்

23rd July 1964] [திரு. க. அன்பழகன்]

அதைக்கண்டு தண்டிக்க வேண்டுமென்று விரும்புகிறேன். ஏறத்தாழ இளைஞராக இருப்பவர்கள் குற்றம் செய்துவிட்டால் அவர்களைத் தண்டிக்கும்போது பெற்றோர்கள் பொறுப்பேற்றுக் கொண்டால், அவர்களிடமே விட்டுக் குழந்தைகளைச் சீர்திருத்து கிறார்கள். எப்போதும் தண்டித்து சீர்திருத்துவதை உலகம் ஏற்றுக் கொள்வதில்லை. கண்டித்தும், மன்னித்தும் சீர் திருத்தலாம். குழந்தைகளைப் பிடித்துவரும்போது அதற்கான தனியாக உள்ள நீதிபதி முன் கொண்டுவரும்போது, குற்றத்தின் தரத்தைப் பார்த்து அவர்களை உரியவர்களிடமே சேர்ப்பது போல இந்தத் தொழில் செய்யவில்லை என்று உறுதி கூற பிச்சைக்காரர்கள் வேறு தொழில்களைச் செய்கிறேன் என்றால் அவர்களுக்குப் பழக்கமான வேறு தொழில் அளித்துக் காக்க இந்தச் சட்டத்தில் இடமிருக்கவேண்டும்.

மூன்று ஆண்டுகள் Work-house -ல் உணவு விடுதியில் வைத் திருக்கிறோம். அதற்குப் முன்னரும் அரசாங்கம் விரும்பினால் யாரை வேண்டுமானாலும் விட்டு விடலாம் என்று சொன்னால் மட்டும் போதாது. அவனைப் பிடித்து விட்ட குறைக்காக அவன் வாழ்வைச் செப்பனிட்டாக வேண்டும். அப்படிச் செப்பனிட வேண்டுமென்றால், அவன் செய்யக்கூடிய தொழிலில் அவனை ஈடு படுத்த வேண்டும். தொழிலே செய்ய முடியாதவர்கள், உடல் வலிவு கெட்டு சாதாரண வேலையைக்கூட செய்ய முடியாதவர்களை மட்டும் இந்த இடத்தில் வைத்திருக்கவும், மற்றவர்களை வேறு தொழில்களில் ஈடுபடுத்துவதற்கும், அவர்களுக்குத் தரும் தண்டனையைக் குறைக்கவும், தண்டனை தருகிற நீதிபதிகள் இந்தப் பிரச்னையைப்பற்றி ஆராய்ந்து பார்க்கக் கூடியவர்களா யிருக்க வேண்டும். இது ஒரு வகையான குற்றமாகக் கருதப்படக் கூடாது. திருட்டு கொலையைப் போன்றது இது என்ற எண்ணம் ஏற்படக்கூடாது. சாராயம் காய்ச்சுவதை, விபசாரத்தில் ஈடுபடு வதைப் போல் இது ஒரு குற்றம் என்ற எண்ணம் ஏற்படுத்தப்படக் கூடாது. ஆனால் நீக்கப்பட வேண்டிய ஒரு தீய பழக்கம் என்ற எண்ணத்தில் வைத்து மேலும் இதனை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்று இந்த அவையில் வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். நான் ஒரு ஆறு மாதம் சிறைச்சாலையில் இருந்த போது எனக்குக் கிடைத்த அனுபவத்திலிருந்து நான் கண்டது—சிறைச்சாலைக்கு சிலர் மாமியார் வீட்டுக்கு வருவது போல் மகிழ்ச்சியோடு வருகிறார்கள். ஒரு குற்றத்தைச் செய்து தண்டிக்கப்பட்டு விடுதலைப் பெற்றுப் போகும்போது, இன்னும் ஒரு வாரத்தில் வருகிறேன், இந்த இடமே இருக்கட்டும் என்று பிற கைதிகளிடம் சொல்லிவிட்டுப் போகிறார்கள். போகிறபோதே, வெளியே போய் என்ன தொழில் செய்வது என்ற எக்கத்தில் ரயில்வே ஸ்டேஷனுக்குப் போனவுடனேயே, பணம் கிடைக்கிறதோ இல்லையோ திருடுவதற்கு ஒரு முயற்சி செய்வேன், அதைச் செய்த உடன் போலீசார் பிடித்துக் கொள்வார்கள், உள்ளே வருகிறேன் என்று சொல்லிவிட்டுப் போகிறார்கள். இப்படிச் சமுதாயத்தில்

4-50 p.m.

[திரு. க. அன்பழகன்] [23rd July 1964

உள்ள பெருங்குறைகள், புரையோடிய புண்ணைப் போன்ற பிரச்னைகளை எல்லாம் பெருங் கருத்தில் வைத்து இதனை ஆராய்ந்து பரிசீலிக்க வேண்டும். எனவே சட்டம் மட்டும் போதாது. இதை நிறைவேற்றுகிற நல்ல மனப்பான்மையும் வேண்டும். அதற்கு ஏற்ற ஒரு அமைப்பு வேண்டும். அந்த அமைப்பு இல்லாமல் இந்தச் சட்டம் வருமானால் 19 ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த சட்டம் இப்போது எப்படித் திருத்தப் படுகிறதோ, அது போல் இன்னும் சில ஆண்டுகளுக்குப் பிறகு இது மேலும் திருத்தப்பட வேண்டியதாகவே இருக்கும். என்று தெரிவித்துக் கொண்டு, இதை ஆதரித்து பரிசீலிக்க வேண்டும். என்று கேட்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* SRI V. K. RAMASWAMI MUDALIAR: Mr. Chairman, Sir, I welcome this measure on two grounds. The first thing is that these able bodied beggars are prevented from living a life of degradation and they are given work in the work homes. While doing so, my submission is that during the period of sentence, they must be given some remuneration so that when they come out, they can depend upon the money they had earned and lead some honest life at least for some years. The other important thing is that these diseased beggars, especially beggars who are in a position to communicate their disease to others must be prevented from doing so and they must be given good treatment. These are the two things which the Bill proposes to effect and I support it. Another point I would like to submit is this. As was already pointed out by hon. Members, there should be sufficient work-houses or beggar homes to house these people. Unless this is done, the purpose of the enactment cannot be achieved. This is all what I wanted to say, Sir. Thank you.

* SRIMATHI MARY C. CLUBWALA JADHAV: Mr. Chairman, I raise to support this Bill. Begging in Madras is something extraordinary and as we see from the figures given by the Commissioner of Police, they are over 7,000 in the City. But I would like to say something more about it. A few years ago a survey was done in the City of Madras, a survey of beggars. At that time it showed there were 5,000 beggars in the City apart from 1,200 who were in institutions, in the three institutions, one the Government, another under the Corporation and the third one under a private institution. Amongst these beggars, two-thirds were able-bodied beggars. Of these again 25 per cent were largely beggars under the age of 15 years. Talking of the professions or on what they were begging for, the survey showed: direct soliciting —2,484, exhibiting wounds—517, singing—963, baby in arms—351, self-mortification—284, exhibiting beggars as Gods and Goddesses—235, rolling 107, exhibiting false pregnancy 98, exhibiting corpse 21. This is the type of begging in our State. Very often we have seen in Mount Road, near the Elphinstone theatre women bringing dead baby saying: "This child has just died. It has to be buried. Will you give me money?" Then talking of the professions

23rd July 1964] [Srimathi Mary C. Clubwala Jadhav]

of these beggars, they were agriculturists, manual workers, domestic servants, ricksha-pullers, weavers, businessmen, cattle grazing and army men and carpenters. This was as per the survey that was done about the profession they were following.

THE HON. SRI R. VENKATARAMAN: The survey was conducted, I think in 1959.

SRIMATHI MARY C. CLUBWALA JADHAV: It was conducted in 1956. This survey was done by the Madras School of Social Work. It was a nine-month survey. And what is more, some of these beggars had been begging for 21 years and their income was anything from 2 annas to Rs. 3-9-0 a day. Amongst them was also a school teacher. He said it was easier to beg and earn more than what he did earn from his profession. (Laughter.)

There are not sufficient work-houses to receive them. It is not a fact that these beggars come only from the city. They come to the city from the rural parts, ticketless travelers coming into the city to earn their livelihood by these methods of begging. And what is more beggars from Madras can be found in all the beggar homes in other parts of India, in Delhi, in Calcutta and Bombay or wherever you go. (Sri K. Balasubramanya Ayyar: Very enterprising!) I do not think it is so. Sir, we have very few work-houses. I hope there will be more and also the term 'work-house' will not be adopted. I also had pleaded with the Hon. Minister once that we should have for the youngsters an industrial unit where they could come and learn some small scale industry, with a hostel attached.

Then, Sir, these youngsters who are begging do a sort of off-day profession. They serve in hotels and during their off-time they take to begging. Another profession they do is to carry on sale of illicit liquor. They earn quite an amount of money in that way of service.

Sir, the law enforcement staff are too little in the State. The Police people do come and ask the people to go away. But these people come back again. It should be stringent and I hope we will be able to have a round up of all the beggars.

Sir, I very much like to support the suggestion of the hon. Lady Member that we should have something like a community cess, that is a beggar cess to be collected to that we can have these institutions for them. Sir, I whole heartedly support the Bill.

MR. CHAIRMAN: It is now 5 o'clock. The hon. Member Sri A. Subramaniam should be brief.

5-00 p.m.

* திரு. ஏ. சுப்பிரமணியம்: மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் பிச்சையெடுப்பு தடுப்பு மசோதாவின் பேரில் நான் சில வார்த்தைகள் பேச பிரியப்படுகிறேன். நான் பொதுக்குக் கமிட்டியில் இருந்த போதும்கூட என் உடல் நலம் சரியில்லாத காரணத்தால் அதில் கலந்து கொண்டு எனது அபிப்பிராயத்தை கூற முடியவில்லை, ஆகையினால் சில குறிப்புகளை

கூறக் கூற விரும்புகிறேன். இன்றையதினம் இம்மாதிரியான ஒரு மசோதா வர வேண்டியது மிக மிக அவசியம். இதை வரவேற்க வேண்டியது அதிலும் மிக அவசியம் என்பதை மக்கள் உணர்ந்து இருக்கிறார்கள். அது சம்பந்தமாக என் மதிப்பிற்குரிய எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் சில கருத்துக்களைக் கூறினார்கள், அந்தக் கருத்துக்களில் சில மாறுதல்கள் மட்டும் செய்ய வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. குறிப்பாக ஒன்று சொல்ல விரும்புகிறேன். நம்முடைய மதத்திலே, நல்லோர் ஐயமிட்டு உண் என்று சொல்லி இருப்பதால், தர்மம் செய்ய வேண்டும், கருணை காட்ட வேண்டும் என்று ஏற்படுகிறது. என்றாலும் ஏற்பது இகழ்ச்சி என்றும் கூறப்பட்டிருக்கிறது. இன்னொரு முக்கியமான விஷயம் என்னவென்றால், பாத்திரமறிந்து பிச்சையிடு என்றும் கூறப்பட்டிருக்கிறது. சும்மா பிச்சையிடுவது தர்மம் என்று நினைத்து யாருக்கும் எது வேண்டுமானாலும் செய்யலாம் என்று, ஒருத்தனை சோம்பேரியாக்கி, கொழுக்க வைத்து, நல்ல காரியம் செய்ய விடாமல் தர்மம் செய்யக் கூடாது. அதனால்தான் பாத்திரமறிந்து பிச்சையிடு என்று பெரியவர்கள் அந்தக் காலத்திலேயே குறிப்பிட்டிருக்கிறார்கள். அந்த ரீதியில் நாம் பார்த்து சில திருத்தங்களைச் செய்து, எப்படிச் செய்தால் அது தர்மமாக இருக்கும், அல்லது பிச்சையாகக் கருத முடியும் என்று விரிவாகத் தெளிவுபட நாம் விவரித்து விட வேண்டும். இப்போது தெய்வத்தின் பேரால் பல தருமங்கள் நடக்கின்றன. பிச்சை பலவிதமாக எடுக்கிறார்கள். ரோட்டிலே ஒருவன் உருண்டு கொண்டே போகிறான், தீராத வினைகளைத் தீர்க்க வந்த வெங்கடேசப் பெருமாளே, கோவிந்தா ! என்று பாடி விட்டு அவன் பிச்சை எடுக்கிறான். அவனுக்கு எந்த வினை இருந்ததோ யார் அறிந்தார்கள்? அவனுக்கு வினை ஒன்றும் கிடையாது. சோம்பேறியாக இருந்து அம்மாதிரிப் பிச்சை யெடுக்கிறான். இன்னொருவன் என்ன செய்கிறான்—பிள்ளையை ஒருத்தியிடம் இரவல் வாங்கி, அதற்கு 2 அணா அல்லது 4 அணா வாடகையைக் கொடுக்கிறான். அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டு, தாயற்ற பிள்ளை, என்ன செய்வது, பால் வார்க்க வேண்டும், அதற்கு ஏதாவது தர்மம் செய்யுங்கள் என்று கேட்கிறான். அவனும் சோம்பேறி ஆகிறான். அந்தக் குழந்தையின் தாய்—பெற்றவளும் சோம்பேறியாகிறாள். தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டும் என்று சொல்லுவது போல், அந்தக் குழந்தையும் பிற்காலத்தில் பிச்சை எடுக்கும்படி செய்து விடுகிறார்கள். பிச்சை இந்த மாதிரி பற்பல முறையில் எடுக்கப்படுகிறது. அதிலும் குறிப்பாக இப்படிப் பிச்சை எடுக்கிறவர்கள் ஏதாவது ஒரு நல்ல தொழிலைச் செய்ய வேண்டும், சோம்பேறியாக வாழ்க்கையைக் கழிக்கக் கூடாது என்று எல்லோரும் சொல்லுகிறார்கள். லோஷவிலம் என்று இப்போது நம்முடைய அரசாட்சியை ஆண்டு கொண்டு இருக்கும் சிறந்த கட்சியானது சொல்கிறது. இதை மற்ற [illegible] ஆதரித்து, இந்தச் சங்கம்

கொண்டுவருவதை அதிதீவிரமாக ஆதரிக்க முன்வருகிறார்கள். இவைகளை எல்லாம் வரவேற்க வேண்டியதுதான். இருந்தாலும் இப்போது இன்னொரு விஷயம் கவனிக்கவேண்டி இருக்கிறது. மயிலாப்பூர் கபாலீஸ்வரன் கோயிலில் உற்சவ நாளுக்களில் அங்கே பிரஹ்மாண்டவர்—இறைவனே பிச்சை யெடுத்ததாக ஐதீகம் இருக்கிறது—10-வது நாள் பிச்சையெடுத்த மாதிரி கபாலீஸ்வரரே வருகிறார். போலீஸ்காரர்களுக்கு அதிகாரம் கொடுத்திருக்கிறோம். அவர்கள் உடனே சுவாமியைப் போய் கைது செய்வதா? இதையெல்லாம் யோசனை செய்ய வேண்டும். போலீஸ்காரர்களுக்கு எந்த அளவு அதிகாரம் கொடுக்க வேண்டும், எந்தெந்த விஷயத்தில் கொடுக்க வேண்டும் என்று வரையறுக்க வேண்டும். இல்லாது போனால் அது பிரயோசனப்படாது. திருப்பதிக்குப் போகிறார்கள், சுவாமி தடையை எடுத்துக் கொண்டு உண்மையாகவே பிச்சை யெடுத்துக் கொண்டுவந்து சமர்ப்பிக்கிறேன் என்று கோவிந்தா, கோவிந்தா, என்று கூப்பாடு போட்டுக் கொண்டு போகிறார்கள். உடனே போலீஸ்காரர்கள் இந்த மாதிரி பிச்சை யெடுக்கக் கூடாது என்று கைது செய்தால், என்ன செய்வது. பிறகு கோர்ட்டில் போய் அல்லவா ஜாமீன் கொடுத்து மீட்டுக் கொண்டு வரவேண்டும். அப்போது எங்கு இருப்பார்கள் பெருமாள். அது வேறே சமாசாரம். இப்படிப் பலவிதமான கஷ்டங்கள் இந்தச் சட்டத்தில் இருக்கின்றன. போலீஸ் காரர்களுக்கு அதிகாரம் இன்னின்னது வென்று வரையறுத்துக் கொடுக்க வேண்டும். இல்லாது போனால் அது மிகுந்த கஷ்டத்தைக் கொடுக்கும் நிலை ஏற்பட்டு விடும். கோயில்களில் மற்ற புண்ணிய ஸ்தலங்களில் இம்மாதிரிப் பிச்சை எடுக்கிறவர்களின் உபத்திரவம்தான் அதிகம். அவர்களில் பல பெரு வியாதியஸ்தர்களும், தொத்து வியாதியஸ்தர்களும் இருக்கிறார்கள். அவர்களுக்கு கேட்டாலும் கேட்காவிட்டாலும், தர்மம் செய்ய வேண்டும் என்று பிச்சை போடுகிறார்கள். அது தொத்து நோய் எளிதில் பரவக்கூடியது. அதனால் அவர்களை அங்கே இருக்க விடக்கூடாது. தனி இடம் ஏற்பாடுகள் செய்து அவர்கள் இருப்பதற்கான வழிவகைகளைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தாலும் கூட அரசாங்கம் இம்மாதிரிப் பிச்சை எடுப்பதைத் தவிர்க்க அவர்களுக்கு வேலை கொடுக்க வேண்டும். இடத்தை ஏற்பாடு பண்ணி, உணவையும் கொடுத்து, வேலையையும் கொடுக்க ஏற்பட்டால்கூட, சில சோம்பேறி பிச்சைக்காரர்கள் அங்கே தங்கி வேலை செய்வதில்லை. அவர்களைத் தக்கபடி தண்டித்து கவனித்து அவர்களுக்குத் தகுந்த வேலை தச்சு வேலை செய்வது, இரும்பு அடிப்பது, பிரம்பு பின்னுவது, வேறு வேலைகள் செய்ய ஏற்பாடு செய்வது போன்றவைகளை தேகபலம் இருக்கிறவர்களைக் கொண்டுபோய் வைத்து, சோம்பேறியாகத் திரியாதே என்று ஓர் இடத்தில் கொண்டுபோய் வைத்தால் இருந்து வேலை செய்வதில்லை. திருட்டுத்தனமாக ஓடிவிடுகிறார்கள். இப்படிப் பல வழிகளிலே பிச்சை எடுக்கிறார்கள். சோம்பேறிகளாக இருக்கக் கூடாது என்பதுதான் முக்கிய நோக்கம். நாட்டில் சோம்பேறிகள்

[திரு. ஏ. சுப்பிரமணியம்] [23rd July 1964

இருக்கக் கூடாது என்று எல்லோரும் ஒப்புக்கொள்கிறார்கள். அரசாங்கமும் அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ததாக வேண்டும். வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க வேண்டும். மக்களுக்கு ஏற்படும் கஷ்டங்களைப் போக்க வேண்டும். இந்த முறைகளில் செய்யவேண்டும் என்பதுதான் இந்தச் சட்டத்தின் முக்கியமான நோக்கம். எதுவாயிருந்தாலும் கூட அவர்களுக்கு உடனடியாக இது மாதிரியான சட்டம் ஒன்று கொண்டுவருவது மிக அவசியம். மற்றொரு விஷயத்தையும் குறிப்பிட விரும்புகிறேன். கிராமங்களில் பாரதம் நடக்கிறது. முன்பு எல்லாம் பாரதம் படித்தால் ஒரு பூஜாரிக்கு 20, 30, 50 ரூபாய் என்று பணம் செலுத்துவோம். இப்போது பணம் கொடுப்பது இல்லை. இராத்திரி எல்லாம் பாடி கதை சொல்லுகிறவர், பொழுது விடிந்தவுடன் உண்டியலை எடுத்துக் கொண்டு பிச்சை எடுப்பார். உடனே போலீஸ்காரர் பார்த்து பாரதம் படித்த பூஜாரியை பார்த்து பிச்சை எடுத்தாய் என்னை கைது செய்கிறேன், வா போலீஸ் ஸ்டேஷனுக்கு என்று சொன்னால் அதனுடைய நிலைமை என்ன? இந்த விஷயத்தை முடிவு செய்வதற்கு பலவிதமான விஷயங்கள் தொக்கி நிற்கிறது. இந்தச் சட்டத்தின்படி தவறு செய்கிறவர்களைச் சரியானபடிக்குக் கைது செய்ய மாட்டார்கள். தவறு செய்யாதவர்களைக் கைது செய்வார்கள். எந்த முறையில் எப்படிச் செய்வது என்பதைக் கொஞ்சம் சட்டத்தில் குறிப்பிட்டால் மிகவும் நன்றாக இருக்கும். பொதுப்படையாக இந்தச் சட்டத்தை மிக நல்ல முறையில் எல்லோரும் சேர்ந்து வரவேற்க வேண்டியது. கோவில்கள் எல்லாம் பரிசுத்தமாக இருக்க வேண்டியது. கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு இடைஞ்சலாக வியாதியஸ்தர்கள் நடு ரோட்டிலோ, கோவில்களிலோ இருக்கக் கூடாது. வியாதியஸ்தர்களுக்குத் தனியாக தங்கி இருக்க ஒரு இடத்தைக் கட்டிக் கொடுத்து அவர்களுக்கு உணவு, உடை கொடுக்க வேண்டும். அதற்காக என்ன செய்ய வேண்டுமென்றால் பள்ளிப் பிள்ளைகளுக்கு மதிய உணவு கொடுப்பது போல் ஒவ்வொரு ஊரிலும் அரசாங்கம் ஒரு கமிட்டியை ஏற்படுத்தி நிதி வசூல் செய்ய வேண்டும். போதாததற்கு அரசாங்கம் நிதி பேர் பாதி கொடுக்க வேண்டும். இது மாதிரித் திட்டத்தை வைத்து தருத்த சட்டம் செய்தால், நன்றாய் இருக்கும் என்று கூறிக் கொண்டு எனக்கு இந்த சந்தர்ப்பம் கொடுத்ததற்கு வணக்கம் தெரிவித்துக் கொண்டு என் பேச்சை முடித்துக்கொள்கிறேன்.

8-10 p.m.

THE HON. SRI R. VENKATARAMAN: Sir, in 1958 the question whether the secondary grade trained teachers in private management schools should also be brought on a par with the secondary grade teachers serving in Local Body and Government schools, was examined. A decision was taken that the principle according to which the secondary grade trained teachers were paid the scale of pay applicable to them, should be made applicable to teachers in private schools also. If the hon. Member is not concerned with the pay but with the right to teach English irrespective of pay, then he may put a separate question. I thought he was not interested in the right to teach English but only in the right to take higher salary.

SRI G. KRISHNAMOORTHY: Sir, what made the Government take that decision in 1958?

THE HON. SRI R. VENKATARAMAN: Well, Sir, there is the decision. If the hon. Member is not satisfied, he must make a representation to have the decision changed.

Hospital at Thozhudur

* 252 *Q.*—DR. A. SREENIVASAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the hospital at Thozhudur, South Arcot District, is without a doctor for a very long time;

(*b*) if so, the steps taken or proposed to be taken in this regard; and

(*c*) the period during which this hospital has remained without a doctor?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (*a*) Yes.

(*b*) The Commissioner, Mangalur Panchayat Union, has taken action to appoint a doctor for the dispensary.

(*c*) Two years.

DR. H. V. HANDE: Sir, to whom did he hand over the charge, Sir.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: To nobody, Sir.

திரு. க. ஆன்பழகன்: தலைவர் அவர்களே, தொழுதூர் மருத்துவமனை எவ்வளவு காலம் டாக்டர் இல்லாமல் இருந்தது? எப்போது டாக்டர் நியமிக்கப்பட்டார்?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: இப்போதுதான் டாக்டர் இல்லை.

திரு. எஸ். கே. சம்பந்தன்: இதுபோல டாக்டர்கள் இல்லாத மருத்துவ மனைகள் தமிழ் நாட்டில் எவ்வளவு இருக்கின்றன என்று அரசாங்கம் கணக்கெடுத்திருக்கிறதா? அதற்கெல்லாம் டாக்டர்கள் உடனடியாக போட அரசாங்கம் ஏற்பாடு செய்திருக்கிறதா?

MR. CHAIRMAN: This question relates to a particular dispensary. How can the hon. Member ask for general information? The Hon. Minister may not have that information.

DR. H. V. HANDE: Sir, I want to know who was in charge of the hospital in the absence of the doctor? Was anybody in charge of medicines? Was anybody in charge of giving treatment, like the compounder, etc.?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: Yes, Sir. Every dispensary has got compounders.

General Hospital, Madras.

*253 Q.—DR. A. SREENIVASAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether it is a fact that the casualty department of the General Hospital, Madras, was not in a position to get the requisite medicines and other things to treat the emergency cases that were rushed to the hospital on the night of 19—5—1964;

(b) if so, the reasons therefor and the action taken in this regard;

(c) whether any medicines were purchased from a private drug store, and, if so, what they are; and

(d) who paid for them?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) No.

(b) Does not arise.

(c) No.

(d) Does not arise.

28th July 1964]

DR. H. V. HANDE: Sir, is it a fact many items like Glucose saline and life-saving drugs were absent in the General Hospital at that hour and patients had to go to a private dispensary and wake up the people to have the treatment?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: No, Sir. The information is wrong, because, all the patients were treated with the hospital stocked medicines, that is, medicines stocked in the General Hospital. One Sri Harigopal came forward voluntarily in his anxiety to help the victims of the explosion to donate some medicines.

Government Hospitals

*254. Q.—DR. A. SREENIVASAN: Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) the number and names of Government Hospitals which do not have full complement of medical officers, and

(b) the reasons therefor?

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM: (a) There is no Government Hospital without full complement of Medical Officers.

(b) Does not arise.

MR. CHAIRMAN: Questions are over.

[*Note.*—An asterisk *at the commencement of a speech indicates revision by the Member.]

II. ANNOUNCEMENTS.

(1) DECISION OF THE BUSINESS ADVISORY COMMITTEE.

MR. CHAIRMAN: At a meeting of the Business Advisory Committee held on the 27th July 1964, it has been decided that the Council may meet on the 28th and 29th July 1964 to consider the Government Bills passed and transmitted by the Assembly. The Council will meet at 3 p.m. daily and adjourn *sine die* on the 29th July 1964.

(2) MESSAGE FROM THE ASSEMBLY.

MR. CHAIRMAN: I have received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the motion as passed by the Assembly on 27th July 1964 for the setting up of Joint Select Committee of both the Houses, consisting of 21 Members (14 Members of the Legislative Assembly and 7 Members of the Legislative Council) to consider the Madras Public

[Mr. Chairman] [28th July 1964

Buildings (Licensing) Bill, 1964 (L.A. Bill No. 31 of 1964) and the following Members of the Legislative Assembly were selected to serve on the Joint Select Committee—

(1) Srimathi T. N. Anandanayaki.

(2) Sri P. Appavoo.

(3) Sri A. Chidambaranatha Nadar.

(4) Sri Saw. Ganesan.

(5) The Hon. Srimathi Jothi Venkatachellum.

(6) Sri A. K. Kaliappa Goundar.

(7) Sri M Kalyanasundaram.

(8) Sri K. T. Kosalram.

(9) Sri M. R. Krishnamoorthy.

(10) Sri K. A. Mathialagan.

(11) Sri S. Murugaiyan.

(12) Sri K. P. Palanisamy.

(13) Sri N. Ramachandra Reddy.

(14) Sri S. Ramaswamy Naidu, and the mover of the Bill The Hon. Sri R. Venkataraman.

I have also received messages from the Governor of Madras recommending to the Legislative Council the consideration of the Madras Hackney Carriage (Amendment) Bill, 1964 and the Madras Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964.

I have further received a message from the Hon. Speaker, Legislative Assembly, transmitting a copy of the Madras General Sales-Tax (Second Amendment) Bill, 1961 (L.A. Bill No. 29 of 1964) as passed by the Legislative Assembly and signed by him for the recommendation of the Council and certifying that the Bill is a Money Bill within the meaning of Article 199 of the Constitution of India.

I have further received messages from the Hon. Speaker, Legislative Assembly, transmitting copies of the following Bills as passed by the Legislative Assembly and signed by him for the concurrence of the Council :

The Madras Leaseholds (Abolition and Conversion into Ryotwari) Amendment Bill, 1964 (L.A. Bill No. 24 of 1964).

The Madras Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Amendment Bill, 1964 (L.A. Bill No. 37 of 1964).

28th July 1964]

The Madras Rinderpest (Amendment) Bill, 1964 (L.A. Bill No. 38 of 1964).

III.—CALLING ATTENTION TO THE INTRODUCTION OF HINDI AS AN ALTERVATE MEDIUM OF EXAMINATION BESIDES ENGLISH FOR ALL INDIA SERVICE EXAMINATIONS CONDUCTED BY THE UNION PUBLIC SERVICE COMMISSION.

DR. A. SREENIVASAN : Mr. Chairman, Sir, I wish to call the attention of the Hon. the Chief Minister to a matter of urgent public importance, namely, the introduction of Hindi as an alternate medium of examination besides English for All-India Service examinations conducted by the Union Public Service Commission from 1965 onwards and the consequent repercussions and hardship thereby caused to the aspirants from Tamil Nad who seek to enter All-India Services.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Chairman, Sir, I wish to make the following statement :—

On the question of medium of examination conducted by the Union Public Service Commission for recruitment to All-India Services and Higher Central Services, the Committee of Parliament on Official Language constituted by the President under Article 344 (4) of the Constitution recommended that English may continue to be the medium of examination and that Hindi may be admitted as an alternative medium after some time, both English and Hindi being available thereafter as media at the option of the candidate for as long as necessary. In his directions on the report of the Committee of Parliament, the President ordered that necessary action may be taken by the Ministry of Home Affairs in consultation with the Union Public Service Commission for the introduction of Hindi as an alternative medium after some time.

In the meeting of the High Level Committee on Hindi held at New Delhi on 12th March, 1964 at which the Chief Minister was present, the question of introduction of Hindi as an optional medium for All-India and Higher Central Services Examination was considered.

The Committee agreed that English should continue to be the medium for I.A.S. and Higher Central Services Examination, but that Hindi might be introduced, as an alternative medium with effect from the examination to be held in September 1965 provided suitable methods and technique can be devised meanwhile for securing uniformity of standards in the evaluation of answer books written in English and Hindi so that the candidates who have English as medium of examination should not suffer from a disadvantage when Hindi is introduced as alternative medium. It was considered that the decision might be put off for another period if the necessary arrangements for moderation in evaluation standards could not be evolved in time.

IV.—GOVERNMENT BILLS.

THE MADRAS PUBLIC BUILDINGS (LICENSING) BILL, 1964 (L.A. BILL NO. 31 OF 1964).

THE HON. SRI R. VENKATARAMAN : Sir, I move—

2.30 p.m. " That this House concurs with the Assembly in setting up a Joint Select Committee of both the Houses consisting of 21 members (14 members of the Legislative Assembly and 7 members of the Legislative Council) to consider the Madras Public Buildings (Licensing) Bill, 1964 (L.A. Bill No. 31 of 1964) and that the following members of this House be selected to serve on such a Joint Select Committee :—

Sri K. Balasubramanya Ayyar,

Sri C. P. Chitrarasu,

Sri M. Rajah Iyer,

Sri SP. K. A. Lashmanan Chettiar,

Sri R. Sivasankara Mehta,

Sri K. Rajaram, and

The Hon. Sri R. Venkataraman (Mover of the Bill) ".

In moving the motion, I would like to explain the salient features of the Bill.

Hon. Members of this House are aware of the collapse of the school building in Madurai recently which resulted in the loss of lives of many children and in injury to several others. This incident has revealed that some of the private buildings put up for public purposes are not constructed or maintained properly. In order to prevent a recurrence of such incidents, the Government consider that officers of the Government should be empowered by statute to exercise effective control over such buildings and that the buildings should be permitted to be used for school or college purposes only after a licence is obtained from a competent authority, who shall satisfy himself that the building is structurally sound before the licence is granted.

The Madras Places of Public Resort Act, 1888 (Madras Act II of 1888) which provides for grant of licences for buildings used as places of public resort and entertainment, does not expressly provide that structural soundness of the buildings is a condition precedent for the grant of licence. Under the Act, the licence will be granted by the executive authority of the municipality in municipal areas and by a Revenue Officer not below the rank of Tahsildar in other areas. The Act applies only to the areas outside the City of Madras. So far as the City of Madras is concerned, under Sections 34 and 35 of the Madras City Police Act, 1888, a licence

is required for using a place or building for public entertainment or resort or as an eating-house, coffee-house, etc. The licence is to be granted by the Commissioner of Police under Section 36. This Act also does not expressly provide that the structural soundness of the building is a condition precedent for the grant of a licence.

The Government have, therefore, decided that there should be a separate law providing for the grant of licences for buildings which are proposed to be used as schools, colleges, hospitals, libraries, hotels, etc. Accordingly, the Madras Public Buildings (Licensing) Bill, 1964 (L.A. Bill No. 31 of 1964), provides for the grant of licences for the use of any building for public purposes by the competent authority, after satisfying itself about the structural soundness of the building in respect of which application is made. The licence has to be obtained within a period of six months from the date of the publication of the proposed Act and it will be valid for a period of three years or such shorter period as may be specified in the licence. The licence may be renewed subject to the same terms and conditions. A temporary licence may also be obtained for a period of three months. Provision has been made in the Bill empowering the licensing authority to cancel or suspend the licence granted by it for valid reasons.

The Bill also provides for appeal against the refusal to grant or renew a licence or cancellation or suspension of a licence by the competent authority. The Board of Revenue is empowered to revise either on its own motion or on the application made by the owner of the building which is to be used or which is being used for a public purpose, to call for and examine the records of any proceedings to satisfy itself as to the correctness, legality or propriety of any decision taken or order passed by any authority under the proposed Act and to modify, annul, reverse or remit for reconsideration any order so passed by any authority under the proposed Act.

The Bill also contains provision enabling the Government to grant exemption, if they are of opinion that it will not be in the public interest to apply any or all of the provisions of the proposed Act to any class of public buildings, subject to such conditions and restrictions, as they may impose. Under the Bill, if any authority finds that the building is not structurally sound, it should report the matter to the competent authority.

Sir, I request the House to accept the motion.

MR. CHAIRMAN : Motion moved—

" That this House concurs with the Assembly in setting up a Joint Select Committee of both the Houses consisting of 21 Members (14 Members of the Legislative Assembly and 7 Members of the Legislative Council) to consider the Madras Public Buildings

[Mr. Chairman] [28th July 1964

(Licensing) Bill, 1964 (L.A. Bill No. 31 of 1964) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

Sri K. Balasubramanya Ayyar,
Sri C. P. Chitrarasu,
Sri M. Rajah Iyer,
Sri SP. K. A. Lakshmanan Chettiar,
Sri R. Sivasankara Mehta,
Sri K. Rajaram, and
The Hon. Sri R. Venkataraman (Mover of the Bill) ".

SRI G. KRISHNAMOORTHY: Mr. Chairman, Sir, so far as I was able to grasp from the Hon. Minister's speech, I find that offices do not come under the purview of this Bill. It may be a Government office or it may be a firm employing hundreds of people. If offices do not come within the purview of this Bill, it is very necessary to just see that they are also included, because many offices, especially in cities, are housed in rented premises.

There is one other thing. This Bill in actual working may bring about a lot of difficulties with regard to the structural stability of buildings for schools. Naturally, if it means schools, all elementary schools will come under its purview, and there are thousands and thousands of elemestary schools housed in tiled buildings, thatched buildings, and so on, not to speak of even some high schools having temporary sheds. Some sort of provision should be made by the Select Committee to see that the school work is not hampered, where the stability is considered questionable, and the building has got to be repaired or remodelled according to the decision of the authority that may be empowered by this Bill. The Select Committee should see that school work does not suffer. Even today there are thousands and thousands of buildings of elementary schools which may not at all be fit to house the children therein. This point should be gone into in my humble opinion and sufficient provision should be made to see that the school work is not hampered even in the remotest village by applying the provisions of this Bill in regard to the stability of the building. Generally it takes time to carry out the alterations. The alterations must be carried out without detriment to the normal school work.

* திரு. க. அன்பழகன் : சட்ட மன்றத் தலைவரவர்களே, இந்த மன்றத்திலே முதன் முதலாக வைக்கப்பட்டிருக்கின்ற சென்னை மாநிலப் பொதுக்கட்டிடங்களைப்பற்றிய மசோதாவைக் குறித்து இரண்டொரு கருத்துக்களை நான் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த மசோதா கொண்டுவருவதற்குக் காரணமாக இருந்த நிகழ்ச்சி அனைவரும் உணர்ந்ததாகும். அதைப் போல வேறு பல கட்டிடங்களும் அப்படிப்பட்ட நல்ல தன்மையான அடிப்படையுடன் கட்டப்பட்டனவாக இல்லை என்பதுடன் முழு அளவு கவனத்தோடு கட்டப்படாத கட்டிடங்களும் ஏராளமாக இருக்

28th July 1964] [திரு. க. அன்பழகன்]

இன்றன. சென்னை நகரிலேயே எத்தனையோ முடிந்த கட்டிடங்கள், போதுமான அளவு செம்மையாகக் கட்டப்படாமல் இருப்பது அடிக்கடி அறியப்படுகிறது. எனவே பொதுக் கட்டிடங்கள் நல்ல அடிப்படையிலே கட்டப்பட்டனவா என்பது பரிசிலிக்கப்பட வேண்டும் என்பதும், அவைகளுக்குச் சான்றுகள், லிசென்ஸ் வழங்கவேண்டும் என்பதும் வரவேற்கப்படவேண்டிய ஒரு கருத்தாகும். ஆனால் பொதுக் கட்டிடங்கள் என்ற தலைப்பில் பள்ளிக் கூடங்கள் மாணவர்கள் விடுதிகள் போன்ற சில கட்டிடங்கள் மட்டுமே கருதப்படுமானால், அது போதுமானதல்ல. எனக்கு முன்னால் பேசிய திரு. ஜி. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தொழிற் சாலைக் கட்டிடங்களைக் கூட அந்த அடிப்படையிலே கொண்டுவர வேண்டுமென்று தெரிவித்தார்கள். அதே போல சில மருத்துவ மனைக் கட்டிடங்கள் மிக மிகப் பழையனவாக இருக்கின்றன. மருத்துவ மனைகளுக்கு ஏற்கெனவே கட்டப்பட்ட கட்டிடங்கள் இன்று செம்மையாக இல்லை. சில சிறைச்சாலையிலே உள்ள கட்டிடங்கள் கூட பழுதாகியிருக்கின்றன. அதுவும் ரயில்வே போக்கு வரத்துக்குப் பக்கத்திலுள்ள கட்டிடங்கள், சென்னை பெரிடென் ஷியரியிலுள்ள கட்டிடங்கள் சில மிகவும் பழுதான கட்டிடங்களாக இருக்கின்றன. கைதிகள்தாலே, அவர்கள் என்ன வேண்டு மானாலும் ஆகட்டும் என்று அமைச்சர்கள் சொல்லிவிட மாட்டார்கள். எனவே அப்படிப்பட்ட மருத்துவமனை சிறைச் சாலை கட்டிடங்களும் இந்த விதிக்கு உட்படுத்தப்படவேண்டும். அரசாங்கத்தாலே எந்தப் பொதுக் காரியங்களுக்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட கட்டிடமாக இருந்தாலும் அந்தக் கட்டிடங்கள் நிச்சயமாக பாதுகாப்பு உடையனவா என்று அவ்வப்போது கண்டறிகிற நிலைமை இருக்க வேண்டும். இந்த லிசென்ஸ் மூன்று ஆண்டு என்று அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆகையினாலே மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது அப்படிப் பரிசிலிக்கப்பட வேண்டும்.

ஆனால் அதற்குக் கட்டணம் உண்டா என்பது தெரியவில்லை. லிசென்ஸ் என்றாலே fees -ம் தொடர்ந்து வருவதுதான் வழக்கம். அப்படிக் கட்டணம் அமைப்பதாக இருந்தால், ஏதோ, பொதுக் காரியங்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் இந்தக் கட்டிடங்களைக் கட்டியிருப்பவர்கள் குறைந்த அளவாக இந்தக் கட்டணத்தைச் செலுத்த ஒரு வரையறை நிர்ணயிக்கவேண்டும்.

மற்றும் இந்த கட்டிடங்களுக்கு ஒரு இலக்கணம் வகுக்கப்பட வேண்டும். அப்படி இல்லாததனால் பெரும்பாலான கட்டிடங்கள் லிசென்ஸ் பெற முடியாத நிலைமை ஏற்பட்டுவிடக்கூடாது. அவை அமைக்கப்பட்டிருக்கின்ற முறையில் வேறுபாடுகள் இருந்தாலும், அவற்றால் ஆபத்து இல்லையா என்பது மட்டுமே கவனிக்கப்பட வேண்டும். அதை மட்டும் தாமாகக் கண்காணிப்பதற்கு எப்படிப் பட்ட இலக்கணம் தேவையோ அல்லது எந்த அடிப்படையிலே அவைகள் கண்காணிக்கப்பட வேண்டுமோ அந்த முறையில் கண்காணிக்க வேண்டுமே தவிர, 1½ அடி அகலமாவது சுவர்கள்

[திரு. க. அன்பழகன்] [26th July 1964

3-30 p.m. இருக்கவேண்டுமென்பது போன்று தொடங்கினால், ஒன்பது அங்குலம் அகலச் சுவர்கள் இருக்கிறது என்பதற்காக க்ளென்ல் மறுக்கப்பட்டால் அந்தக் கட்டிடத்தை மறுபடியும் திருப்பிக் கட்ட முன்வராத நிலை ஏற்படும். அப்படிப்பட்ட ஏராளமான கட்டிடங்கள் இருக்கக்கூடும் என்று நான் நம்புகிறேன். எனவே அப்படி அமைக்கப்படுகிற இலக்கணம் இருக்கிற பல கட்டிடங்களையும் அகற்ற வேண்டிய நிலைமைக்கு ஆளாக்கிவிடாமல் எந்த அளவு உள்ளவற்றை ஏற்றுக் கொள்ள முடியும் என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும். மற்றும் இப்போது பல்வேறு ஆரம்பப் பள்ளிக் கூடங்கள் எல்லாம் கூரைக்கட்டிடங்களாக அல்லது மேலே கனமில்லாத தகடுகளைக்கொண்டு ஷெட்டுகளாக அமைக்கப்பட்ட கட்டிடங்களாக இருக்கின்றன. அப்படிப்பட்ட கட்டிடங்களை ஏற்றுக் கொள்வதற்கும் இந்த மசோதாவில் இடமிருக்கவேண்டும், அல்லது இந்த மசோதாவின்கீழ்ச் செய்யப்படும் விதிகளில் அதற்கு வழிவகுக்கப்படவேண்டும்.

சில இடங்களிலே பாலங்கள் மிகப் பழுதுபட்ட பாலங்களாக இருக்கின்றன. அவைகளாலும் ஆபத்து விளையக்கூடும். பாலங்களும் "Buildings" என்ற தலைப்பிலே வரலாகும். நிலத்திலிருந்து மேலே எழுந்திருக்கிற உயரமான கட்டிடங்களைத் தான் கட்டிடம் என்று சொல்ல நாம் விரும்புகிறோம் என்றாலும், அரசாங்கத்தின் மேற்பார்வையிலுள்ள எல்லா கட்டிடங்களும், பள்ளிக்கூடத்திற்குப் பயன்படுகின்ற கட்டிடங்கள் மாத்திரமல்லாமல், மருத்துவ மனையாக இருந்தாலும், வாசகசாலைகளாக இருந்தாலும், தொழிற் சாலையாக இருந்தாலும், அரசாங்க உத்தியோகத்திலே இருக்கிறவர்கள் குடி இருக்கும் வீடுகளாக இருந்தாலும், அவற்றை எல்லாம் இவ்விதிகளுக்கு உட்படுத்த வேண்டும். போலீஸ்காரர்களுடைய வீடுகளாக இருந்தாலும் ஆபத்து ஏற்படுவதற்கு இடமில்லை என்ற நிலைமை இருக்கவேண்டும். அண்மையில் பத்திரிகைகளிலே பார்த்தோம் ஒரு பள்ளிக்கூடம் கட்டிக் கொண்டிருக்கும் போதே ஒரு பகுதி இடிந்து விழுந்தது என்று. கட்டினிட்டுப் போனதற்கு பின்னால் இடிந்தால் குற்றம் ஆகிவிடும் என்று போலும் கட்டும்போதே இடிந்து விழுந்தது! எனவே அப்படிப்பட்ட பாதுகாப்புக்குத் தேவையான இலக்கணத்துக்கு உட்படுத்தி எல்லாக் கட்டிடங்களையும் கண்காணிக்கத் தகுந்த விதிகளை ஏற்படுத்தி இந்தச் சட்டம் கையாளப்பட வேண்டுமென்று விருப்பத்தை நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

திரு. கே. பாலசுப்பிரமணிய அய்யர் : தலைவரவர்களே, மதுரையில் கட்டிடம் விழுந்ததற்குப் பிறகு எல்லோருக்கும் கவலையாக இருக்கிறது. அதற்காக தடபுடல் பண்ணுகிறார்கள். அதை சாவதானமாக பண்ணவேண்டுமென்று நான் நினைக்கிறேன். எனென்றால் பழைய கட்டிடம் கூடாது, புது கட்டிடம் தான் வேண்டுமென்று சொல்லுவது சரியாக இருக்காது. மதுரையிலே பழைய கட்டிடம் இருக்கிறது, புதிய கட்டிடம் தான் விழுந்தது.

26th July 1964] [திரு. கே. பாலசுப்பிரமணிய அய்யர்]

மேலே இருந்து விழுந்து விட்டது. அதனால் தான் பழையது, புதியது என்று ஏற்பாடு பண்ணி, பழைய கட்டிடம் கூடாது என்று சொன்னால் பிரயோஜனமில்லை. பழையது, புதியது என்று சொல்லுகிற சிரமமில்லாமல் நியாயத்திலே பார்க்கிறதுதான் உத்தமமாக இருக்கும் என்று தோன்றுகிறது. இப்போது புதிதாக அமைக்கப்படுகிற கட்டிடம் சிமெண்டாலே செய்யப்படுகிறது. அவைகளுக்கெல்லாம் பலம் குறைவே தவிர, ஏதோ என்ஜினீயர்கள் சொன்னாலும், நான் அனுபவத்தில் சொல்லுவதையும் ஏற்க வேண்டும். எல்லாவற்றையும் அவர்கள் சொல்லுகிற மாதிரி சட்டம் போட்டு—இது எல்லாம் கமிட்டியிலே வராது—அவர்களுக்குக் கொடுத்துவிடுவார்கள். நிறைய Rules எல்லாம் போட்டு நமக்கு ஒன்றுமே புரியாமல் அடித்து விடுவார்கள். இது அனுபவம் தான். ஏகமாக சட்டங்களைப் போட்டு எங்களுக்கு ஒன்றுமே புரியாத நிலைமை வந்துவிடும். சொம்ப சிரமம் வந்துவிடும். ஆகையினால் இதைப்பற்றி கவனித்து, கட்டிடம் விழக்கூடாதென்ற எண்ணத்தை மாத்திரம் வைத்துக்கொண்டு பாக்கி ஏற்பாடுகளிலே தலையிடாமல் இருந்தால் நன்றாக இருக்கும். கட்டணத்தை அதிகப் படுத்தாமல், இருக்கிற கட்டணம் கூடுதலாக இருந்தால் அந்தக் கட்டணத்தைக் குறைக்க வேண்டுமே தவிர, எல்லாவற்றிற்கும் கட்டணம் இருக்கிறது என்றால், இது வேறு ஜுரம், இரண்டாயிரம் கட்டவேண்டியிருக்கும். பள்ளிக்கூடத்திற்குச் சம்பளமும் இல்லை. சம்பளம் கட்டாமல் படிக்க வேண்டுமென்று இப்போது செய்து விட்டார்கள். பள்ளிக்கூட நிர்வாகிகளுக்கு ஒன்றுமே புரியவில்லை. கஷ்டப்படுகிறார்கள். எல்லாவற்றையும் பரிசீலனை பண்ணித்தான். இந்தச் சட்டத்தைக் கொண்டு வரவேண்டும். பழைய கட்டிடங்கள் வயதானவர்களைப்போல், இப்போது வயதானவர்கள்தான் பலமாக இருக்கிறார்கள். நம் அனுபவத்தில் பார்க்கிறோம். அந்த மாதிரியான நிலை கட்டிடமும். மனிதர்கள் மாதிரித்தான். நல்ல அழுத்தமான கட்டிடங்கள் சுண்ணாம்பை அறைத்து கறைத்து கட்டப்பட்டு நன்றாகப் பண்ணி இருக்கிறார்கள். அந்தக்கட்டிடமெல்லாம் இடிக்கிறதற்கே சிரமப்படுகிறது. மதுரையில் திருமலை நாயகர் மகாலைச் சீர்திருத்தம் பார்க்காமல் இருக்கிறதற்குக் காரணம் அதுதான். இவர்களாலே முடியவில்லை. இருக்கிறதை இடிக்கிறது என்றால் இடிக்க முடியவில்லை. நான்கூட பழைய கட்டிடத்தில் தான் இருக்கிறேன். ஏதோ சீர்திருத்தம் செய்ய வேண்டுமென்றால் முடியவில்லை. எல்லாம் பழைய கட்டிடங்கள், ஆகையினாலே இந்தப் பழைய கட்டிடங்கள் பிரயோஜனமில்லை என்று சொல்லுகிறது சொம்பத் தப்பு. நாங்கள் சொல்லமாட்டோம். என்ஜினீயர்கள் சொல்லுவார்களே என்று பயமாக இருக்கிறது என்று சொல்லலாம். அவர்கள் புதிதாக வந்தவர்கள். பழைய கட்டிடம் விழாமல் இருக்கிறதா என்பதைத்தான் பார்க்கவேண்டும்.

முன்னே எல்லாம் கல்லில் அடுக்கினால் அந்த கல்வரிசை சரியாக இருக்கிறதா என்று கயிற்றை வைத்து பார்ப்பார்கள். இப்போது அதெல்லாம் கிடையாது. கட்டிக்கொண்டே இருக்கிறார்கள்.

[திரு. கே. பூவலகப்பிசாமணிய அய்யர்] [28th July 1964

தூங்கிவிழுந்துகொண்டே இருக்கிறார்கள். இவ்வளவு வசதிகளை எல்லாவற்றையும் இவர்களுக்கு அரசாங்கம் செய்து கொடுத்திருக்கிறது. அது எல்லாவற்றையும் பிடித்துக்கொள்ளும் என்று நினைத்திருக்கிறார்கள். அதைப் பற்றி அது அப்படிப் பிடிக்கவில்லை என்று தோன்றுகிறது. அது இன்ஜினியர்களுக்குத் தெரியாது. கட்டிடக்காரர்கள் வேண்டுமென்றே இன்ஜினியர்களுக்குத் தெரியாது. அவர்கள் கட்டிக் கொண்டேயிருப்பார்கள். இவர்கள் எப்போதாவது போய்ப் பார்த்துவருவதோடு சரி. அடுக்கு நிற்கிறதா என்று பார்க்கிறார்கள். போகிறார்கள். அது விழுந்துகொண்டேயிருக்கிறது. இதையெல்லாம் நான் விளையாட்டாகச் சொல்கிறேன் என்று நினைக்கக்கூடாது. கட்டிடம் நன்றாக இருக்கிறதா, பலத்தோடு இருக்கிறதா, விழாமல் இருக்குமா என்ற ஒரே எண்ணத்தை வைத்துக்கொண்டு பரிசீலனை செய்தால் நன்றாக இருக்கும். ஏனென்றால் கட்டிடங்கள் பலவருஷங்களாக நம் நாட்டில் இருந்து வருகின்றன. ஒரு கட்டிடம் விழுந்ததற்காக எல்லா கட்டிடங்களையும் இவர்கள் பரிசீலனை செய்ய மூன்று வருஷம் வைத்திருக்கிறார்கள். இவர்கள் பரிசீலனை செய்வதற்குள் மூன்று வருஷமாகிவிடும். உண்மையில் கட்டிடம் எப்படியிருந்தால் ஒழுங்காக இருக்குமென்ற ஒரே நினைப்பை மனதில் வைத்துக்கொண்டு அழகாக ஒழுங்காக பரிசீலனை செய்தால் நன்றாக இருக்குமென்று பொறுக்குக் குழு வைக்கேட்டுக் கொள்கிறேன்.

*திரு. எஸ். கே. சம்பத்தன்: மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, எனக்கு முன்பு பேசியவர்களின் கருத்துக்களை முழுமையாக ஆதரிப்பதோடு இந்தச் சட்டம் கொண்டுவருவதற்கு முன்னால் இந்தப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு அளிக்கப் படும் மானியத்தை அதிகப்படுத்திக் கொடுக்குமாறு அரசாங்கத் தைக் கேட்டுக்கொள்கிறேன். சட்டத்தை அமுலுக்குக் கொண்டு வந்து சரியான கட்டிடம் இல்லை என்கிற நிலை ஏற்பட்டால் அனேக மாக பள்ளிக்கட்டிடங்கள் எல்லாமே ஒரு ஆண்டிலோ ஒரு சில ஆண்டுகளிலோ திரும்ப கட்டமுடியாத நிலையில் இருக்கும். இப்போது கொடுக்கிற மானியத்தைவிட இந்தச் சட்டம் வந்த பிறகு உடனடியாக அதைத் திருத்தியமைத்து கூடுதலாகக் கொடுத்து கட்டிடத்தைப் பூர்த்தியாக்கும் நிலையை இப்போதே அரசாங்கம் யோசிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றும் இந்தச் சட்டம் வருவதற்கு முன் அரசாங்கத்தால் நடத் தப்படும் பள்ளிகளின் கட்டிடங்கள் பஞ்சாயத்து, பஞ்சாயத்து யூனியன்கள் நடத்தும் பள்ளிகளின் கட்டிடங்கள் சரியாக இருக் கின்றனவா, திருத்தியமைக்கவேண்டியதா என்று உடனடியாக அரசாங்கம் கவனிக்கவேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். எனக்குத்தெரிந்த வரை யில் பல எலிமெண்டரி பள்ளிக் கட்டிடங்கள் மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கின்றன. அப்படிப்பட்ட கட்டிடங்களைக் காண்ப தற்கே கண் கூசும். அப்படிப்பட்ட பள்ளிகளுக்கு அமைச்சர் சென்றால் தெரியவரும். ஆனால் அவைகளுக்கு அமைச்சர்கள்

28th July 1964] [திரு. எஸ். கே. சம்பத்தன்]

செல்வதில்லை. அப்படிப்பட்ட இடங்களை நேரில் விசாரித்து அந்த இடத்தை முன்னேறுவதாக அரசாங்கம் சிந்திக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மிஸ்டர் சேர்மன்: கட்டிடத்தை சீர்திருத்தான் சட்டம், இடத்தை அல்ல.

திரு. கே. கமலக்கண்ணன்: மன்றத் தலைவர் அவர்களே, 2-40 p.m. பொதுக்கட்டிட உரிமை வழங்குதல் மசோதாவைப் பற்றிச் சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். சென்ற போன்ற தமிழ் நாட்டிலுள்ள பழைய நகரங்களில் எறக்குறைய 200, 300 ஆண்டு களாக இருக்கின்ற பல பழைய கட்டிடங்கள் உள்ளன. அந்தக் கட்டிடங்கள் நல்ல முறையில் மெக்கானிக்கல் முறைப்படி கட்ட வில்லை. சில சுவர்கள் கூட ஒன்றரை இரண்டரை அடி கனமுள்ள தாக இருக்கின்றன. ஆனால் இரண்டு பக்கங்களிலும் கட்டிடம் கட்டி இடையில் சேறு, மண்ணு, ஜல்லிகளைப் போட்டு பல சுவர் களை எழுப்பிய பெரிய கட்டிடங்கள் இருக்கின்றன. சென்னை நகரத்தில் பீச்சு ஓரமாக பெரிய கட்டிடங்களைப் பார்க்கும்போது மூன்று நான்கு அடிக்கு மேல் கடைக்கால் இல்லாமல் பழைய கட்டிடங்கள் இருக்கின்றன. அவைகள் தற்சமயம் பார்வைக்கு நன்றாக இருந்தாலும் பழைய கட்டிடங்கள் தான். வயது ஆக ஆக கட்டிடங்களின் சக்தி குறைந்துவிடுகிறது. அப்படிப்பட்ட கட்டிடங்கள் நல்ல சக்தியோடு இருக்குமா என்பதை கண் காணித்தால் நன்றாக இருக்குமென்று நினைக்கிறேன். மழை காலத்தில் சில சமயம் வெயில் அதிகமாகலும்கூட பழைய கட்டிடங்கள் உள்ள இடங்களில் பூமி வெடிப்பு விடுவதுண்டு. தியாகராயநகரில் கூட சில சமயங்களில் வெடிப்பு விடுகிறது என்று கூறுகிறார்கள். அந்த காரணத்தால் பல கட்டிடங்களில் எதிர் பாராத விதமாக (திராக்) ஆக்ஸ் உண்டாகும். அவற்றைக் கண்காணித்து 'திராக்' என்ன காரணத்தால் வந்தது எப்படி நிவர்த்திப்பது என்று பரிசீலனை செய்தால் மிக மிக நன்றாக இருக்குமென்று என்னுடைய அபிப்பிராயத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சேர்மன் அவர்களே, இந்த மசோதாவிலே பள்ளிகள் மாத்திரம்தான் சேர்க்கப்பட்டிருக்கிறது என்று மு. திருஞானசுந்தரம் அவர்கள் சொன்னார்கள். Definition ஐப் பார்த்தால், அதில் எல்லா பொதுக்கட்டிடங்களும் சேர்க்கப் பட்டிருக்கிறது.

"Public building" means any building to which the public or any class of public are granted access or any building which is open to the public or any class or section of the public and includes . . . '

அந்த மாதிரி டெபினிஷன்படி இதுவும் சேர்ந்தது என்று நாம் பேசிக்கொள்ளலாம். அதனால் பொதுமக்கள் உபயோகிக்கக்கூடிய எல்லா இடங்கள் எல்லாம் சேர்க்கப்படுகின்றன. அதே போல

[திரு. ஆர் வெங்கட்டராமன்] [28th July 1964

ஆஸ்பத்திரி, நர்சிங் ஹோம், டில்பென்சரி, மெட்டர்னிடி சென்டர் லிசென்ஸ் பெறவேண்டுமென்று விதிபோட்டிருக்கிறோம். அடுத்து, இந்தக் கட்டிடம் சரியான முறையில் அமைந்திருக்கிறதா என்று பார்க்க நாம் போட்டிருக்கிற சட்டத்தில், கட்டிடம் கட்டியவர்கள் தாங்களே ஒரு சர்ட்டிபிகேட் வாங்கிக் கொடுக்கலாம். சர்க்காரிடத்தில் போய்த்தான் வாங்க வேண்டுமென்ற அவசியம் இல்லை. செக்ஷன் 3-ல் பார்த்தால் இது பொதுக், கட்டிடம், எங்களுக்கு லிசென்ஸ் வேண்டுமென்று அப்ளிகேஷன் போடுகிறவர்கள் ஒரு இஞ்சினியரிடத்திலேPrescribed qualification உள்ள இஞ்சினியரிடத்தில் வாங்கி அனுப்பலாம்

" An application under sub-section (1) will be accompanied by a certificate of structural foundness in the prescribed form obtained from an engineer possessing such qualifications as may be prescribed." எல்லாவற்றையும் சர்க்காரிலிருந்து பார்த்து பரிசிலனை செய்வது என்பது காலதாமதத்திற்கு இடமளிக்கும். பொதுவாக இலை இடங்களில் எலிமெண்டரி பள்ளிகளில் கூட ரூஃப் Light-roof இருக்கிறது. அதற்கெல்லாம் இருக்கிறது. அதற்கெல்லாம் எக்செம்ப்ஷன் exemption வேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு கிளாள் 18-ல் வசதி செய்திருக்கிறோம். சர்க்காரில் எந்தந்த இடங்களுக்கு எக்செம்ப்ஷன் கொடுக்கவேண்டுமென்று நினைக்கிறார்களோ அதற்கு எக்செம்ப்ஷன் கொடுக்கும் அதிகாரம் செக்ஷன் 18-ல் போட்டிருக்கிறோம். மேற்கொண்டு மாறுதல் செய்யவேண்டுமென்றால் ஆய்வுக் குழு செய்யும் என்று சொல்லி இந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

MR. CHAIRMAN : The question is—

" That this House concurs with the Assembly in setting up a Joint Select Committee of both the Houses consisting of 21 Members (14 Members of the Legislative Assembly and 7 Members of the Legislative Council) to consider the Madras Public Buildings (Licensing) Bill, 1964 (L.A. Bill No. 31 of 1964) and that the following Members of this House be selected to serve on such a Joint Select Committee :—

Sri K. Balasubramanya Ayyar,

Sri C. P. Chitrarasu,

Sri M. Rajah Iyer,

Sri SP. K. A. Lashmanan Chettiar,

Sri R. Sivasankara Mehta,

Sri K. Rajaram and

The Hon. Sri R. Venkataraman (Mover of the Bill) ".

The motion was put and carried.

28th July 1964]

(2) THE MADRAS CINEMAS (REGULATION) AMENDMENT BILL, 1964 (L.A. BILL NO. 22 OF 1964)

* THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Mr. Chairman, I move—

" That the Madras Cinemas (Regulation) Amendment Bill, a 1964 (L.A. Bill No. 22 of 1964), as passed by the Assembly, be taken into consideration."

Hon. Members are aware that during the discussion on the Madras Entertainment Tax (Amendment) Bill, 1961, in the House on the 29th March 1961, the Minister for Industries referred to the large-scale evasion of entertainments tax prevalent in the remote village areas where there are touring cinemas and announced on the floor of the House that with a view to arrest such evasion, it has been ordered that surprise inspections of touring cinemas should be made in a select district. As a result of the surprise inspections, serious irregularities have been revealed. Some instances of malpractices were also noticed in permanent theatres as well. It was felt that if there was provision for suspending the licence of the cinema owners for an offence under the Madras Entertainments Tax Act, 1939 (Madras Act X of 1939), it would produce salutary effect and evasion of tax would practically disappear.

Subsequently, the question of publishing a list of offenders was considered that the Collectors might take into account the antecedents of applicants before granting them licences for cinema exhibitions. As the licensing authority has to function only within the statutory provisions of the Madras Cinemas (Regulation) Act, 1955 (Madras Act IX of 1955) and the rules framed thereunder, he cannot take evasion and tax antecedents of the applicant into account. There is, at present, no provision in Madras Act IX of 1955 to disqualify a person who has been convicted of an offence under the Madras Entertainments Tax Act, 1939, from holding a licence under the former Act for any specified period. It is, therefore, proposed to make necessary amendments to the Madras Cinemas (Regulation) Act, 1955.

There is also no provision in Madras Act IX of 1955 to enable the licensing authority to take into consideration also the antecedents of the applicant in deciding whether to grant or refuse a licence or to revoke or suspend the licence of a licensee who has been convicted of an offence under section 14 of Madras Act X of 1939, or has been permitted to compound such offences under Section 15 of that Act. It has also been decided to make suitable provision in Madras Act IX of 1955 in this respect also. The Bill seeks to give effect to the above decisions.

I request that the Bill be taken into consideration.

* Printed as Appendix I on page 59 infra.

[20th July 1964

MR. CHAIRMAN : Motion moved—

"That the Madras Cinemas (Regulation) Amendment Bill, 1964 (L.A. Bill No. 22 of 1964), as passed by the Assembly, be taken into consideration."

* திரு. எஸ். டி. சுந்தரம் : கனம் தலைவரவர்களே, வரி ஏமாற்றம் என்பது சமுதாயத்துக்கு எதிராகச் செய்யப்படுகின்ற குற்றம் என்றுதான் கருத வேண்டும். சினிமா வரி ஏமாற்றத்தைத் தடுக்கும் இந்தத் திருத்த மசோதாவை ஆமோதிக்கும் முறையில் நான் சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்த சினிமா வரி விதிப்பு பற்றியும், அதை சினிமா கொட்டகைக்காரர்கள் ஏமாற்றும் விதத்தைப் பற்றியும் நன்கு ஆராய்ந்து, பல நயமான முறைகளைக் கையாண்டும் பலனளிக்காததால், இந்தத் திருத்த மசோதாவை அரசாங்கம் கொண்டு வந்திருக்கிறது. இதை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன்.

மது விலக்கு ஏற்பட்ட பிறகு, அதன் பயனாக ஒரு தொழில் நன்கு செழித்து வளர்ந்தது என்றால், அது சினிமாத் தொழில்தான். மது விலக்கினால் நாம் மக்களுக்கு என்ன நன்மை செய்யவேண்டுமென்று எண்ணினோமோ, அதைச் செய்தோம். மது விலக்குக்குப் பிறகு, அந்த இடத்தை நிரப்பியது சினிமா தியேட்டர்கள் என்பதை நாம் புள்ளி விவரங்களிலிருந்து அறிகிறோம். சுதந்திரம் கிடைத்து மதுவிலக்குச் சட்டம் கொண்டு வருவதற்கு முன்பு, எவ்வளவு சினிமா தியேட்டர்கள் இருந்தன, மதுவிலக்கு ஏற்பட்ட பிறகு எவ்வளவு சினிமா தியேட்டர்கள் ஏற்பட்டிருக்கின்றன என்று கணக்கெடுத்தால், முக்கியமாக சினிமா தியேட்டர்களின் எண்ணிக்கை அதிகமானதற்குக் காரணம் மதுவிலக்கு ஒன்று என்பது நன்கு புலப்படும். ஆகவே மதுவிலக்கினால் அரசாங்கம் இழந்த பணத்தைச் சரிக்கட்ட, இந்த சினிமா வரியை வசூலிக்கத் தான் வேண்டும். இது வரை இருந்த வரி ஏமாற்றம் இனிமேல் இருக்காது என்ற துணிச்சலில், மற்றொரு சிறிய திருத்தத்தை நான் உங்களுக்குச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

3-50 p.m. ஓராண்டுக்கு முன்பாக, surcharge என்ற வரி விதிப்பு முறையை சர்க்கார் கொண்டுவந்தார்கள். முனிசிபாலிடிகளுக்கு வரும் வருமானம் போதவில்லை; ஆகவே அரசாங்கம் பண உதவி செய்ய வேண்டும் என்று கேட்டபோது, சினிமா தியேட்டர்கள் மீது வரி போட்டு எடுத்துக்கொள்ளலாம் என்று அரசாங்கம் முனிசிபாலிடிகளுக்கு அதிகாரம் வழங்கியிருந்தார்கள். ஏறக்குறைய ரூபாய்க்கு 5 அணா என்று ஏற்கெனவே இருந்த வரியை 100 சத விகிதம் அதிகமாக்கிக் கொள்ளலாம் என்ற திருத்தத்தைக் கொடுத்தார்கள். அந்த முறையில் சில முனிசிபாலிடிகள் வரியை ஏற்றினார்கள். தியேட்டர் கட்டணத்தை ஏற்றியது. அதனால் தியேட்டர்களுக்கு வசூல் குறைந்து, ஏற்கனவே வந்த வருமானமும் குறைந்ததால், அரசாங்கத்துக்கு வரும் வருமானமும் மிகக் குறைந்தது. இந்த surcharge -ஆல் ஏற்பட்ட பலாபலன்களை நிருச்சியில் சமீபத்தில்

20th July 1964] [திரு. எஸ். டி. சுந்தரம்]

ஒரு மாநாடு கூட்டி ஆராய்ந்து, அவற்றை கனம் அமைச்சரவர்களுக்குத் தெரிவித்திருக்கிறார்கள். நாம் இதுவரை வரி ஏமாற்றத்தால் இழந்த வருமானத்தை இந்தத் திருத்தத்தின் காரணமாக பெறப்போவதால், இந்த surcharge -ஐக் கணிசமான அளவு குறைத்தால் சினிமாத் தொழிலுக்குப் போதிய ஊக்கமும், உற்சாகமும் கொடுத்தவர்களாவோம். வரியைப்பற்றி அரசாங்கம் எவ்வளவு அக்கறையாக இருக்கிறதோ, அதே போல கலைத்துறையில் உள்ளவர்கள் மற்றொரு அக்கறையும் எடுத்துக்கொள்ளுகிறோம். சினிமாவை வெறும் தமாஷா வரி சம்பாதித்துக் கொடுக்கும் தொழிலாக மட்டும் நாங்கள் கருதவில்லை. சமுதாயத்தில் மிகச் செல்வாக்குப் படைத்த சாதனம் சினிமா. உணவு, உடை, வீடு, இதற்கு அடுத்தபடியாக நான்காவது தேவையாக இன்றைய தினம் சினிமா இருக்கிறது. நம்முடைய வாலிபர்களும், மக்களும் அதை நான்காவது தேவையாகக் கருதுகிறார்கள். பணம் இருக்கிறதோ இல்லையோ சினிமாவுக்குப் போக வேண்டும் என்று விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட சக்தி வாய்ந்த தொழிலை, எவ்வளவு தூரம் சமுதாயத்துக்குப் பயன்படும்படி செய்ய வேண்டுமோ அப்படிச் செய்து கொள்ள வேண்டும். இதை என் சொல்லுகிறேன் என்றால், வரி ஏமாற்றத்தைப் போல, மற்றொரு ஏமாற்றத்தையும் நாம் அனுபவ பூர்வமாகக் காண்கிறோம். அது என்னவென்றால், இப்போது நாம் பல திட்டங்களை நிறைவேற்றியிருக்கிறோம். இந்தத் திட்டங்களைப் பற்றியும், மக்கள் அதனால் பெறும் பலன்களைப் பற்றியும், Films Division of India Documentary -ஆக படங்கள் எடுக்கப்பட்டு, மக்களுக்கு விளக்கப்படுகின்றன. அந்த Documentary படங்களைத் தியேட்டர்கள் எல்லாம் திரையிட வேண்டும் என்று ஒரு சட்டமிருக்கிறது. அப்படிச் சட்டம் இருந்த போதிலும், தியேட்டர்களுக்கு வினியோகிக்கப்படும் Documentary படங்கள் சரிவரக் காட்டப்படுகின்றனவா என்பது சந்தேகமாகவிருக்கிறது. அந்தப் படங்களுக்காக அரசாங்கத்துக்குக் கட்ட வேண்டிய கட்டணம் 4 ரூபாய் அல்லது 6 ரூபாய் என்று ஒரு கட்டணத்தை அரசாங்கம் நிர்ணயித்திருக்கிறது. அந்தக் கட்டணத்தை மட்டும் தியேட்டர்கள் கட்டிவிட்டு, படத்தை வாங்கி திரையிடாமல் வைத்து விடுகிறார்கள். வெளியூர்களில் இது சர்வசாதாரணம். அதனால், லட்சக்கணக்கான ரூபாய் செலவில் தயாரிக்கப்படும் Documentary படங்கள் மக்களுக்குக் காண்பிக்கப்படாமல் போய் விடுகின்றன. ஆகவே வரி ஏமாற்றத்தைக் கண்காணிக்கும் அதிகாரிகளே, இந்த Documentary படங்கள் தியேட்டர்களில் காண்பிக்கப்படுகின்றனவா என்பதையும் கண்காணிக்கச் செய்வது உசிதமாக இருக்கும். சமீபத்தில், மக்களுக்கு திட்டங்களைப் பற்றி விளக்க எந்தச் சாதனம், எந்தத் துறை சக்தி படைத்ததாக இருக்கிறது என்பதைப் பரிசீலிக்க ஒரு குழு (Committee) சினிமாத் துறை தான், Documentary Film கள் எடுத்து திரையிடக்கூடிய சினிமாத் துறைதான் சக்தி வாய்ந்த சாதனம், ஜனங்கள் புரிந்து கொள்ளுகிற சாதனம் என்று தன்னுடைய அறிக்கையில் கூறி

[திரு. எஸ். டி. சுந்தரம்] [28th July 1964

விருக்கிறது. ஆனல் எடுக்கப்படும் Documentary படங்கள் மக்களுக்குக் காண்பிக்கப்படாமல் தவறிவிடுகின்றன. ஆகவே, இந்தப் படங்கள் சினிமா தியேட்டர்களில் காண்பிக்கப்படுகின்றனவா என்று மேற்பார்வை செய்யும் அலுவலையும், இந்த வரி ஏமாற்றத்தைக் கண்காணிக்கும் இலாக்காவே எடுத்துக்கொண்டால் சுலபமாக இருக்கும்.

மற்றொன்று, இந்த Documentary படங்களை வினியோகிக்கும் போது, இங்கேயுள்ள நம்முடைய மக்களுக்குப் புரியாத வெறுப் பூட்டும் சில படங்களையும் வினியோகம் செய்திருக்கள். அதற்குக் காரணம், இந்தப் படங்களை வினியோகிக்கின்ற துறையிலிருப் பவர்கள் நம்முடைய மக்களுக்கு எது பிடிக்கும் என்று தெரியாத வர்களாக இருக்கிறார்கள். தியேட்டர்களை மேற்பார்வை செய்யும் அதிகாரம் படைத்த நமது ராஜ்ய சர்க்கார் துறையே Film division documentary படங்களை வினியோகிக்கும் உரிமை யையும் ஏற்றுக்கொண்டால், நம்முடைய மக்களுக்குப் புரியும் படியான Documentary படம் எது என்று பார்த்து வினியோகிக்கும் திறமை பெற்றவர்களாக இருப்பார்கள். ஆகவே, நம்முடைய ராஜ்ய சர்க்கார் துறையைச் சேர்ந்தவர்களே வினியோகிக்கும் உரிமையை மேற்கொள்வதோடு, அந்தப் படங்கள் காட்டப் படுகின்றனவா என்று தியேட்டர்களைக் கண்காணிக்கின்ற அலுவலையும் எடுத்துக்கொள்ள வேண்டும், அதற்கு வேண்டிய திருத்தத்தை இந்தத் திருத்த மசோதாவில் சேர்த்துக்கொண்டால் நல்லது என்பது என்னுடைய எளிய கருத்து என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

SRI K. BALASUBRAMANYA AYYAR: Mr. Chairman, Sir, I welcome this Bill. There is no doubt about it. But there is one inconsistency which I would like to mention. The first clause says that if a person has been convicted of any offence under the Madras Entertainments Act, unless a period of two years elapses since his conviction, he will not be granted a licence. That is, after the period of two years has elapsed, then there is no disqualification. Only within the two years, the disqualification is there. Then in clause 3 (a) explanation of the word 'antecedents' has also been added. The explanation says: "the 'antecedents' means the conduct of the applicant in relation to the payment of any tax or dues payable by him to the Government." Even after the lapse of 10 years we can say his conduct has always been bad, because he was convicted. His conduct, in spite of the payment of the dues, has been bad. Therefore, there is no question of two years elapsing. You can always take that into consideration. What is meant there evidently is, within two years he should be disqualified.

THE HON. SRI R. VENKATARAMAN: He may be disqualified.

SRI K. BALASUBRAMANYA AYYAR: I understand. But still suppose there is a man whose antecedents have been bad, that is, he did not pay, even after five years the officer can say he is

26th July 1964] [Sri K. Balasubramanya Ayyar]

disqualified from grant of licence. Therefore, that one clause alone will do, the conviction clause. I do not understand why this additional clause should be put in. It gives fairly large powers to the licensing authority and they can always use that. That is the inconsistency which I wanted to point out.

* SRI G. KRISHNAMOORTHY: Mr. Chairman, Sir, after hearing the Hon. Minister who piloted the Bill and going through the form in which the Bill is given to us, I think the Bill will not achieve the object for which it has been brought here. The whole Bill centres round the individual, the licensee. Throughout we say that the antecedents of the licensee should be looked into and further licence should be refused. But it is easy for an individual to transfer the cinema house to some other person and see that the cinema hall goes on working. After all, this Bill aims at punishing a single person, a single individual, the licensee if he has not paid the taxes or if he has been convicted of an offence. Such a person would not be eligible for a licence for another period of two years. My point is 'A' is the cinema house owner. He is in default. He evades payment of taxes. He is convicted or he is not convicted. It is proved that his antecedents are not proper. Therefore, Government are going to refuse issuing licence to 'A'. But 'A' immediately transfers or sells the cinema house to 'B' or makes some other arrangements with 'B' to run the cinema house continuously, although he ceases to be the proprietor through the offence committed or the punishment imposed on him. The penalty does not extend to another person who may take over the cinema house immediately or the next day, and runs the house. If really Government want to avoid evasion of payment of this entertainment tax, the aim should be to prevent the running of shows in the same cinema house. It need not be for two years. It may be for one month or two months. That will be a deterrent punishment rather than disqualifying the individual, the person called 'A'. As I said, he can transfer the cinema house in the name of another person and still continue to run the shows. This Bill, therefore, does not achieve anything practical by disqualifying the person. The disqualification should be on the running of shows. How can this Bill stop evasion of tax by imposing the punishment on the person and not on the premises? I fail to understand it. That is my humble point which I want the Government to consider.

* திரு. க. அன்பழகன்: சட்டமன்றத் தலைவரவர்களே, சினிமா நடத்துபவர்கள் அதை நடத்துவதில் கேளிக்கை வரியில் ஏமாற்ற முயலக்கூடாது என்பதற்காக, இந்தத் திருத்த மசோதா இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது என்ற சொன்னதும், அதன் நோக்கம் நிறைவேறுமா என்ற ஐயம் எனக்கு ஏற்படுகிறது. எனக்கு முன்னால் பேசிய திரு. கிருஷ்ணமூர்த்தி எடுத்துக் காட்டியது போல், சட்டத்திற்கு உட்பட்டு தங்களுடைய தொழிலை நடத்த முடியாதவர்கள், அதிலிருந்து தப்புவதற்கான முறைகளில் பல்வேறு மறைமுக நடவடிக்கைகள் எடுப்பார்கள். உச்ச வரம்புச்

6-1 p.m.

[திரு. க. அன்பழகன்] [26th July 1964

சட்டம் கொண்டு வரப்பட்டபோது, அந்த உச்ச வரம்புச் சட்டத்திலிருந்து தப்புவதற்கு யார், யார் எப்படியெப்படி ஏமாற்றி செய்து கொண்டார்கள் என்பது அரசாங்கத்துக்கு நன்றாகத் தெரியும். அதே முறையில் இந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டு கேளிக்கை வரியை ஏமாற்றுபவர்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரையில் கிடைசென்சு கொடுக்காமல் தடுக்கப்படும் என்று தெரிவித்தால், இரண்டு ஆண்டுகள் லைசென்சு கிடைக்காது என்று தெரிந்தவர், இருக்கும் தொழிலை வேறு ஒருவருக்கு மாற்றி, அதன் மூலமாக அனுமதி பெற்று, தொழிலை நடத்த முன் வரக்கூடும். ஆகவே இந்தச் சட்டத்திலிருந்து தப்புவதற்கு வாய்ப்பு பெறக் கூடும் என்று முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து, இந்தச் சட்டம் இப்படிப்பட்ட கேளிக்கை வரியைச் செலுத்துவதில் குற்றம் செய்த ஒருவர், அதற்காகத் தண்டிக்கப் பட்டிருப்பாரானால், தண்டனை பெற்றதற்குப் பின்னர் இரண்டு ஆண்டுகள் அவருக்கு லைசென்சு வழங்கப்படமாட்டாது என்று தெரிகிறது. ஒருவர் ஒரு குற்றத்துக்கு ஒரு முறை தண்டிக்கப் படுவதுதான் நியாயமான நடைமுறை. இன்னொரு முறை தண்டிக் கப்படுவது கிடையாது. ஒரு முறை தண்டிக்கப்பட்டவரை, மறுபடி தொழிலையும் நடத்தக் கூடாது என்று சொல்லுகிறபோது, இரண்டாவது முறை தண்டிக்கப்படுகிறார் என்பதை நான் நினைவூட்ட விரும்புகிறேன். இதில் அவர் மட்டும் தண்டிக்கப் பட்டால், எனக்கு மாறுபாடு இருக்காது. ஆனால் சினிமா கொட்டகை நடத்த அனுமதியில்லை என்று சொல்லுகிறபோது, அதற்கு முதல் போட்ட அந்த முதலாளி மட்டும் தண்டிக்கப்படவில்லை. அவரை நம்பி சினிமா கொட்டகையில் பணியாற்றுகிற 20-30 தொழிலாளிகளும் இரண்டு ஆண்டுகள் வரைக்குமே தம் வேலையை இழக்கிறார்கள், தொழில் இழக்கிறார்கள். அதனால் அவர்கள் வேலையில்லாமல் திண்டாடுகிற நிலைமையும் ஏற்படும். ஒன்று, இந்தச் சட்டத்திலிருந்து தப்புவதற்கு தவறான வழியைப் பயன்படுத்தி கொட்டகையை வேறொருவர் பெயரால் நடத்துகிற நிலைமை ஏற்படும். இல்லையானால், கொட்டகையை இரண்டு ஆண்டுகள் நடத்தமுடியாது என்று சட்டம் இருப்பதனால் முதலாளி, லாபம் சம்பாதிப்பவர், இரண்டு ஆண்டுகள் ஓய்வு எடுத்துக்கொள்ளுவார். தொழிலில் ஈடுபட்டிருக்கிற மற்ற தொழிலாளர்கள் இரண்டு ஆண்டுகள் வேலை கிடைக்காமல் திண்டாடுகிற நிலைமை ஏற்படும். இதனால் சர்க்காருக்கு லாபம் உண்டா என்றால், ஏமாற்றுகிறவர்கள் ஏமாற்ற முயற்சித்து, பல ஆண்டுகள் வெற்றி பெற்று, ஒரு முறை அகப்பட்டுக் கொள்ளுகிறபோது, சட்டத்தால் பாதிக்கப்படுவதைத் தவிர, இதனால் அரசாங்கத்துக்குப் பெரிய இலாபமும் இல்லை. எனவே தொழில் நடைபெறாமல் தடுத்து நிறுத்தக்கூடிய முறையில் சட்டம் இருப்பது அவ்வளவு நல்லதா என்று ஐயப்படுகிறேன். மாறாக, அவர்கள் தவறு செய்கிறபோது, கேளிக்கை வரியில் ஏமாற்றம் செய்கிறபோது, அவர்களுக்கு விதிக்கப்படுகிற தண்டனை, நகை வரி போல், அவர்களுக்கு

26th July 1964] [திரு. க. அன்பழகன்]

விதிக்கப்படுகிற Fine அபராதத் தொகை மிக அதிகமாக இருந்தால், 200 ரூபாய், 300 ரூபாய் ஏமாற்றுபவர்களுக்கு 3,000 ரூபாய், 4,000 ரூபாய் என்று அபராதத் தொகை இருக்குமானால், அது அரசாங்கத்துக்கு இலாபமாகவும் தண்டுபிடிப்பவர் களுக்குங்கூட அதில் ஊக்கம் ஏற்பட இடமும் இருக்க முடியும். அரசாங்கத்துக்கும் நஷ்டம் இல்லாமல் இருக்க முடியும். பால் வியாபாரிகள் தண்ணீர் கலந்து விற்றால், அவர்களுக்கு ஏராளமாக அபராதம் போடப்படுகிறது. ஆனால் அதற்காக மாடு வைத்துக் கொள்ளக்கூடாது, பால் விற்பனையில் ஈடுபடக்கூடாது என்று தடுக்கிற முறை இல்லை. அந்த அபராதத்தை அவர்கள் செலுத்திவிட்டு மீண்டும் ஏமாற்றுவார்களே என்று சொல்லக் கூடும். சினிமாத் தொழிலைப் பொறுத்தவரையில், தொழிலை நடத்த முடியாமல் போனால், தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்கள் என்ற காரணம் இருப்பதால், ஒரு முறை தண்டிக்கப்பட்டவர்கள், மறுபடி இன்னொரு தண்டனை இரண்டு ஆண்டுகள் வரை சினிமா நடத்தக்கூடாது என்று தடுக்கிற இந்த முறையை விட்டு, தண்டனை யை அதிகப்படுத்துவதற்கு, அவர்கள் செலுத்த வேண்டிய அபராதத் தொகையை அதிகப்படுத்த ஏதாவது முறை இருக்குமானாலும், அன்றி ஏமாற்றுகிறவர்களுக்கு வேறு தண்டனை அளிக்க ஏதாவது முறை இருக்குமானாலும் அது வரவேற்கத்தக்கதாகும். மாறாக சினிமா நடத்தக்கூடாது என்று தடுக்கின்ற முறை பயன் தருகிறதாகத் தெரியவில்லை. உயர்திரு பாலசுப்பிரமணிய ஐயர் எடுத்துக் காட்டியது போல, இந்தச் சட்டத்துக்குத் தரப் பட்டிருக்கிற விளக்கம், இரண்டு ஆண்டுகள் மட்டும் பாதிக்காமல், தொடர்ந்தும் பாதிக்கும் என்னும் காணப்படுவதால், அதுவும் மறுபரிசீலனைக்கு உரியதாகும் என்பதையும் நினைவூட்டி, என் னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: சேர்மன் அவர்களே, இந்தச் சட்டம் கொண்டு வரவேண்டிய அவசியத்தைப் பற்றி மாண்புமிகு என்டர்டைன்மெண்ட் அமைச்சர் தெளிவாக எடுத்துச் சொன்னார். Entertainment tax சரியாக வசூலாவதில்லை. பல இடங்களிலே நாங்கள் Surprise Check போட்டுப் பார்த்ததிலே, 15-20 டிக்கெட் விற்றிருப்பார்கள், 400 பேர்கள் உள்ளே இருப்பார்கள். கண்டு பிடித்து அகப்பட்டுக் கொண்டால் என்ன penalty கொண்டுவருமோ அதைக் கொடுத்து விடுவார்கள். மறுபடியும் அடுத்த நாளைக்கு அதே மாதிரி நடக்கும். அதே மாதிரி நடந்து கொண்டிருக்கிறது. அந்த நிலைமை மாறவேண்டுமென்றால் Detterent action எடுக்காவிட்டால் அதை மாற்ற முடியாது. அதற்காகத்தான், இனி இந்த மாதிரி ஏமாற்றம் செய்தால் அந்தப் பிழைப்பு நடத்த முடியாது என்ற ஒரு அச்சத்தை உண்டாக்கினால்தான் வரியை நாம் சரியாக வசூல் செய்ய முடியும் என்ற நிலைமை ஏற்படுகிறது. அதற்காகத் தான் இப்போது பல முறைகளை எல்லாம் நாங்கள் கையாண்டு பார்த்து, இறுதியாக இதுதான் சிறந்த வழி என்ற முடிவுக்கு வந்திருக்கிறோம். இதிலே இரண்டாவது கண்டனையா, மூன்றாவது

[திரு. ஆர். வெங்கட்டராமன்] [28th July 1964

தண்டனையா என்ற பிரச்சினை இல்லே. பிரச்சினை என்னவென்றால் இத்தவிதமான தவறு செய்கிறவர்களுக்கு இனி இத்தத் தொழி லுக்கு வசதி இருக்காதென்ற நிலேமையை ஏற்படுத்தவேண்டும். அந்தத் தொழில் நடத்துவதற்கு வசதி இல்லாமல் இரண்டு ஆண்டு களுக்குச் செய்து விடுவோம்னால் இதிலே வரக்கூடிய லாபம், நஷ்டம் இரண்டையும் அப்போது யாரும் கொஞ்சம் கணித்துப் பார்ப்பார்கள். ஏதோ ஒரு சில நாளேக்கு வரியை ஏமாற்றி, அதனால் சம்பாதிக்கின்ற லாபம் பெரிதா, அகப்பட்டுக் கொண்டால் இரண்டு வருஷம் அவர்கள் அந்தத் தொழிலே நடத்த முடியாமல் போகும் என்பதனால் வருகின்ற நஷ்டம் பெரிதா என்று கணக்குப் போட்டுப் பார்த்து இந்த நஷ்டம் அதிகமாக இருக்கிறது என்று தெரிந்து கொண்டு இந்த வரி ஏமாற்றுவதை நிறுத்தி விடுவார்கள். அதுதான் இன்றைக்கு நாங்கள் ஏற்படுத்தி இருக்கின்ற முறை.

அடுத்தாற்போல், இதை ஏமாற்றிவிடுவார்கள், வேறு ஒருவருக்கு transfer செய்து விடுவார்கள் என்று சொன்னர்கள். அவ்வளவு சுலபமாக transfer செய்த உடனே லிசென்ஸ் கொடுக்க வேண்டு மென்று இல்லே. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சினிமா லிசென்ஸ் வாங்குவதற்கு முயற்சி செய்திருந்தால் தெரியும். Status எல்லாம் கவனிக்கிறோம். வாங்கியவருக்கு status இல்லே என்றால் லிசென்ஸ் கொடுக்க மாட்டார்கள். யாராவது ஒருவருக்கு benami யாக transfer பண்ணினால் அவருக்கு status இருக் கிறதா என்று பார்க்கிறார்கள். வேறு யாருக்காவது transfer பண்ணினால் அவர் லாபத்தை அடித்துக் கொண்டு போய் விடுவார்கள். Land Ceiling ஐ ஏமாற்றினர்கள் என்று சொன்னர் அன்பழகன். இன்னும் கொஞ்சநாள் பொறுத்துப் பார்த்தால் இந்த ஏமாற்றுகிறதற்கு அல்திவாரமான அந்த நிலமெல்லாம் போய்விடும். வாங்கியவர்கள் திருப்பிக்கொடுக்கமாட்டார்கள். அதேமாதிரி நிலேமைதான் இங்கேயும் ஏற்படும். அந்த மாதிரி சுலபமாக மற்றவர்களுக்கு மாற்றிக் கொடுத்தலிடமாட்டார்கள். மாற்றினாலும் கூட உடனடியாக லிசென்ஸ்க்கு apply செய்கிற காலத்தில் அவர்களுடைய Status antecedents எல்லாம் கவனித்துத்தான் லிசென்ஸ் கொடுக்கப்படும். யாரிடமிருந்து வாங்கினர்கள், என் வாங்கினர்கள் என்று பரிசீலனே செய்யப்படும். அந்த மாதிரி ஏமாற்றுகிறதற்கு வழி இல்லே என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஸ்ரீ பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள் சொன்னர்கள், இரண்டு வருஷம் லிசென்ஸ் கிடையாதென்று சொல்லிவிடோம். பிறகு அதை நடத்தலாம் என்று சேர்த்திருக்கிறதே என்று கேட் டார்கள். இது எப்படி என்றால், ஒரு மனிதனுடைய status antecedents எல்லாம் எடுத்து கணக்குப் பார்க்கவேண்டும். அவர் ஒழுங்காக இருக்கிறாரா, குற்றம் சிறிய குற்றமா, முதல் தடவை தான் செய்தாரா, பல முறை செய்து வருகிறாரா என்று எல்லாம் பார்த்து, பல முறை செய்திருந்தால் லிசென்ஸ் கொடுக்கமாட் டார்கள். ஏதோ ஒரு முறை, இரண்டு முறை செய்திருந்தால்

28th July 1964] [திரு. ஆர். வெங்கட்டராமன்]

அந்த Authority-க்கு ஒரு discretion இருக்கிறது. In the first case the licence shall be cancelled for two years. In the second face the licence may be refused if the authority is satisfied that the antecedents are not good.

இந்த ஒரு discretion லிசென்ஸ் கொடுக்கிற authority-க்குக் கொடுத்திருக்கிறோம். அந்த antecedents-ஐப் பார்த்து, அவருடைய நிலேமை status நன்றாக இருந்தால் லிசென்ஸ் கொடுப்பார்கள். Antecedents நிலேமை நன்றாக இல்லே என்றால் satisfactory-யாக இல்லேயென்று சொல்லி விடுவார்கள். Antecedents நன்றாக இருந்தும்கூட, இரண்டு மூன்று முறை அதே தவறு செய்த வர்களாக இருந்தால் அவர்களுக்குக் கொடுக்கமாட்டார்கள். யாராவது ஒரு அதிகாரிக்கு discretion கொடுத்து இதை decide பண்ணக்கூடிய உரிமை கொடுக்கிறோம். அதற்கு மேல் அப்பீல் முதலியவைகளுக்கு provide பண்ணி இருக்கிறோம். அதைப் பார்த்துக் கொள்வார்கள். ஒன்று கட்டாயமாக இரண்டு வருஷம் இல்லே என்று சொல்லுவது. மற்றொன்று, லிசென்ஸ் கொடுக்க லாமா, வேண்டாமா என்று பரிசீலனே செய்வது. இது ஒரு பரிசீலிக்க வேண்டிய விஷயம் என்று முக்கியத்துவம் அளிக்கப் பட்டிருக்கிறது. ஆகவே இந்த மசோதாவை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்.

MR. CHAIRMAN : The question is—

"That the Madras Cinemas (Regulation) Amendment Bill, 1964 (L.A. Bill No. 22 of 1964), as passed by the Assembly, be taken into consideration." 4-10 p.m.

The motion was put and carried and the Bill was taken into consideration.

Clauses 2 to 4 were put and carried.

Clauses 1 and the Preamble were put and carried.

THE HON. SRIMATHI JOTHI VENCATACHELLUM : Mr. Chairman, Sir, I move—

"That the Madras Cinemas (Regulation) Amendment Bill, 1964 (L.A. Bill No. 22 of 1964), as passed by the Assembly, be passed."

MR. CHAIRMAN : The question is—

"That the Madras Cinemas (Regulation) Amendment Bill, 1964 (L.A. Bill No. 22 of 1964) as passed by the Assembly, be passed."

The motion was put and carried and the Bill was passed.

(3) THE MADRAS PANCHAYATS (AMENDMENT AND MISCELLANEOUS PROVISIONS) BILL, 1964 (L.A. BILL NO. 21 OF 1964).

• THE HON. SRI S. M. A. MAJID : Mr. Chairman, Sir, I move—

"That the Madras Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 (L.A. Bill No. 21 of 1964), as passed by the Assembly, be taken into consideration."

• Printed as Appendix II on pages 69-77 infra.

[Sri S. M. A. Majid] [28th July 1964

Hon. Members are aware that the Panchayat Union Councils functioning at present in the State consist of the presidents of the Panchayats and the Chairmen of Township Committees in the respective Panchayat Unions although according to Section 12 of the Madras Panchayats Act, 1958 (Madras Act XXIX of 1958) each of the Panchayat and Township Committee in a Panchayat Union has to elect to the Panchayat Union Council one person from among its members. This was made possible by special legislation undertaken for the first constitution of the Panchayat Union Councils in the State. The intention behind the scheme of making the presidents of Panchayats and Chairmen of Township Committees, members *ex-officio* of Panchayat Union Councils was to avoid the holding of a series of elections in the village in quick succession which usually tended to create faction where none existed before and to aggravate faction where it was already rampant. The village, being a very small unit where every voter knew everybody else, the ill-feelings thus generated last longer than any larger constituencies and made it impossible for group rivalries and personal animosities to subside quickly. Representations have also been received from various panchaayt presidents' associations to place the temporary arrangement on a permanent footing. Experience has also disclosed that it is desirable and advantageous to adopt the said system as a permanent one. The proposed new Section 12 of the Act provides for this.

Hon. Members are aware that a sharp difference of opinion regarding the method of election of Panchayat President and Members of Panchayat Union Councils has arisen. It is stated that direct election is a more democratic method than indirect election. On the other hand, indirect election has stood the test of time and is in vogue in almost all other local authorities not only in this State but also in a majority of other States. The system of direct election of Panchayat President was tried in this State for more than six years but experience conclusively proved that the system was defective and that the old system was preferable. There were cases where directly elected presidents of panchayats worked the system successfully. This was not the merit of the system but of the men. Success was attained not because of, but in spite of the system. In such cases the presidents were usually able and good men whose leadership was undisputed in the village. Such men would have found themselves elected as presidents under the old system. The pros and cons of the question were thrashed out and ultimately it was decided to revert to the system of election of president by the members of the panchayat. The idea of changing this system at this juncture when panchayats have been entrusted with developmental activities and large sums are made available to them will be costly and dangerous experiment. There is also the risk of creating and aggravating factions and disputes and thereby prejudicing the atmosphere necessary for the successful implementation of developmental programme. The arguments advanced against the adoption of the direct election of panchayat

28th July 1964] [Sri S. M. A. Majid]

president will apply with equal force if not more in the case of direct election of members of Panchayat Union Council. It is better that we set at rest this issue. Whatever be the system of election, unless there is utmost co-operation and identity of views between the members and the president, the administration of the panchayat will suffer.

There is no provision at present for the reservation of seats for the members of the Scheduled Tribes on panchayats. The Scheduled Tribes population of the State is about 2½ lakhs and there is concentration of Scheduled Tribes population in certain areas in Salem and North Arcot districts. An enabling provision for the reservation of seats for Scheduled Tribes also in panchayats and for co-option of members of Scheduled Tribes to panchayat union councils has been made in the Bill. The period of reservation of seats for the members of Scheduled Castes made in the Madras Panchayats Act, 1958, will expire after the ensuing ordinary elections to panchayats which are proposed to be held at the end of the year 1964, are over. The Constitution has been amended extending the period of reservation of seats for the Scheduled Castes and Scheduled Tribes by ten years. It is proposed to extend the period of reservation for another ten years in the Madras Panchayats Act also.

As at present, a member of a panchayat can take on contract the execution of a panchayat union work. The panchayats are constituent bodies of panchayat unions. It has been considered necessary and desirable to prohibit persons having contracts with the panchayats or panchayat union councils, from standing for election or continuing as members of a panchayat or panchayat union council.

Under the Madras District Boards Act, 1920, the term 'Land Revenue" included royalty. The present explanation to section 115 of the Madras Panchayats Act, 1958, does not refer to royalties. But certain panchayat union councils continue to levy local cess and local cess surcharge on royalties also. It is proposed to validate the levy and collection of local cess and surcharge made hitherto on royalties and to define the term "land revenue" so as to include royalties, lease amounts or other sums payable to the Government in respect of land held direct from Government on lease or licence.

The power to make rules defining the powers of auditors to disallow and surcharge items and to providing for appeals against orders of disallowance or surcharge was inadvertently omitted to be included in Section 178 (2) of the 1958 Act. It is proposed to incorporate the provision in the said section.

It is proposed to make provision for the appointment of Special Officers in the case of newly constituted panchayat union councils to exercise the powers, discharge the duties and perform the

[Sri S. M. A. Majid] [28th July 1964

functions of the panchayat union council, its chairmen and Commissioner on the lines of a similar provision in Section 368 of the Madras District Municipalities Act, 1920. These are the main purposes for which it is proposed to amend the Madras Panchayats Act, 1958.

In Writ Appeal No. 91 of 1962, the Madras High Court held that there were no panchayats or panchayat union councils in the added territory which were validly constituted and if they survived at all, they could be regarded only as an aggregate of individuals and that such aggregate of individuals could not exercise the statutory powers bestowed on panchayats and panchayat union councils. Consequently, the first panchayat union council for the Pallipet Development Block could not be constituted and the panchayat union councils functioning in the three panchayat unions of Ramakrishnarajupet, Tiruttani and Tiruvelangadu could not be recognised. It is, therefore, proposed to validate the actions of the aggregate of individuals purporting to exercise the powers, discharge the duties and perform the functions of panchayat union councils and panchayats in that area including the levy and collection of tax, cess or fee. It is also proposed to constitute panchayat union councils for the added territory and to appoint Special Officers to exercise the powers, etc., of the councils until the panchayat elections are completed and the members of the panchayat union councils come into office and a chairman is elected. It is proposed to constitute panchayats in that area under the provisions of the Madras Panchayats Act, 1958.

It is proposed to take power to determine the term of office of members of panchayats and panchayat union councils as extended by Madras Act XII of 1962 and to hold elections to panchayats in the State as in the case of municipalities.

The Bill now before the House provides for all these matters and I request the House to accept the motion.

MR. CHAIRMAN : Motion moved—

"That the Madras Panchayats (Amendment and Miscellaneous Provisions) Bill, 1964 (L.A. Bill No. 21 of 1964), as passed by the Assembly, be taken into consideration."

திரு. கே. கே. கோதண்டராமன்: மதிப்புக்குரிய சட்டமன்றத் தலைவரவர்களே, பஞ்சாயத்துச் சட்டத்துக்கு அமைச்சரவர்கள் கொண்டு வந்த திருத்தத்தை மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். பஞ்சாயத்துத் தலைவர்களே யூனியன் அங்கத்தினராக இருக்க வேண்டும் என்று சொன்னது மிக முக்கியமான பலன் தரத்தக்கதாகும் என்று அமைச்சரவர்கள் விளக்கிய போது சொன்னார்கள். பஞ்சாயத்து யூனியன்களுக்கு வேறு அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படவேண்டுமென்று முன்னமிருந்த சட்டத்திலே இருப்பது கிராமங்களிலே பலமிதமான கட்சிப் பூசல்களுக்கு

28th July 1964] [திரு. கே. கே. கோதண்டராமன்]

இடமாகும். சென்ற சுமார் நாலாண்டு கால அனுபவத்திலே பஞ்சாயத்துத் தலைவர்களே யூனியனிலே பங்கு பெற்று, கிராமங்களுக்குரிய திட்டங்களை அவர்களே இருந்து செய்வதுதான் வெற்றிகரமாக நடந்து வருகிறது. அந்த அனுபவத்தை ஒட்டி அரசாங்கம் பஞ்சாயத்துத் தலைவர்களே நிரந்தரமாக யூனியன் அங்கத்தினர்களாக ஆக்கத் திருத்தம் கொண்டு வந்திருப்பது பாராட்டத்தக்கதாகும்.

பஞ்சாயத்து யூனியனில் அங்கத்தினர்களாக உள்ள தலைவர்களே நேரடியாக யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற நியதியில் பல கருத்து மாறுபாடுகள் இருக்கின்றன. பஞ்சாயத்து தலைவர்களும், பஞ்சாயத்து யூனியன் தலைவர்களும் மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற ஒரு கருத்து பாவலாக இருக்கின்றது. மாநில பஞ்சாயத்து யூனியன் சங்கக் கமிட்டி கூட்டத்திலேகூட நேரடித் தேர்தல் முறையை ஆதரித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருந்தது, கன்னியாகுமரி கூட்டத்தில். இருப்பினும் அதனால் பல சங்கடங்கள் நேரிடுகின்றன என்று அரசாங்கம் கருதி இந்தப் பழைய முறையே அமுலாகவேண்டுமென்று இப்போது கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனாலும் என்னுடைய சொந்தக் கருத்திலே, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற தேர்தலில் இருக்கிற பல கஷ்டங்களைப் பார்க்கும் போது, இன்று பஞ்சாயத்து மெம்பர்களாலேயே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றிருப்பது தற்போதைக்கு சரியாக இருக்கலாம். ஆனாலும் அதனால் பஞ்சாயத்துத் தலைவர்களைக் கடத்திக் கொண்டு போவது போன்ற பல ஒழுங்கீனங்களை நாட்டிலே பார்க்கிறோம். ஜனநாயக வழியில் செல்லச் செல்ல இப்படிப்பட்ட ஒழுங்கீனங்கள் இறுதியில் ஏற்படாது என்று நாம் எதிர்பார்க்கலாம். இருப்பினும் பிற்காலத்தில் ஒரு பெரும் பதவிப் பொறுப்புள்ள சேர்மன்களாக இருக்கிறவர்கள் மக்களுக்கு நேரடி பிரதிநிதித்துவம் வகிப்பது தான் சரியாக இருக்கும் என்று நினைக்கிறேன். அதிலுள்ள ஒரு பெரிய ஆட்சேபனை சிலர் சொல்லுகிறார்கள், சட்டசபை தேர்தலை விட இது முக்கியமாகும். சட்டசபைத் தேர்தல் நடந்து அதற்குப் பிறகு பஞ்சாயத்து யூனியன் தலைவரைத் தேர்ந்தெடுக்க வேண்டி வரும். ஆகவே ஐந்தாண்டுகளுக்குள் இரண்டு முறை தேர்தல்கள் வருவது சரியாக இருக்காது என்று ஒரு ஆட்சேபனை சொல்லலாம். ஆனால் சேர்மன் எலக்ஷனை சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்தல் நடக்கும் போதே சேர்த்து வைத்துக் கொள்ளலாம். சட்ட சபை அங்கத்தினருக்கு ஒரு வோட், பார்லிமெண்டு அங்கத்தினருக்கு ஒரு வோட், ஆக இரண்டு ஓட்டுகள் மக்கள் போடுகிறார்கள். அவற்றுடனே சேர்த்து அந்தத் தொகுதியின் சேர்மன் எலக்ஷனுக்கும் மக்கள் ஓட்டு போடும்படி வைத்து விட்டால், இரண்டு முறை எலக்ஷன் வருகிறது, நாட்டிலே தேர்தலாலே குழப்பம் ஏற்படுகிறது என்ற வாதம் அடிபட்டுப் போகும். அதை இப்போது அமுலுக்குக் கொண்டு வருவது கஷ்டமாக இருக்கலாம்.

4-20 p.m.

[திரு. கே. கே. கோதண்டராமன்] [28th July 1964

எனினும் அரசாங்கம் பிற்காலத்தில் நேரடித் தேர்தல் முறை வர வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு ஒரே முறை மேற்படி தேர்தல்களை நடத்தலாம் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

அதோடு இந்த மைனர் பஞ்சாயத்துகளில் தேர்தல் நடக்கின்ற முறையை இந்தச் சட்டத்தின்கீழ் கொண்டுவர வேண்டுமென்று விரும்புகிறேன். மேஜர் பஞ்சாயத்துக்களிலும், முனிசிபாலிடிகளிலும் வார்டு முறையை ஒழுங்காகப் பிரித்து, ஒரு வார்டுக்கு ஒருவர் நிற்பது என்ற முறையில் தேர்தல் நடந்து வருகிறது. ஆனால் மைனர் பஞ்சாயத்துக்களில் ஒரு விசித்திரமான தேர்தல் முறை நடைபெற்று வருகிறது. ஒரு வார்டுக்கு நான்கு மெம்பர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்று இருக்கும். அதில் நான்கு பேர் போக ஐந்தாவதாக ஒருவர் தேர்தலுக்கு நின்றால் நான்கு பேரும் மறுபடியும் வோட்டு போட்டுத்தான் வர வேண்டும். கிராமத்தில் வோட்டு போடுகிறவர்களுக்கு நான்கு வோட்டுகள் உண்டு. ஒரு வார்டுக்கு நான்கு பேர்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றால் அந்த வோட்டர்களுக்கு நான்கு வோட்டுகள் போடவேண்டிய அவசியம் இருக்கிறது. ஐந்துபேர் நின்றால் அங்கே தேர்தல் கண்டிப்பாக நடந்தே தீரவேண்டும். ஆகையால் கிராமங்களில் மக்கள் அவ்வளவாக படிப்பில்லாத இடங்களில் நான்கு வோட்டுகளை எப்படிப்போடுவது என்பதை விளக்குவது கடினமாக இருக்கிறது. அதே சமயத்தில் தேர்தலுக்கு நிற்கிறவர்கள் ஏற்பாடு செய்கிறார்கள். அவரவர்கள் ஜெயிப்பதற்கு எவ்வளவு தேவையோ அதைப் பார்த்து நான்கு வோட்டுகளையும் ஒருவருக்கே போடும்படி ஜனங்களுக்குச் சொல்லி தனக்குத் தேவையான வோட்டுக்களைப் பெற முயற்சிக்கிறார்கள். ஆகவே யார் நிற்கிறார்கள் என்று ஜனங்களுக்கு விளக்கமுடியாமல் போகிறது. தேர்தலுக்கு முந்திய நாள்தான் விண்ணப்ப பாரங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. ஏற்றுக்கொள்ளப்பட்டு மாலையில் பரிசீலனை செய்யப்பட்டு உடனே சின்னங்களை எடுத்துக் கொள்ளச் சொல்கிறார்கள். அப்படிச் சொல்லும்போது அவர்களுக்கு தேவையான புலி, ஆடு, குதிரை போன்ற சின்னங்களை எடுத்து இரவிற்குள்ளாக கிராமங்களுக்குச் சென்று அந்தச் சின்னத்தைப் பற்றி மக்களிடத்தில் பிரசாரம் செய்து மறு நாள் தேர்தல் என்று வைத்திருக்கிறார்கள். மறுநாள் வாபஸ் வாங்குகிற தேதி அறிவிக்கப்படுகிறது. பின்னால் மாலையில் தேர்தல் என்ற நிலை இருக்கிறது. குறைந்த பட்சம் கிராமங்களில் சாவகாசமாக நாம் அளிக்கப்படவேண்டும். தேர்தலுக்கு நிற்கிறவர்கள் விண்ணப்பிக்கவும் சின்னங்களைத் தேர்ந்தெடுக்கவும் காலம் அளிக்கப்படவேண்டும். அதே சமயத்தில் ஜனங்களிடத்தில் சின்னங்களைப் பற்றியும் தன்னுடைய அபேட்சையைப் பற்றியும் பிரசாரம் செய்ய நேரம், வாய்ப்பு இருக்க வேண்டும். மைனர் பஞ்சாயத்துக்களில் உடனடியாக வார்டு பிரிப்பது கஷ்டமாக இருந்தால், அமைச்சர் அவர்கள் அறிவித்தபடி டிசம்பர் மாதத்திற்குள் நடத்துவது என்றாலும்,

28th July 1964] [திரு. கே. கே. கோதண்டராமன்]

காலதாமதமானாலும் பரவாயில்லை. கிராமங்களில் வார்டுகள் ஒழுங்காகப் பிரிக்கப்பட்டு ஒரு வார்டுக்கு ஒருவர் வீதம் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையை அனுஷ்டிக்கும்படி அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன். ஆகவே இப்போது கொண்டு வந்துள்ள இந்தத் திருத்த மசோதாவை ஆதரிக்கிறேன் என்று கூறி அமைதி பெறுகிறேன்.

* SRI S. K. SAMBANDHAN : Mr. Chairman, while welcoming this measure, I wish to congratulate the Hon. the Minister for Local Administration on having brought forward this measure at least now to enable the holding of elections to Panchayats and Panchayat Unions at an early date. The holding of elections to these bodies has been hanging in the air for the last one or two years. At least now the Government have come forward with the final decision to hold the elections at the end of this year. Time and again, we have been told that the whole of the Madras State has been covered by about 375 panchayat unions. I do not think there can be any room for the formation of any new unions. But when one goes through the provisions in the Bill, one sees many provisions which really give room for great doubt. What does the present legislation aim at? The Government have said many times that the whole Madras State has been covered for the formation of Panchayat Unions.

THE HON. SRI R. VENKATARAMAN : This refers to the added territory of Tiruttani, where the extension of our Panchayat Act has been held to be void. That is why they are reconstituted now.

SRI S. K. SAMBANDHAN : Thanks for the information. It refers to the reconstitution and not to the formation of any new panchayats. But still some provisions are not quite clear. For instance, it has been mentioned in many places that a panchayat union can be formed even without a panchayat. I cannot understand how a panchayat union is to be there without a panchayat.

THE HON. SRI R. VENKATARAMAN : With one panchayat.

SRI S. K. SAMBANDHAN : We are going only to constitute the panchayat unions. If there is no panchayat, what is the position? In the proposed section 188-A (2), it is stated, 'The special officer shall exercise the powers, discharge the duties and perform the functions of the panchayat union council', etc. This is the power given to him. Even if there is no panchayat, there can be a panchayat union. This is the idea that the section gives.

திரு. கே. ராஜாராம் : யூனியனுக்குள் ஒரு கிராமத்தில் பஞ்சாயத்து அமைக்கப்படாமலிருந்தால் அந்தப் பிரதேசத்தில் யூனியன், பஞ்சாயத்துப் போலவே எல்லாக் காரியங்களையும் பண்ணலாம் என்பதுதான், வேறு ஒன்றுமில்லை.

[28th July 1964

* SRI S. K. SAMBANDHAN : I would come to this later. Where there is only one panchayat or a township committee, all the members of the panchayat or township committee, as the case may be, shall be members of the panchayat union. Why shoul da panchayat alone be constituted into a panchayat union? Now the township committee will be constituted into a panchayat union. Sir, there are panchayats like Yercaud or township committees like the Courtallam township committee. Why should panchayat unions be formed for Rex Township Committees, especially town panchayats? That is why I am not able to understand why even towns like Kodaikanal or Yercaud or Courtallam should be constituted into panchayat unions, and why they should be called panchayat unions.

Coming to the question of the president, Sir, the question whether there should be direct election or indirect election has been discussed. There are many advantages in both the direct and indirect elections as well as their disadvantages. As things stand at present in our State, for some more time the present procedure of electing the chairman of the panchayat union by indirect election that is, by the members of the panchayat union, is definitely a welcome feature. I welcome this provision. I wish to state here only one thing. There are small panchayats and major panchayats. There are ten to fifteen members in each panchayat with a population of about 500 or a thousand. A village with a population of 500 to 1,000 will have a panchayat consisting of 15 members. This number is too large. If the members of the panchayats are once, if not to-day, asked to elect the chairman of the panchayat union, it will be a very, very difficult affair. I would like to point out this to the Government. They should see whether it is not possible to reduce the number of members of the smaller panchayats, say, with a population of 500 and up to 1,000.

4-30 p.m. In this connection, I may inform the House—I think the Hon. the Leader of the House may know this very well—that in western countries as well as in the American countries, there are only a few members in the city councils to administer big cities with a population of three lakhs or even five lakhs. For instance, the Vancouver City Council has got only 11 Aldermen. Of this ten people are elected as the representatives or members, and one is the chairman, elected directly by the people. Only 11 people are able to govern the civic affairs of a city with a population of about 4 lakhs. Why should we have ten to twelve members or even fifteen members for a small panchayat having a population of 500 to 1,000? The Government should consider this point.

With regard to the position of the town panchayats, I would like to say a few words. Now, in the present set-up, the town panchayats do not derive any benefit from the panchayat union formation or from the panchayat union. I wish the Government to consider the taking away of town panchayats from the unions and form them into municipalities of the last grade, if possible. Because

28th July 1964] [Sri S. K. Sambandhan.]

there is no use of being in a panchayat union without any benefit or without any purpose being served to the people of the panchayat. I have pointed out many times in this House, Sir, that the allocation of funds to the different panchayat unions in the new set-up is very inadequate. They are not even able to meet the demands for immediate necessities of the small villages and small panchayat unions. No money can be spared for the developmental work in the town panchayat area in such unions. While that is the case, why should town panchayats be linked as one of the units of the panchayat unions? Why should not the Government consider the question of taking away these town panchayats and forming them into the last grade municipalities?

I welcome the provisions for the co-option of Scheduled Caste members and women members in the panchayats, if there are not adequate or more than three members in any of the panchayats or panchayat unions. If this co-option is made from among the members of the different panchayats in the panchayat union areas, it will in a way be quite right just to satisfy the people. It will be proper also if co-option is made on this basis. This co-option should be made only from among the members of the different panchayats. The panchayat union consists of thirty to fifty villages and village panchayats. In all these panchayats there will be more than three women members or Scheduled Caste members. So, it would be proper and just, if the members of these panchayats are co-opted in the absence of more than three members in any of the panchayat union or in the panchayat itself.

I would now like to say a word about the fixation of time for the members coming into office. The Government are taking too much of powers and saying that on and from a notified date they should come into office. Why should it not be like the date of coming into office of any member of the State Legislature or Parliament? When they are elected, they become members of the respective panchayats, and the presidents, as and when elected by the panchayats, become members of the panchayat union. Why should they come into office only on the date which the Government notify? This point I wish the Government to consider.

As the Hon. Minister said, in the transferred territory, new panchayats will be formed. It could have been clearly mentioned that in the transferred territory, when new panchayats are formed, this kind of provision would apply. As it is, when I read this, the thought occurred to me as to where the necessity was for the formation of new panchayat unions.

Lastly, I wish the Government to hold the elections to all the panchayats and panchayat unions more or less in two months or three months instead of holding the elections in different panchayats in a period of more than six months. If elections are held over a period of six months that will in a way lead to difficulties for the people and also for those contesting the elections. I request

[Sri S. K. Sambandhan] [28th July 1964

the Government to see that the elections are held within two months for all the panchayats and panchayat unions in the state. Thank you, Sir.

* SRI V. K. RAMASWAMI MUDALIAR: Mr. Chairman, Sir, I wholeheartedly support the Panchayat Amendment Bill that is before the House. Sir, I am one of those who believe that the indirect elections should be continued and that direct elections would not work well. Somebody adduced the argument that if indirect elections were to take place, there would be a lot of lifting of candidates and so on. That kind of thing is there even in the co-operative and other fields. Therefore, that cannot be a valid argument. If direct elections are to be held, it will bring in a lot of complications, class hatred, and so on. To a certain extent, there will also be the practice of taking away the voters to certain places and factions in the villages will increase.

4-40 p.m.

In our district and even in other districts only certain classes of people can capture these bodies. The result will be that some of the communities will not find a place in these local bodies. As it is, indirect election is working well.

I also wholeheartedly support the provision about surcharge made in this Bill. When I was the District Board President, these rules about surcharge were in force and if any item was passed against the rules, the members and also the President were surcharged. Such a provision must be there. I welcome it.

I would go one step further. Under the rules, the Extension Officers of the Panchayats are supposed to audit the accounts of the village panchayats. Unfortunately, when the President of the Panchayat happens to be an *ex officio* member of the Union, the Extension Officer of the Panchayat cannot very strictly audit these accounts. My submission is that the District Panchayat Officer should be the auditor instead of the Extension Officer of the Panchayat who happens to be the servant of the Panchayat Union of which the Panchayat Board President is a member.

With regard to contract, in the course of my election tour recently, I happened to come across so many instances where only the President of the Panchayat and his relations were doing this contract work with the result that the work had not been executed satisfactorily. In those days when the District Board President was in charge, he would allot a certain amount for the buildings or roads and the money would be entrusted to the District Board Divisional Engineers. Here things go the other way about and the system has led to abuse. That also should be prevented. I welcome that provision also.

So far as reservation of seats is concerned, I think the 20-year period is too long.

THE HON. SRI S. M. A. MAJID: It expires in 1970.

SRI V. K. RAMASWAMY MUDALIAR: Then I have nothing to say about it.

28th July 1964]

*திரு. கே. ராஜுசாமி: கனம் தலைவர் அவர்களே, இப்போது சபைமுன் இருக்கும் இந்தத் திருத்த மசோதா மிகவும் முக்கிய மானது. ஏனெனில் இந்த மாநிலத்தின் யூனங்களில் 90 சதவிகிதம் கிராமவாசிகள். அவர்களைப் பாதிக்கக்கூடிய முக்கியமான ஷரத் துக்களைக் கொண்ட திருத்த மசோதா இன்று பிரேரேபிக்கப்பட் டிருக்கிறது. இதில் பஞ்சாயத்து போர்டு தலைவர்களே யூனியன் அங்கத்தினர்களாக இருக்கவேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. இந்த சட்டம் நிறைவேறியவுடனே 1958-ல் தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் இந்த கோரிக்கையை அரசாங்கத்திற்குக் கொடுத்தது. ஆனால் சில காலம் வரை அது கவனிக்கப்படாமல் இருந்து மீண்டும் சட்டசபையில் ஒரு திருத்தம் கொண்டுவரப்பட்டு தற்காலிகமாக முதலில் அமைக்கப்படும் பஞ்சாயத்து யூனியன்களுக்கு மட்டும் பஞ்சாயத்து போர்டு தலைவர்களே யூனியன் அங்கத்தினர்களாக இருக்கலாம் என்று திருத்தப்பட்டது. இப்போது அது நிரந்தர மாக்கப்படுகிறது. அது மிகவும் வரவேற்கக்கூடிய ஒரு திருத்தம். அதற்கு அரசாங்கத்தை நான் பாராட்டுகிறேன். இது ஏற்கனவே வந்திருக்கவேண்டிய முக்கியமான திருத்தம். அடுத்தபடியாக ஷெடியூல்டு டிரைப்ஸ் என்று சொல்லிற ஆதிவாசிகளுக்கு பஞ்சா யத்து யூனியனில் ஸ்தானம் ஒதுக்கப்படாமலிருந்தது. இப்போது புதிதாக அதை ஒதுக்க ஏற்பாடாகி இருக்கிறது. அதில் ஒரு சந்தேகம் எனக்கு ஏற்பட்டிருக்கிறது. அதை அரசாங்கம் சற்று யோசித்துப் பார்த்து முடியுமானால் விளக்கம் கொடுக்கவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு பஞ்சாயத்து யூனியனில் ஏற் கனவே மூன்று ஷெட்யூல்டு காஸ்ட்டைச் சேர்ந்த பஞ்சாயத்து போர்டு தலைவர்கள் அங்கத்தினர்களாக இருந்தால், கோ-ஆப்ட் செய்வதற்கு இடமிருக்காது. அந்த யூனியன் பகுதியில் ஷெட்யூல் டிரைப்ஸைச் சேர்ந்தவர்கள் நிறைய குடியிருக்கலாம். அவர் களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடும். அவர்கள் குடியிருக்கும் பஞ்சாயத்து யூனியன் பகுதியில் அவசியம் ஒரு ஷெடியூல்டு டிரைபைச் சேர்ந்தவர் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுத் திருக்கவேண்டும். அப்படியில்லையெனில் ஒருவரையாவது கோ-ஆப்ட் செய்யவேண்டுமென்று கம்பல்சரியாக ஒரு கிளாஸ் இருந் தால் நல்லது. இப்போது திருத்தமுடியாவிட்டாலும், மனதில் வைத்து அதற்கு ஏதாவது செய்யவேண்டும். சூல்கேஜ் போடும் போது ஒரு பிரதிநிதியாவது ஷெட்யூல்டு டிரைபைச் சேர்ந்தவராக இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். சட்டம் இடம் கொடுக்காதெனில் திருத்தம் கொண்டுவந்து நிறைவேற்றலாம். உதாரணமாக சேலம் ஜில்லாவில் ஷெடியூல்டு ட்ரைப்பினர் நிறைய இருக்கிறார்கள். அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் இல்லாமல் போய்விடும். அவர்களை எல்லாம் கொண்டுவந்து பஞ்சாயத்து நிர்வாகத்தில் ஈடுபடுத்துவது நமது முக்கிய கடமை.

அடுத்தபடியாக, இந்தச் சட்டம் 1958-ல் சர்வகட்சிகளும் கூடி ஏகமனதாக நிறைவேற்றப்பட்ட சட்டம். இதில் கட்சி பிரதி னத்திற்கு இடமில்லாமல் செய்யப்பட்டது. கிராமங்களில் அரசியல் குழப்பம், கொந்தளிப்பு ஏற்படாமல் பஞ்சாயத்துத் தேர்தலில்

[திரு. கே. ராஜாராம்] [28th July 1964

கட்சிகள் ஒதுங்கியே இருக்கவேண்டுமென்ற எண்ணத்தை மனதில் கொண்டு எல்லாக் கட்சிக்காரர்களையும் கூட்டி அரசாங்கம் அதை ஏகமனதாக நிறைவேற்றியது, பாராட்டத்தக்கதாக இருந்தது. இப்போது இந்தத் திருத்தத்தைக் கொண்டுவருவதற்கு முன்பு எல்லாக் கட்சிக்காரர்களையும் கலந்துகொண்டு இந்தத் திருத்தத்தைப் பிரேரேபித்திருந்தால் அசெம்பிளியில் நடந்த மாதிரி ஓட்டுகளுக்கு விடவேண்டிய அவசியம் இருந்திருக்காது. பஞ்சாயத்தைப் பொருத்தவரையில் தகராறு இல்லாமல் இருந்தால் மிகவும் நன்றாக இருக்குமென்பது என்னுடைய அபிப்பிராயம். பஞ்சாயத்துத் தலைவர்கள் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தேர்தல் நேரடியாக இருக்கவேண்டுமா மறைமுகமாக இருக்கவேண்டுமா என்ற பிரச்னையைக் கட்சிப் பிரதி கட்சிக் கொள்கையாக எடுத்துக்கொள்ளக்கூடாது. பொதுவாக கிராமத்தின் நல்ல முன்னேற்றத்தை மனதில் கொண்டு பரிசீலித்துப் பார்க்கவேண்டும். தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியனைப் பொருத்தவரை ஏகமனதாக பல ஆண்டுகளாக நேரடித் தேர்தல்தான் இருக்கவேண்டுமென்று சொல்லி வந்திருக்கிறோம். இதைத் தீர்மானமாக செய்து அனுப்பியிருக்கிறோம். ஆனால் இதை முடிவு செய்ய வேண்டிய பொறுப்பு சட்ட மன்றத்தையும் அரசாங்கத்தையும் பொருத்தது. அரசாங்கமும் சட்டசபையும் என்ன தீர்ப்பு செய்கிறதோ அதை ஏற்றுக்கொள்ள பஞ்சாயத்து யூனியன் தயாராக இருக்கிறது. பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்களின் அபிப்பிராயத்தை அரசாங்கம் தெரிந்து கொண்டால் நன்றாக இருக்குமென்று என்போன்றவர்கள் எண்ணியதால் ஜூன், 30-ல் ஒரு மகாநாடு, நடத்துவதாக இருந்தோம். முதலமைச்சருக்கு ஏற்பட்ட விபத்தின் காரணமாக மகாநாடு ஒத்திப்போய்க்கொண்டே இருந்து இந்தத் திருத்தமும் மகாநாட்டுக்கு முன்பே இன்று நிறைவேறும்படி ஆகிவிட்டது. தேர்தல் நடத்துவது பற்றிய திருத்தம் இதில் சேர்க்கமுடியாமல் இப்போது அரசாங்கம் முடிவு செய்துவிட்டது.

4-50 p.m. இருப்பினும் கூட இந்த முக்கியமான யோசனையை அரசாங்கம் கைவிட்டுவிடக்கூடாது. நேரடித் தேர்தல்தான் நல்லது என்ற எண்ணம் இன்று காலையில் கூடிய தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன்களின் சங்க நிர்வாகக்குழு கூட்டத்தில் கூட ஏகமனதாக தெரிவிக்கப்பட்டது. அந்த எண்ணத்தை நான் இங்கே எடுத்துப்பேச வேண்டுமென்று எல்லா அங்கத்தினர்களும் வற்புறுத்தினர்கள். அதைத்தான் நான் இங்கே வலியுறுத்துகிறேன். அது நல்ல யோசனைதான். ஆனால் அரசாங்கம் ஏற்கனவே முடிவு செய்துவிட்டபடியால், அந்த முடிவை இனிமேலாவது புனராலோசனை செய்து, மாற்ற இடமிருந்தால், மாற்ற ஏற்பாடு செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்து, இன்னும் சில முக்கியமான பிரச்னைகளை எடுத்துச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். பஞ்சாயத்து யூனியன்கள் 6 அங்கத்தினர்களை Co-option செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. பஞ்சாயத்து யூனியன்களில், பெண் அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்றால், 3 பெண்களையும், Scheduled

28th July 1964] [திரு. கே. ராஜாராம்]

Tribe, Scheduled Class அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப்படாவிட்டால், 3 scheduled tribe, scheduled class அங்கத்தினர்களையும், ஆக 6 அங்கத்தினர்களை பஞ்சாயத்து யூனியன்கள் கூட்டு அங்கத்தினர்களாகச் சேர்த்துக் கொள்ளலாம் என்று கூறப்பட்டிருக்கிறது. சில பஞ்சாயத்து யூனியன்கள், 8 அங்கத்தினர்களை மட்டுமே, அதாவது 8 பஞ்சாயத்துக்களை மட்டுமே கொண்டதாக இருக்கிறது. சிங்காநல்லூர், பேரூர் கம்பம், இந்த மூன்று பஞ்சாயத்து யூனியன்களிலும் 7 அல்லது 8 தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள்தான் இருக்கிறார்கள். இந்த மாதிரி யூனியன்களில், 6 பேர் co-opt செய்து வந்து விட்டால், அவர்களே மெஜாரிட்டியாக ஆக இடமேற்படுகிறது. ஆகையால் co-opt செய்யப்படுபவர்கள் பாதிக்குமேல் இருக்கக்கூடாது. இந்த மாதிரி ஒரு provision-ஐயாவது சட்டத்தில் சேர்த்தால் நன்றாக இருக்கும். பத்து பஞ்சாயத்துக்களைக் கொண்ட யூனியனாக இருந்தால், 5 பேரை co-opt செய்யலாம், 12 பஞ்சாயத்துக்களுக்கு மேல் உள்ள யூனியனாக இருந்தாலும் 6 பேருக்கு மேல் co-opt செய்து கொள்ளலாம் என்று இருந்தால் நன்றாக இருக்கும். மொத்தம் 8 பஞ்சாயத்துக்களைக் கொண்ட யூனியன், 6 பேரை co-opt செய்து கொள்ளலாம் என்றால், அது அவ்வளவு நல்லதாக எனக்கு தோன்றவில்லை.

அடுத்தபடியாக, இன்னொரு பிரச்னை என்ன வென்றால் கன்னியாகுமரி ஜில்லாவை நாம் சரியாகக் கவனிப்பது இல்லை என்ற குறையிருந்தது. அந்தக் குறையைப் போக்க, தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் சங்க நிர்வாகக் குழு கூட்டத்தை, கன்னியாகுமரியில் 6 மாதத்துக்கு முன்னால் கூட்டி, அங்கேயுள்ள பிரச்னைகளைத் தெரிந்து, பல தீர்மானங்களைப் போட்டு அரசாங்கத்துக்கு அனுப்பி வைத்தோம். நாங்கள் செய்த சிபார்சுகளில் பலவற்றையும் இரண்டு மாதத்துக்குள் ஏற்றுக்கொண்டு, தீர்த்து வைத்தார்கள். இப்போது புதிதாக அங்கே பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடத்தப் போகிறபோது, அரசாங்கத்துக்கு ஒன்றை நினைவு படுத்த விரும்புகிறேன். தோவாளை பஞ்சாயத்து யூனியனில், 6 பஞ்சாயத்துக்கள் இருக்கின்றன. இதில் மொத்தம் இருப்பது 36 அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இந்த 36 பேரும், பஞ்சாயத்து மெம்பர்களே, பஞ்சாயத்து யூனியன் கவுன்சிலர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். ஒவ்வொரு பஞ்சாயத்து வார்டையும், பல சிறு வார்டுகளாகப் பிரிக்கப் போகிறார்கள். அப்படி தோவாளை பஞ்சாயத்து யூனியனை மொத்தம் 80 வார்டுகளாகப் பிரிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. இந்த 80 வார்டு மெம்பர்களும், பஞ்சாயத்து யூனியன் மெம்பர்களாகப் போகிறார்கள். இந்த மாதிரி பஞ்சாயத்து யூனியனை unwieldy ஆகவைப்பது சரியல்ல. ஆகவே கன்னியாகுமரியில் தேர்தலை நிறுத்தி வைத்து, முதலில் ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு பஞ்சாயத்து அமைத்து, தமிழ்நாட்டில் மற்ற ஜில்லாக்களில் இருப்பதுபோல் ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒரு பஞ்சாயத்தை ஏற்படுத்தி, பஞ்சாயத்துத் தலைவர்கள் யூனியன் மெம்பராக வருவதற்கு ஏற்பாடு செய்து விட்டால் அவர்களுக்குத் திருப்தியாக இருக்கும் என்று இன்று காலையில் தமிழ்நாடு

பஞ்சாயத்து யூனியன்கள் சங்க நிர்வாகக்குழு கூட்டத்தில் கன்னியாகுமரி ஜில்லாவிலுள்ள பஞ்சாயத்து யூனியன்கள் தலைவர்கள் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். அதை கனம் அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன்.

அதோடு டிசம்பரில் பஞ்சாயத்துத் தேர்தலை நடத்தவேண்டும என்று கனம் அமைச்சரவர்கள் பல இடங்களில் சொல்லியிருக் கிறார்கள். அசெம்பிளியிலும் பேசியிருப்பதாகப் பத்திரிக்கையில் பார்த்தேன். தேர்தலை சீக்கிரம் நடத்திவிடுவது நல்லதுதான். ஆனால் அறைகுறையாக விஷயங்களை வைத்துக் கொண்டு தேர்தலை நடத்துவதைக் காட்டிலும், இரண்டு மாதங்கள் பொறுத்து நடத்துவது நல்லது. டிசம்பர்-ஜனவரி அறுவடை காலம். இந்த நேரத் தில் தேர்தல் வைப்பது தவறு. பிப்ரவரி மாதத்தில் வைத்துக் கொண்டால் நல்லது. அதோடு பல பெரிய கிராமங்களில், மதுரை ஜில்லாவில் பெரிய குளத்தை எடுத்துக்கொண்டால், ஒவ்வொரு பஞ்சாயத்திலும் 6 ஆயிரம், 10 ஆயிரம் ஜனத்தொகை. நான்கு, 5 கிராமங்களைச் சேர்த்து ஒரு பஞ்சாயத்து ஏற்படுத்தப்பட்டிருக் கிறது. ஒரு கிராமத்துக்கும், இன்னொரு கிராமத்துக்கும் இடையே 3 மைல் தூரம். அவைகளைப் பிரித்து, 2 மைல், 3 மைல் அப்பால் இருக்கிற கிராமங்களுக்கு தனித்தனி பஞ்சாயத்துக்களை ஏற்படுத்தி, Bifurcation -ஐ அமைதியான முறையில் செய்து முடித்து, பஞ்சாயத்துக்களை ஏற்படுத்திய பிறபாடு பிப்ரவரி மாதத் தில் தேர்தலை நடத்தினால், அது வசதியாக இருக்கும். ஜனங்களுக் கும் கஷ்டம் இருக்காது. டிசம்பர், ஜனவரி மாதம் நஞ்செய், புஞ் செய் அறுவடை காலமாகும். ஆகையினால், பிப்ரவரி மாதத்தில் பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்தி, ஏப்ரல் 1-ம் தேதி புதிய நிதி ஆண்டு ஆரம்பத்தில் பஞ்சாயத்து யூனியன் தேர்தலை நடத்திவிட லாம். அதிலிருந்து பஞ்சாயத்து யூனியன் செயல்படலாம். ஆகவே பிப்ரவரி மாதத்தில் இந்தத் தேர்தலை வைத்துக்கொள்ளவேண்டு மென்ற யோசனையை தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன் சார்பாக தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, ஒரு பஞ்சாயத்து யூனியனுக்குள் 10 பஞ்சாயத்துக்களும், ஒரு Township-ம் இருந்தால், அந்த டவுன் ஷிப்பிலிருந்து ஒரு Non-official மெம்பராக தேர்ந்தெடுக்கப் பட்டு, மற்ற பஞ்சாயத்து போர்டுகளிலிருந்து தலைவர்கள் யூனியன் மெம்பர்களாக வருவது போல், வருவார் என்று இருக்கிறது. ஆனால் அடுத்த Clause-ல் ஒரு டவுன்ஷிப் மட்டும் யூனியனுக இருந்தால், Chairman யூனியனுக்கு Township Chairman -ஆக இருப்பார் என்று சொல்லப்பட்டிருக்கிறது. நியாயம் பார்ப்பதற்கு நன்றாக இருக்கிறது. ஆனால் ஜனநாயக நியதியில் நல்லது அல்ல. Township-க்கு சேர்மனாக இருப்பவர் ஜில்லா கலெக்டர். ஜில்லா கலெக்டரே பஞ்சாயத்து யூனியன் தலைவர் என்பது சரியாகாது. டவுன்ஷிப்புக்கு Non-official -ஐத் தலைவராக வாச்செய்து. அந்த Non-official பஞ்சாயத்து யூனியனுக்குத் தலைவராக இருந்தால் நல்லதாக இருக்கும். எப்போது Township ஆகப் போகிறது. அப்போது அதன் தலைவராக ஜில்லா கலெக்டர்

டவுன்ஷிப்புக்குத் தலைவராக, இருப்பவர், யூனியனுக்கும் தலைவராக இருப்பார். இது நல்லது அல்ல. இப்படி உத்தி யோகஸ்தர்களை ஒவ்வொரு ஸ்தாபனத்துக்கும் தலைவராக வைத்துக்கொண்டு இருப்பதைக் காட்டிலும் Non-official -ஐத் தலைவராகப் போட வேண்டும் என்று அரசாங்கத்துக்கு யோசனை சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன். இதை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, முதல் சுயாட்சி ஸ்தாபனங்கள், அண்ணல் காந்தி அடிகள் சொன்ன மாதிரியும், அரசியல் சட்டத்தில் சொன்ன மாதிரியும், பஞ்சாயத்து நிர்வாகம் வளர்ச்சியடைந்து வருகிறது. இவற்றில் அனுபவம் பெற்று, பஞ்சாயத்து போர்டு தலைவராகவும் மெம்பராகவும், பஞ்சாயத்து யூனியன் தலைவராகவும் வரக் கூடியவர்கள். பின்னால் இந்த மாநிலத்துக்குக்கூட முதல் அமைச்சராக வரக்கூடிய ஆற்றல் படைத்தவர்களாக வருவார்கள். அப்படிப்பட்ட உன்னத ஸ்தானத்தில் இருக்கிறவர்களை, பஞ்சா யத்து யூனியன் தலைவர்களை, அங்கத்தினர்களை மிகவும் தொல்லை படுத்தக்கூடிய உத்திரவுகளை அரசாங்கத்தில் போட்டுக் கொண்டி ருக்கிறார்கள். அந்த மாதிரி உத்திரவு போடுவது அமைச்சர் களுக்குத் தெரியாதிருக்கலாம். கீழே இருக்கிற உத்தியோகஸ் தர்கள் சில உத்திரவுகளை அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். உதாரணமாக, பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் 3 மைல், 4 மைல் தூரம் Inspection-க்குப் போய்விட்டுத் திரும்புகிறபோது, ஆபீசு வரையில்தான் ஜீப்பில் திரும்பலாம். வீட்டுக்கு ஜீப்பில் போகக் கூடாது. ஆபீசிலிருந்து வீட்டுக்கு நடந்துதான் போகவேண்டும் என்று உத்திரவு போட்டிருக்கிறார்கள். இப்படி சர்க்கார் போடு கின்ற உத்திரவு அவர்களைப் புண்படுத்துவதாக இருக்கிறது. இது நல்லது அல்ல.

பஞ்சாயத்து போர்டு, பஞ்சாயத்து யூனியன் இவைகள் தமிழ் நாட்டில் எவ்வளவு கிறமையாக செயல்படுகின்றன என்று பல பேருக்குத் தெரியாது. இவ்றைக்கு இந்தியாவிலே தமிழ்நாட்டில் பஞ்சாயத்து போர்டுகளும், பஞ்சாயத்து யூனியன்களும் திறமை யாக நடக்கிற மாதிரி, வேறு எந்த மாகாணத்திலும் நடக்கவில்லை. அவ்வளவு நல்ல முறையில் சட்டம் அமைக்கப்பட்டிருக்கிறது. விதிகள் போடப்பட்டிருக்கின்றன. வெகு நன்றாக பஞ்சாயத் துக்கள் தமிழ்நாட்டில் நடைபெற்று வருகின்றன என்று பல மாகாணங்களில் சொல்லுகிறார்கள். நான் அகில இந்திய பஞ்சாயத்து Consultative Council-ல் ஒரு மெம்பர். போன மாதம் நடந்த அந்த Consultative Council கூட்டத்துக்கு நான் போயிருந்தேன். அங்கே மற்ற மாகாணங்களிலிருந்து வருகிற பிரதிநிதிகளும், பஞ்சாயத்து நிர்வாகம் எப்படி நடந்து கொண்டிருக்கிறது என்று சொல்லியதையும் கேட்டபோது, நம்முடைய மாகாணத்தில் வெகு தெளிவாக எல்லாம் விதிகளும் போடப்பட்டு, பஞ்சாயத்துகள் நன்றாக நடைபெறுவதைக் காண்கிறோம். இந்த மாதிரி விதிகள் அடிக்கடி போடுகிறபோது, பிரச்சினைகள் வருகின்றன. ஆகவே இதற்கு ஒரு நிரந்தரமான Consultative Council அசெம்பிளி மெம்பர்கள், Council மெம்பர்கள்,

[திரு. கே. ராஜாராம்] [28th July 1964

பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள், பஞ்சாயத்துத் தலைவர்கள் இவர்களில் 20 பேரைக்கொண்டு ஒரு Consultative Council நிரந்தரமாக இருக்க வேண்டும். இப்போது Consultative Council போட்டிருக்கிறோம். அது மூன்று மாதத்துக்கு ஒரு தடவை கூடுகிறது. Effective-ஆகச் செயல்படவில்லை. நானும் மதுரை ஜில்லா சார்பாக அதில் ஒரு மெம்பராக இருந்தேன். அந்த அனுபவத்தின் பேரில்தான் சொல்லுகிறேன். நிரந்தரமாக ஒரு Consultative Council இருக்க வேண்டும். அது சட்ட சபைக்கு உதவியாக, அடிக்கடி பல பிரச்னைகள் வராமல் பார்த்துக்கொண்டு, யோசனை சொல்ல வசதியாக இருக்கும் என்று சொல்லிக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, சில பஞ்சாயத்துத் தலைவர்கள் அடுத்த பஞ்சாயத்தில் போய் Contract எடுக்கிறார். இவர் இன்னொரு பஞ்சாயத்துத் தலைவருக்கு Contract கொடுப்பார். அந்த பஞ்சாயத்து தலைவர் இவருக்குக் கொடுப்பார். இதைத்தான் கனம் அங்கத்தினர் திரு. வி. கே. ராமசாமி முதலியார் அவர்கள் கண்டித்தார்கள். அதைப் போக்க இருந்தத் திருத்தத்தில் வழி செய்திருக்கிற அமைச்சரையும் அரசாங்கத்தையும் நான் பாராட்டுகிறேன். இனிமேல், அந்தமாதிரி குறைகள் எல்லாம் போக்கப்படும் என்று கருதுகிறேன்.

ஒரு யூனியனிலே அங்கத்தினராக இருக்கிறவர் அடுத்த யூனியனிலே போய் Contract எடுக்க முடியாது. ஒரு பஞ்சாயத்திலே இருக்கிறவர் இன்னொரு பஞ்சாயத்திலே போய் எடுக்க முடியாது.

5-00 p.m. அடுத்தபடியாக, குலியல் முறை ஓட்டு தேர்தல் நடத்துவதற்கு வசதியாகத்தான் இப்போது ஒவ்வொரு சிற்றாயையும் ஒவ்வொரு hamlet -ஐயும் ஒரு வார்டாக ஆக்கி 3, 4 மெம்பர்களாக போட்டு குலியல் முறையில் ஓட்டுப்போட வைக்கிறோம். குலியல் ஓட்டு முறை கூடாதென்று அகில இந்திய காங்கிரஸ் முடிவு செய்திருக்கிறது. காங்கிரஸ் ஸ்தாபனம் அதை ஆட்சேபிக்கிறது. முஸ்லிம் லீக் அதை வேண்டுமென்கிறது. முகமது இஸ்மாயில் சாயபுதான் அதைக் கேட்டுக் கொண்டே இருக்கிறார் பல வருஷமாக, அந்த முறையைக் கிராமங்களிலே வைத்திருப்பது சரியல்ல. ஒரு மனிதனுக்கு 3, 4 ஓட்டுகள் உண்டென்றால் அவையத்தலையையும் ஒருவருக்கே போட்டுவிடலாம். 100 பேர் சேர்ந்து ஒரு ஆளைத் தேர்ந்தெடுத்து விடலாம். warasta Rule (Nomination) தம் கிராமங்களிலே வைத்திருக்கிறோம்.

அடுத்தபடி, தமிழ்நாடு பஞ்சாயத்து யூனியன்தான் கேட்டுக் கொண்டது. ரகசிய ஓட்டு முறை வைக்க வேண்டுமென்று. அது கொஞ்சம் செலவாகும் என்று சொல்லிக் கொண்டிருந்த அரசாங்கம் தற்போது எல்லா இடங்களிலேயும் ரகசிய ஓட்டு முறை நடத்த ஒப்புக்கொண்டது. ஆனால் இந்தக் குலியல் முறையை நிறுத்தி, ஒரு வார்டுக்கு ஒரு மெம்பர் என்று அசெம்பிளி மாதிரி பஞ்சாயத்திலேயும் ஒரு வார்டுக்கு ஒரு மெம்பர் என்ற முறையில் திருத்திக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன்.

28th July 1964] [திரு. கே. ராஜாராம்]

இதெல்லாம் சின்ன சின்ன விஷயம்தான். அரசாங்கம் மனது வைத்தால் இதை எல்லாம் தேர்தலுக்கு முன்னாலேயே முடித்து விடலாம். இதை எல்லாம் செய்யும்படியாகக் கேட்டுக்கொண்டு இந்த மசோதாவை நான் ஆதரிக்கிறேன்.

திரு. க. அன்பழகன்: சட்ட மன்றத் தலைவரவர்களே, பஞ்சாயத்துச் சட்டத்தை ஓரளவு திருத்துவதற்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்ற இந்த மசோதாவைப் பொது வகையிலே நான் வரவேற்கிறேன். பொது வகையிலே வரவேற்பதற்குக் காரணம் கனம் ராஜாராம் அவர்கள் எடுத்துச் சொன்னது போல் எப்போதோ கொண்டு வரப்பட வேண்டிய இந்தச் சட்டம் இப்போதாவது கொண்டு வரப்படுவதுதான். பஞ்சாயத்துத் தேர்தல்களை நடத்துவதற்கு அரசாங்கம் திட்டமிடுமுன் அவர்களுக்கு நான் இதனை வற்புறுத்துகிறேன். பல பகுதிகளுக்கு இந்தப் பஞ்சாயத்துச் சட்டத்தை அறிமுகப்படுத்திக் கொண்டு வருவதற்கு இந்தத் திருத்தம் தேவைப்படுகிற காரணத்தால் இந்தச் சட்டத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் இந்தச் சட்டம் கொண்டுவருகிற நோக்கில் இன்றைய தினம் நடைபெற்று வருகின்ற பஞ்சாயத்துத் தேர்தல் முறை அப்படியே நீடிக்கப்படும் என்பதற்கான முறைகள் இங்கே வகுக்கப்பட்டிருக்கின்றனவே தவிர, ஏற்கெனவே பஞ்சாயத்துச் சட்டம் கொண்டுவரப்பட்ட காலத்தில் அளிக்கப்பட்ட உறுதி மொழிகளுக்கு ஏற்ப, இப்போது எந்தத் திருத்தத்தையும் புதிதாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பது வருந்தத்தக்கதாகும். ஆளும் கட்சி கொரடாவாக இருக்கிற ரயர்கிரு. ராஜாராம் அவர்கள் இங்கே எடுத்துச் சொன்னார்கள். நேரடித் தேர்தல் முறை அவர்களாலேயே வற்புறுத்தப்படுகிறது. பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் சங்கத்தின் சார்பிலே நாங்கள் வற்புறுத்துகிறோம் என்று சொன்னார்கள். இந்த நேரடித் தேர்தல் முறையைத்தான் 1958-வது ஆண்டிலே, இந்தப் பஞ்சாயத்து சட்டம் கொண்டுவரப்பட்ட நேரத்தில், அப்போது அமைச்சராக இருந்த திரு. வி. கப்பிரமணியம் அவர்கள் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். பின்னால் நேரடித் தேர்தல் முறை அப்போதுள்ள நிலையில் உடனடியாக நடத்தப்பட முடியாதென்று ஐயம் ஏற்பட்டு, நேரடித் தேர்தல் முறையில் பஞ்சாயத்து யூனியன் தலைவர்கள் தேர்ந்தெடுக்கப்படாமல் பஞ்சாயத்துத் தலைவர்களே கூடி தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம் என்று கருதி பின்னால் இரண்டாவதாக அது ஏற்றுக்கொள்ளப்பட்டது. அப்போதும் பல கருத்து மாறுபாடுகள் இருந்தன. ஆனால் அந்தக் கருத்து மாறுபாடுகள் நிலைமைக்கு ஏற்ப ஓரளவு விட்டுத் தரப்பட்டு அப்போது அந்தச் சட்டம் ஒரு முகமாக நிறைவேறியது. அது தற்காலிகமான முறையே தவிர நிரந்தரமான முறையல்ல என்று தெளிவித்தார்கள். இதை அவர்கள் வற்புறுத்தும் போது, அஞ்சாதீர்கள், விரைவிலே பாராளுமன்றத் தேர்தல் மூலமே ஜனநாயகத்தில் பயனைப் பெறமுடியும். அதுவும் பொறுப்பாக இருக்க வேண்டிய தலைவர்களாக இருக்க வேண்டும், என்று தேர்ந்தெடுக்கும் உரிமையை பொது மக்களுக்குத்தான், எதிர்

[திரு. க. அன்பழகன்] [28th July 1964

காலத்திலே விட வேண்டும். அந்த முறையில் இந்தத் தேர்தலை நடத்த முடியாத காரணத்தாலே நடைபெறுகிற தேர்தலுக்கு அந்த மறைமுகமான தேர்தல் முறையை ஏற்றுக் கொள்ளுகிறோமே தவிர, நேரடித் தேர்தல் விரைவிலே ஏற்றுக் கொள்ளப்படும் என்று தெரிவித்தார்கள். ஆனால் இப்போது பார்க்கிறபோது இந்தத் திருத்தச் சட்டம் தற்காலிக முறையாகத்தான் இன்றைக்கு வருகிறதே தவிர, தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளப்பட்ட அந்த முறையைக் கைவிட்டு, நிரந்தரமாகத் தேவைப்படுகிற ஜனநாயக முறையிலே மக்களே தங்கள் தலைவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளக்கூடிய வகையிலே இந்தச் சட்டம் வரவில்லை. அப்படி தேர்தல் நடத்துவது கஷ்டம் என்றால், அது ஜனநாயகத்திலே ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய ஒரு பொறுப்பைத் தட்டிக் கழிப்பதாகுமே தவிர நியாயமாகாது. மறைமுகத் தேர்தலிலே ஏற்படுகிற விளைவு நமக்கு நன்றாகத் தெரியும். பொது மக்களிடத்திலே செல்வாக்கில்லாத ஒருவர், தன்னிடத்திலே பண வசதி இருக்குமானால், அல்லது வேறு விதமான சில வசதிகளும் சந்தர்ப்பமும் இருக்குமானால், அதன்மூல் தலைவராகி விடுவார். அதனால் உறுப்பினர்கள் அவர்களுடைய மானம் மரியாதையை இழக்கவேண்டிய அளவுக்கு சீரழிக்கிறார்கள். இடம் விட்டு இடம் தூக்கி செல்லப்படுகிற அளவுக்கு, ஒரு கட்சியை இன்னொரு கட்சி தாக்குகிற அளவுக்கு, இதனால் பல குறைகள் ஏற்படுகின்றன.

இன்று ஒரு பஞ்சாயத்துக்குத் தேவையான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு ஒரு நாள் குறிப்பிடப்பட்டு தேர்தல் நடத்துவதற்கு, அதுவும் உயர்திரு. ராஜாராம் அவர்கள் சொன்னதுபோல் 4, 5 உறுப்பினர்களை ஒரே வட்டத்தில் தேர்தெடுப்பதற்கு, தனித் தனி ஓட்டு முறையில் இல்லாமல் ஓட்டுகள் குவியல் முறையில் அளிக்கப்பட்டு, அது ஏற்றுக்கொள்ளப்படுகிறதானாலும், அந்தத் தேர்தல் நடைபெறுவதற்கு எவ்வளவு முயற்சி தேவையோ எவ்வளவு பணம் செலவாகுமோ, எவ்வளவு நேரம் தேவையோ, அதே நேரத்தில் ஒரே பணச்செலவில் பஞ்சாயத்துத் தலைவர்களைத் தேர்ந்தெடுத்துவிடலாம். அப்படி தேர்ந்தெடுக்கப் படவேண்டும். அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவரும், பஞ்சாயத்து உறுப்பினர்களும் ஒத்துழைக்க மாட்டார்கள் என்று கூறமுடியாது. ஏன் என்றால் அப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பஞ்சாயத்துத் தலைவர் பொதுமக்களுக்கு பதில் சொல்லியாக வேண்டும். அதேபோல் பஞ்சாயத்து உறுப்பினர்களும் பொது மக்களுக்கும் பதில் சொல்லியாக வேண்டும். ஒரு உறுப்பினர் ஒரு தொகுதிக்கு எந்த அளவு பிரதிநிதியாக இருக்கிறாரோ, தலைவரும் அந்த அளவு அந்தப்பகுதி மக்களுடைய வாக்குப் பெற்று வருகிறார். ஆகவே அந்தப் பகுதி மக்களுக்கு இருவரும் பதில் சொல்லியாக வேண்டும். இப்போது மறைமுகத் தேர்தலிலே தான் வாக்களித்தவர் இன்னின்னர், எதிர்த்தவர்கள் இன்னின்னர். அந்த சந்தர்ப்பத்தில் ஓட்டுப் போடாமல் நழுவியவர்கள் யார் என்றெல்லாம் கணக்கெடுத்து, இவருக்கு மட்டும் உதவுவது, அவருக்குக் கூடாது என்ற நிலைமை இப்போதும் இருக்கிறது.

28th July 1964] [திரு. க. அன்பழகன்]

இப்போதும் கட்சி வேறுபாடு இருக்கிறது. இப்போது ஓட்டுப் போட்டவர்கள் பகுதிக்குச் செய்யவேண்டிய காரியத்தைச் செய்து மற்ற பகுதிகளுக்குச் செய்யாமல் இருக்கிற காரணத்தால் மக்களைத் திருப்திபடுத்த முடியவில்லை. மாறுபாட்டை வைத்துக் கொண்டு பொது மக்களுடைய விரோதத்தை அவர்கள் நிச்சயமாகத் தேடிக்கொள்ள மாட்டார்கள். எனவே, ஜனநாயகத்தில் நேரடித் தேர்தல் முறை ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும். நேரடித் தேர்தல் முறை கூடாதென்று சொல்ல ஒரு ஜனநாயக அரசாங்கத்தாலே நாணயமான காரணம் காட்ட முடியாது. இந்த மாதம் முடியாது, சந்தர்ப்பம் சரி இல்லை என்று சொல்லி "excuse" சொல்லப்படுகிற வகையில், மன்னிப்பு கோருகிற வகையில் பதில் சொல்ல முடியுமே தவிர, நேரடித் தேர்தல் கூடாதென்று சொல்ல முடியாது. மற்றபடி நான் சொல்ல விரும்புவது குலியல் முறை வாக்களிப்பு ஜனநாயகத்துக்கு உற்றதாக இல்லை. நாங்கள் விரும்புகிற ஒருவர் எப்படியாவது தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்ற நிலையைத்தான் பார்க்கிறோம். குலியல் முறை மாற்றியமைக்கப்பட வேண்டும்.

